விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 20 திங்கட்கிழமை (04.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 075

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# தமிழ் மக்களுக்கு நீதி கேட்டு மார்ச் 16 மக்கள் எழுச்சிப் பேரணி

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு 23

# கத்தோலிக்க மதகுரு முன்னிலையில் சிவராத்திரி வளைவு உடைக்கப்பட்டது

## திருக்கேதீஸ்வரத்தில் நேற்று அடாவடி

(மன்னார்)

மன்னார் திருக்கேதீஸ்வரம் சிவன் ஆலயத்திற்கு செல்லும் வீதியில் மாந்தைப் பகுதியில் அமைக்கப்பட்ட சிவராத்திரி வளைவு உள்ளூர் கிறிஸ்தவ சமயத்தவர் சிலரால் நேற்று அடாவடியாக உடைக்கப்பட்டது. (23ஆம் பக்கம் பார்க்க)



## புதிய அரசியலமைப்பை எதிர்க்க வேண்டும் – கஜேந்திரகுமார்

(யாழ்ப்பாணம்)

புதிய அரசியலமைப்புக்கான முயற்சியை தமிழ்த் தேசம் ஒன்றிணைந்து நிராகரிக்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வேண்டுகோள் விடுத்துள்ளார். 23

## நாளைய பட்ஜெட்டில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு

(கொழும்பு)

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் அரச துறை ஊழியர்களுக்கான சம்பளத்துடன் சிறப்புக் கொடுப்பனவு ஒன்று இணைக்கப்படும் என்று நிதி அமைச்சுத் தெரிவித்துள்ளது. 23

## மட்டுவில் தெற்கில் வாள்வெட்டு; ஒரே குடும்பத்தில் மூவர் படுகாயம்

### கொக்குவில் சம்பவத்தின் பழிவாங்கலா என பொலிஸார் விசாரணை

(சாவகச்சேரி)

தென்மராட்சி மட்டுவில் தெற்கு சாவகச்சேரிப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 10.30 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய்தந்தை மற்றும் 24



## உரும்பிராயில் விபத்து இளைஞன் படுகாயம்

(உரும்பிராய்)

மோட்டார் சைக்கிளில் வேகமாக பயணித்த இளைஞன் ஒருவன் வீதி சமிக்ஞை கம்பத்துடன் மோதுண்டு படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 6.20 மணியளவில் பலாலி வீதி உரும்பிராய் சந்திக்கு 24

## வெள்ளை நிற வான் கூட அப்போது எம்மிடமில்லை



என்கிறார் கோத்தபாய

(கொழும்பு)

வெள்ளை வான் கலாசாரம் மூலம் பயங்கரவாத செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதாக கூறுவதில் உண்மையில்லை. 23

## 11 தமிழர் கடத்தல் வழக்கு ட்ரயல் அட்பார் முன் வருகிறது

(கொழும்பு)

முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட உள்ளிட்ட கடற்படை அதிகாரிகளுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள 11 தமிழர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட குற்றச்சாட்டு வழக்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய சிறப்பு தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் நடத்த சட்ட மா அதிபர் திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இந்த வழக்கை அறங்கூறும் சபை (ஜூரி) முன்னிலை 23

## பிறந்து 50 நாளான குழந்தை உயிரிழந்தது

(யாழ்ப்பாணம்)

பிறந்து 50 நாளான பச்சிளம் குழந்தை ஒன்று யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் இளவாலையைச் சேர்ந்த 24

## மகிந்தவின் படம் போதும் வேறு தலைமை தேவையில்லை

### மைத்திரி அணிக்கு விமல் எச்சரிக்கை

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரத்தை நீக்கவும், புதிய அரசியல் அமைப்பின் மூலமாக நாட்டினை பிளவுபடுத்தவும் எமது தலைமைகள் செயற்படுமென்றால் நான் இந்த அணியில் இருந்து வெளியேறுவேன் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்தார். 23

## பலாலியில் சர்வதேச விமான நிலையம் அரசின் புளுகு என்கிறார் மகிந்த

(கொழும்பு)

இந்தியாவின் உதவியுடன் பலாலி விமான நிலையத்தை, சர்வதேச விமான நிலையமாக, புனரமைக்கவுள்ளதாக அரசாங்கம் போலியான தகவல்களை வெளியிட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அநுராதபுரத்தில் வர்த்தக சமூகத்தினரை சந்தித்து கலந்துரையாடல்களை நடத்திய சந்தர்ப்பத்திலேயே அவர் 23



# இ.போ.ச.பஸ் மீது கல்வீச்சு



பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச்சபையின் பருத்தித்துறைச் சாலைக்குச் சொந்தமான பேருந்து மீது நேற்று இரவு 8.30 மணியளவில் வரணிச் சந்தையடிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரினால் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் பேருந்தின் சாரதிக்கு கண்ணில் காயம் ஏற்பட்டு வரணி பிரதேச வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்து நொறுங்கியுள்ளது. தெய்வாதீனமாக பயணிகளுக்கு எவ்வித காயமும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பேருந்து நிலையத்திலிருந்து பருத்தித்துறை சாலை நோக்கிச் சென்ற பேருந்து மீதே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-103)

# மல்லாவியில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

மல்லாவி - எருவில் பகுதியில், உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் எருவில் - நட்டாங்கண்டல் பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடையவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-3)

# யாழிலிருந்து கற்றாளை செடிகளை கடத்த முயற்சி!

(மண்டைதீவு)

யாழ்ப்பாணம், தீவகப் பகுதியில் கற்றாழைச் செடிகளை சட்டவிரோதமாகக் கடத்திய தென்னிலங்கை வியாபாரிகள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த தென்னிலங்கை வியாபாரிகள் மண்டைதீவு சந்தியில் வைத்து நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் கைது செய்யப்பட்டதாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், புங்குடுதீவு பகுதியில் உள்ள கற்றாளைத் தோட்டங்களுக்குள் புகுந்த தென்னிலங்கை வியாபாரிகள் அங்கிருந்த பயிர்களை களவாக பிடுங்கி வாகனத்தில் ஏற்றி வந்துள்ளனர்.

இதனை அவதானித்த அப்பகுதி இளைஞர்கள் குறித்த வாகனத்தை மறிக்க முற்பட்ட போது சந்தேக நபர்கள் தப்பித்துள்ளனர்.

இதனால் உடனடியாக பொலிஸாருக்கு தகவல் வழங்கப் பட்டு மண்டைதீவு சந்தியில் வைத்து இருவரும் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய உபபொலிஸ் பரிசோதகர் விவேகாந்த் தலைமையிலான பொலிஸாரே இந்த கைது நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் மேற்கொண்டுள்ளதுடன், சந்தேக நபர்கள் பயன்படுத்திய வாகனத்தினையும் நீதிமன்றில் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-3)

# இருவேறு விபத்துக்களில் இருவர் பலி

மன்னார் - யாழ்ப்பாணம் இலுப்பங்கடவை பகுதியிலும் மற்றும் நீர்கொழும்பு, கொப்பரா சந்தியிலும் ஏற்பட்ட இருவேறு வாகன விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் - யாழ்ப்பாணம் இலுப்பங்கடவை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில் பலத்த காயமடைந்த நபர் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் முழங்காவில் வைத்தியசாலையில் இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையில் இலுப்பங்கடவை பகுதியைச் சேர்ந்த 51 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இதேவேளை நீர்கொழும்பு, கொப்பரா சந்தியில் லொறி ஒன்றுடன் மோதி 65 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் லொறிச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (மு-3)

PHYSICS
Paper Classes
(7741)
குறுகிய பாடக்குறிப்புகளுடன் கடந்த கால வினாக்களை உள்ளடக்கிய துரித மீட்டல்
திங்/புதன்/சனி 4-6 PM
ஒளியியல் - 10 இலத்திரனியல் - 8
வெப்பவியல் - 20 சடத்தின் பொறியியல்
மின்புலம் - 10 இயல்புகள் - 7
ஓட்ட மின்னியல் - 15 சடமும் கதிர்ப்பும் - 7
மொத்தம் 77 வகுப்புகள்
Mr.C.Thivyan B.Sc.,PGDE (யாழ்.தேசிய பாடசாலை ஆசிரியர்)
கோலாசிற்றி 234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 077 843 5224

# மோ.சைக்கிள் வாகன விபத்தில் இளைஞன் தலையில் படுகாயம்

சாவகச்சேரி - சங்கத்தானைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை மதியம் இரண்டு மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - மகேந்திரா வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் தலையில் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரி - சங்கத்தானைப் பகுதியைச் சேர்ந்த 29 வயதான கு.சுஜீவன் என்ற இளைஞனே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (மு-30)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 04 - 04 - 1957

ஆண்டவன் அடியில் 15 - 03 - 2018

அமரர்

**அருந்திராதேவி சிவசுப்பிரமணியம் (சித்திரா)**

ஆண்டு ஒன்று ஆகியே சென்றதம்மா
ஆனாலும் உம் நினைவு அகலவே இல்லையம்மா
வாழ்ந்த நாளில் எமை வாஞ்சையுடன் சீராட்டி
வாழ்க்கைக் கல்விதனை வளமாகக் கற்றுத் தந்தீர்
ஆண்டவனும் உம்மை விரும்பியோ அழைத்தானோ
மீளாத் துயரில் தவிக்கின்றோம் துடிக்கின்றோம்

அன்னாரின் இல்லத்தில் இன்று (04.03.2019) நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர். (7729) குடும்பத்தினர்

# 7 வயது சிறுமி துஷ்பிரயோகம் 14,15 வயது சிறுவர்கள் கைது

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளதாக யாழ்.சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, குறித்த சிறுமியின் வீட்டின் அருகிலுள்ள ஆலயச் சூழலில் பல சிறுவர்கள் ஒன்றாகச் சேர்ந்து விளையாடி வருவதாகவும் இதனைச் சாதகமாகப் பயன்படுத்திய சிறுவர் சிலர் குறித்த சிறுமியுடன் தவறான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சிறுமி தான் கல்வி கற்கும் பாடசாலையில் வெளிப்படுத்திய தவறான செயற்பாட்டினை அவதானித்த ஆசிரியர் சிறுமியின் பெற்றோரை அழைத்து விசாரித்தபோதே குறித்த சிறுமி தன் பெற்றோரிடம் நடந்தவற்றைத் தெரிவித்துள்ளார்.

இதனை அறிந்து குறித்த சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து குறித்த சிறுமி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வைத்தியசாலையில் மருத்துவ சோதனைக்கு உட்படுத்தப்பட்ட சிறுமி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (மு-10)

மணமகள் தேவை
1960ல் பிறந்த திருவோண நட்சத்திரம்
அரச உத்தியோகம் பார்க்கும்
மணமகனுக்கு பொருத்தமான
மணமகள் தேவை.
காணிகள் விற்க வாங்க
தொடர்பு கொள்ளலாம் (7737)
077 714 6254
Viber - 077 514 8250

கண்ணீர் அஞ்சலி

(C-5682)



தோற்றம்: 20-12-1931 மறைவு: 02.03.2019

J/384 பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி **வ.சுகந்தினி** அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்

**கந்தசாமி பாலசிங்கம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவுத் துயருடன்... பிரதேச செயலாளரும்
அனைத்து உத்தியோகத்தர்களும்
ஊழியர் நலன்புரிச் சங்கம்
பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

## மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள்

# பொறுப்புக் கூறுவதை உறுதிப்படுத்த வேண்டும்

## இலங்கை அரசிடம் ஐ.நா. அறிக்கையாளர் வலியுறுத்து




(ஜெனிவா)

மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள், தமது நடவடிக்கைகளுக்குப் பொறுப்புக்கூறுவதை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்று ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர் வலியுறுத்தியுள்ளார். தீவிரவாத முறியடிப்பின் போது, மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரத்தையும் பாதுகாத்தல் தொடர்பான ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர், பியோனில்லா நி அலெய்ன் ஜெனிவாவில் நேற்று முன்தினம் உரையாற்றிய போது இதனைத் தெரிவித்துள்ளார்.

'மோசமான மனித உரிமை கரிசனைகளுக்கு நிலையான தீர்வைக் காணும், முக்கியமான வாய்ப்பு இலங்கை அரசாங்கத்துக்கு உள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீளாய்வு செய்து அதனை இல்லாமல் செய்யவும், புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வர இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை பாராட்டுக்குரியது.

புதிய சட்டம் உரிமைகளை நடைமுறையில் பாதுகாக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கத்திடம் எடுத்துக் கூறியுள்ளேன்.

பாதுகாப்புத் துறை மறுசீரமைப்பு குறித்தும் கவனத்தில் கொண்டு வந்துள்ளேன். முழுமையான சிவில் அதிகாரிகளின் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை குறித்தும், எல்லா சிறுபான்மைக் குழுக்களும் பிரதிநிதித்துவம் செய்யப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளேன்.

அத்துடன், நியாயமான, ஆய்வு செயன்முறைகளின் ஊடாக, மோசமான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள், தமது நடவடிக்கைகளுக்காகப் பொறுப்புக் கூற வேண்டும்.

எனது பணியகம் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இதற்கான பணிகளை முன்னெடுக்க எதிர்பார்த்திருக்கிறது. தொழில்நுட்ப உதவிகளும் இலங்கைக்கு தொடர்ந்து வழங்கப்படும்" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 'ஜே.வி.பியின் நோக்கத்திற்கு மகிந்த துணைபோகமாட்டார்'



## ரோஹித நம்பிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சிக்கு வலுச்சேர்க்கும் வகையிலேயே மக்கள் விடுதலை முன்னணி தற்போது 20 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்கின்றது என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நிச்சயம் நீக்க வேண்டும். ஆனால் அதற்கான சூழல் இதுவல்ல. முதலில் நாட்டில் நிலையான அரசாங்கம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். இதன் பிறகே தற்போது குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் அனைத்தும் நிறைவேற்றப்படும்.

எனவே மக்கள் விடுதலை முன்னணியின் நோக்கங்களுக்கு எதிர்க்கட்சி தலைவர் மகிந்த ராஜபக்ஷ துணைபோக மாட்டார் என்ற நம்பிக்கையுள்ளது எனவும் ரோஹித மேலும் தெரிவித்தார். (இ-7)

# ஏழுமலையானை தரிசித்தார் ரணில்







(திருப்பதி)

இந்தியா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை திருப்பதி சென்று ஏழுமலையானை தரிசித்தார்.

இந்த தரிசனத்துக்காக நேற்று முன்தினம் மாலை திருப்பதிக்கு சென்ற பிரதமர், அவரது பாரியார் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் நேற்று அதிகாலை சுப்ரபாத சேவையில் ஏழுமலையானை தரிசித்தார்.

நேற்று அதிகாலை சுவாமி தரிசனத்திற்காக ஏழுமலையான் ஆலய முன் வாசல் வழியாக சென்ற அவரை தேவஸ்தான நிர்வாக அதிகாரி அனில்குமார் சிங்கால், இணை நிர்வாக அதிகாரி சீனிவாசராஜு ஆகியோர் வரவேற்று அழைத்து சென்றனர்.

சுப்ரபாத சேவையில் கலந்து கொண்டு ஏழு மலையானை தரிசிக்க அவருக்கு கோவிலிலுள்ள ரங்கநாயக மண்டபத்தில் தேவஸ்தான உயர் அதிகாரிகள் தீர்த்த பிரசாதங்களை வழங்கி னர்.

தொடர்ந்து தேவஸ்தான வேத பண்டிதர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அவரது பாரியாருக்கும் ஆசி வழங்கினர். (இ-7)



# தாஹிர் 'மூன்று' டு பிளசி 'நூறு' தெ.ஆ 'ஜோரு'

இலங்கைக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் அணித் தலைவர் டு பிளசி சதம் கடந்து கைகொடுக்க தென்னாபிரிக்க அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

தென்னாபிரிக்கா - இலங்கை அணிகள் மோதிய முதல் ஒருநாள் போட்டி ஜொகனஸ்பேர்க் நகரில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் டு பிளசி களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இலங்கை அணிக்கு நிகிடி தொல்லை கொடுத்தார். இவரது 'வேகத்தில்' நிரோஷன் டிக்வெல (8), உபுல் தரங்க (9) அவுட்டாகினர். இம்ரான் தாகிர் 'சுழலில்' குசல் பெரேரா (33), தனஞ்செய டி சில்வா (39) சிக்கினர். ஒஷாட பெர்னாண்டோ (49) 'ரன்-அவுட்' ஆனார். பொறுப்பாக ஆடிய குசல் மெண்டிஸ் (60) அரைச்சதம் கடந்தார்.

மற்றவர்கள் ஏமாற்ற இலங்கை அணி 47 ஓவர்களில், அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 231 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. விஷ்வா பெர்னாண்டோ (1) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பில் நிகிடி, இம்ரான் தாகிர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**டு பிளசி அபாரம்**

எட்டக்கூடிய இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு ரீஜா ஹென்டிரிக்ஸ் (1) ஏமாற்றினார். பின் இணைந்த குயின்ரன் டி கொக், அணித் தலைவர் டு பிளசி ஜோடி இலங்கை அணி பந்துவீச்சை அடித்து நொருக்கியது.

குயின்டன் டி கொக் அரைச்சதம் கடந்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக 136 ஓட்டங்கள் சேர்த்தபோது குயின்ரன் (81) ஆட்டமிழந்தார். அபாரமாக ஆடிய டு பிளசி சதத்தை பதிவு செய்தார்.

தென்னாபிரிக்கா அணி 38.5 ஓவர்களில் 2 விக் கெட் டுக்கு 232 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. டு பிளசி (112), வான் டெர் துசன் (32) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதனையடுத்து 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் தென்னாபிரிக்க அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இரண்டாவது போட்டி செஞ்சுரியனில் எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாகிறது.



இம்ரான் தாஹிர்

# நியூசி., இன்னிங்ஸ் வெற்றி



5 விக்கெட்டுக்களை கைப்பற்றி பங்களாதேஷை நொருங்கடித்த போல்ட் விக்கெட் ஒன்றை வேட்டையாடிய ஆர்ப்பரிப்பின்போது...

பங்களாதேசுக்கு எதிரான முதல் டெஸ்டில் அசத்திய நியூசிலாந்து அணி இன் னிங்ஸ் மற்றும் 52 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகள் மோதிய முதல் டெஸ்ட் ஹமில்டனில் நடந்தது.

முதல் இன்னிங்சில் பங்களாதேஷ் 234, நியூசிலாந்து 715/6 ('டிக்ளேர்') ஓட்டங்கள் எடுத்தன. பின், 2வது இன்னிங்சை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி, 3ஆம்நாள்நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 174 ஓட்டங்களை எடுத்திருந்தது. சௌமியா சர்கார் (39), மகமதுல்லா (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**இரண்டு 'சதம்'**

நான்காம் நாள் ஆட்டத்தில் 2ஆவது இன்னிங்சை தொடர்ந்த பங்களாதேஷ் அணியின் சௌமியா சர்கார், அணித் தலைவர் மகமதுல்லா, நியூசிலாந்து பந்துவீச்சை எளிதாக சமாளித்து சதம் கடந்தனர். ஐந்தாவது விக்கெட்டுக்காக 235 ஓட்டங்களைச் சேர்த்தபோது போல்ட் 'வேகத்தில்' சௌமியா சர்கார் (149) போல்டானார். தொடர்ந்து அசத்திய போல்ட் பந்தில் லிட்டன் தாஸ் (1), அபு ஜெயத் (3) போல்டாகினர். ரிம் சௌதி பந்தில் மகமதுல்லா (146) 'பெவிலியன்' திரும்பினார். மெகிடி ஹசன் மிராஸ் (1), எபாதத் ஹொசைன் (0) ஏமாற்றினர்.

**நியூசி., முன்னிலை**

இரண்டாவது இன்னிங்சில் பங்களாதேஷ் அணி 429 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து கலீத் அகமட் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பில் போல்ட் 5, சௌதி 3, வோக்னர் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இதனையடுத்து 3 போட்டிகள்கொண்ட டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

ஆட்ட நாயகன் விருதை நியூசிலாந்து அணியின் தலைவர் கேன் வில்லியம்சன் வென்றார்.

இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது டெஸ்ட் வெலிங்டனில் வரும் 8ஆம் திகதி ஆரம்பமாகிறது.

**19 பந்து**

இங்கிலாந்து பந்துவீச்சை குமுறிய கிறிஸ் கெய்ல், 19 பந்துகளில் அரைச்சதமடித்தார். இதன்மூலம் ஒருநாள் போட்டி வரலாற்றில், குறைந்த பந்தில் (19) அரைச்சதமடித்த மே.தீவுகள் வீரரானார். இதற்கு முன், 2010ல் ஆன்டி குவாவில் நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் டரன் சமி 20 பந்துகளில் அரைச்சதமடித்தது சாதனையாக இருந்தது.

◆ ஒட்டுமொத்தமாக தென்னாபிரிக்காவின் டி வில்லியர்ஸ் (எதிர்: மே.தீவுகள், 2015, இடம்: ஜொகனஸ்பேர்க்) 16 பந்தில் இம்மைல்கல்லை எட்டியது உலக சாதனையாக உள்ளது.




**113 ஓட்டங்கள்**

துடுப்பாட்டத்தில் ஏமாற்றிய இங்கிலாந்து அணி, 113 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன்மூலம் ஒருநாள் போட்டி அரங்கில் மே.தீவுகள் அணிக்கு எதிராக தனது குறைந்தபட்ச ஓட்டஎண்ணிக்கையைப் பெற்றது. இதற்கு முன், 1986ல் பிரிட்ஜ்டவுனில் நடந்த போட்டியில் இங்கிலாந்து அணி 114 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது மே.தீவுகளுக்கு எதிராக குறைந்த ஓட்டஎண்ணிக்கையாக இருந்தது.

19 பந்துகளில் அரைச்சதமடித்த உற்சாகத்தில் மே.தீவுகளின் கெயில்

# சிரிப்பு போதும்...

## இது ஷரபோவா பொலிசி

"சொகுசு கப்பல் வாங்கும் எண்ணம் இல்லை. சிரித்தாலே போதும் மனதில் மகிழ்ச்சி உண்டாகும்," என, ரஷ்ய வீராங்கனை ஷரபோவா கூறினார்.

ரஷ்ய டென்னிஸ் நட்சத்திரம் மரியா ஷரபோவா, 31. 'கேரியர்' கிராண்ட்ஸ்லாம் வென்ற (4 கிராண்ட்ஸ்லாம் தொடரிலும் பட்டம்) ஒரே ரஷ்ய வீராங்கனை என்ற பெருமை பெற்றவர். அழகான தோற்றம் கொண்ட இவருக்கு களத்திலும், வெளியிலும் ரசிகர்கள் அதிகம். போர்ப்ஸ் பத்திரிகை வெளியிடும் அதிக வருமானம் பெறும் விளையாட்டு வீராங்கனை பட்டியலில் இடம் பிடித்தவர்.

ஸ்பெயினின் நடால், சுவிட்சர்லாந்தின் பெடரர் போன்ற டென்னிஸ் வீரர்கள் தங்களது சொந்தமான சொகுசு கப்பலில் போட்டி இல்லாத நேரத்தை செலவழிக்கின்றனர். ஆனால், ஷரபோவா மட்டும் வேறு மாதிரியாக இருக்கிறார். கடந்த 2015ல் முன்னாள் காதலர் டிமிட்ரிவுடன் (பல்கேரியா) எவ்வித பந்தாவும் இல்லாமல் வீதியில் உலா வந்தார்.

இது குறித்து ஷரபோவா கூறியது: அதிகமான பிரபலங்கள் தங்களின் பணத்தை சொகுசுக்கப்பலை வாங்குவதில் முதலீடு செய்கின்றனர். நான் சொகுசுக் கப்பலின் ரசிகை இல்லை. இதில் பொழுதை போக்கும் எண்ணமும் கிடையாது. எனக்கு நிலத்தில் வாழ்வதற்குத் தான் விருப்பம். நன்றாக சிரித்தாலே, மனம் முழுவதும் மகிழ்ச்சி உண்டாகும். இதற்கு எவ்வித செலவும் தேவை இல்லை.

**முதல் கார்**

முதல் முதலாக எனக்கு கிடைத்த கார் எனது பணத்தால் வாங்கவில்லை. 'ஸ்பான்சர்' மூலம் கிடைத்தது. எனது குடும்பத்தினருக்காக ஹோண்டா கார் வாங்கினேன். அதிலிருந்த வசதிகளை பார்த்து வியந்து போனேன். தற்போது, அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருக்கிறேன். இங்கு குளிர் வாட்டி வதைக்கிறது. சூடான பானத்தை மட்டும் குடித்து வருகிறேன். 'கிரீன் ரீ' குடிப்பது வித்தியாசமான உணர்வை தருகிறது. இவ்வாறு ஷரபோவா கூறினார்.

# மிரட்டிய தோமஸ் குமுறிய கெயில்

## தொடர் சமனிலையானது

இங்கிலாந்துக்கு எதிரான 5ஆவது ஒருநாள் போட்டியில் ஒஷேன் தோமஸ், கிறிஸ் கெய்ல் கைகொடுக்க, மே.தீவுகள் அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனையடுத்து தொடர் 2-2 என, சமன் ஆனது.

மே.தீவுகள் - இங்கிலாந்து அணிகள் மோதிய 5ஆவது ஒருநாள் போட்டி செயின்ட் லூசியாவில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற மே.தீவுகள் அணித் தலைவர் ஹோல்டர் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

**தோமஸ் அசத்தல்**

இங்கிலாந்து அணிக்கு ஜானி பேர்ஸ்டோவ் (11), அலெக்ஸ் ஹேல்ஸ் (23) சுமாரான ஆரம்பம் வழங்கினர். ஜோ ரூட் (1) ஏமாற்றினார். ஒஷேன் தோமஸ் 'வேகத்தில்' அணித் தலைவர் ஒய்ன் மோர்கன் (18), ஜொஸ் பட்லர் (23), மொயீன் அலி (12), கிறிஸ் வோக்ஸ் (0), ரொம் குர்ரான் (0) ஆட்டமிழந்தனர். பென் ஸ்ரோக்ஸ் (15) நிலைக்கவில்லை. அடில் ரஷித் 'டக்-அவுட்' ஆனார்.

இங்கிலாந்து அணி 28.1 ஓவர்களில் 113 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

மே.தீவுகள் அணி சார்பில் ஒஷேன் தோமஸ் 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

**கெய்ல் விளாசல்**

சுலப இலக்கை விரட்டிய மே.தீவுகள் அணிக்கு ஜோன் கம்ப்பெல் (1) ஏமாற்றினார். சிக்சர், பவுண்டரிகளாக விளாசிய கிறிஸ் கெய்ல், 19 பந்துகளில் அரைச்சதத்தை பதிவு செய்தார். இவர், 27 பந்துகளில் 9 சிக்சர், 5 பவுண்டரி உட்பட 77 ஓட்டங்கள் எடுத்து, மார்க் உட் 'வேகத்தில்' வெளியேறினார். ஷாய் ஹோப் (13) நிலைக்கவில்லை. குர்ரான் பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ஷிம்ரான் ஹெட்மயர் வெற்றியை உறுதி செய்தார்.

மே.தீவுகள் அணி 12.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.


டரன் பிராவோ (7), ஹெட்மயர் (11) அவுட்டாகாமல் இருந்தனர். இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர் 2-2 என்ற கணக்கில் சமனில் முடிய, இரு அணிகளும் கிண்ணத்தை பகிர்ந்து கொண்டன. ஆட்ட நாயகன் விருது ஒஷேன் தோமஸ் (விண்டீஸ்) வென்றார். தொடர் நாயகன் விருதை கிறிஸ் கெய்ல் (விண்டீஸ்) கைப்பற்றினார்.

# தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் மாநாடு யாழில்









(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழ்த் மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மகளிர் மாநாடு நேற்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த மாநாட்டில் தமிழ் கலை,கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் மகளிர் எழுச்சிப் பிரகடனம் வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிறப்புரைகள்,கௌரவிப்புக்கள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள்முன்னணியின் தலைவர் கஜேந்திகுமார் பொன்னம்பலம்,செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ,கட்சி உறுப்பினர்கள்,பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (இ-9)

# இருவர் கொலை; தலைமறைவாகயிருந்த புளுமெண்டால் சங்க இந்தியாவில் கைது

(சென்னை)

'இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக இந்தியாவுக்கு சென்று தலைமறைவாக இருந்து வந்த இரு இலங்கையர்கள் மற்றும் இந்திய பிரஜை ஆகியோர் தமிழகத்தின் தோணிக்கரை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறி, இந்தியாவில் தங்கியிருந்த குற்றச்சாட்டில் இலங்கையர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு பிரதேசத்தை சேர்ந்த 33 வயதான டி.சங்க என்ற சிறிநாத் மற்றும் 28 வயதான சப்ராஸ் மொஹமட் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இலங்கையில் இரண்டுகொலைகளை செய்துவிட்டு, கடந்த டிசெம்பர் மாதம் சட்டவிரோதமாக கடல் வழியாக இந்தியாவுக்கு தப்பி சென்றுள்ளதாக தமிழக புலனாய்வு பிரிவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபட்ட பிரதான குற்றவாளியான புளுமெண்டால் சங்க என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

புளுமெண்டால்சங்க, ஒருவரை சுட்டுக்கொன்ற சம்பவம் தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வரும் நிலையில், இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

சட்டவிரோதமாக இந்தியாவுக்கு சென்ற சங்க அங்கு பதிவு செய்து கொண்டுள்ளதுடன் குமார் என்ற பெயரில் அடையாள அட்டை ஒன்றையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

அந்த அடையாள அட்டையில், அவரது வசிப்பிடம் திண்டுக்கல் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக தமிழக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சங்கவுடன் கைது செய்யப்பட்ட மற்றைய இலங்கையர் கடந்த 2018ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியாவுக்கு சென்று மீண்டும் கடல் வழியாக இலங்கைக்கு வந்து திரும்பியுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர்களுடன் கைது செய்யப்பட்ட இந்திய பிரஜை. இவர்களுக்கு உணவு சமைக்கவும் உதவிகளை செய்யவும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளார்.

சங்க மற்றும் சப்ராஸ் ஆகியோருக்கு உதவியதாக கூறப்படும் காளிதாஸ் என்ற மீனவரை கைது செய்ய தமிழக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த நபர், இலங்கை மற்றும் இந்தியாவில் நடக்கும் சட்டவிரோத பயணங்கள், இந்தியாவுக்கு செல்லும் நபர்களுக்கு தங்குமிடங்களை ஏற்பாடு செய்து கொடுக்கும் பணியை நீண்டகாலமாக மேற்கொண்டு வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (இ-7)

# தாயை இழந்து பரிதவிக்கும் வெள்ளை மரைக் குட்டி



(கந்தளாய்)

திருகோணமலை கந்தளாய் சூரியபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தாயால் கைவிடப்பட்ட வெள்ளை மரைக் குட்டியொன்றை கந்தளாய் பிராந்திய வன ஜீவராசி அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றுள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

மாடு மேய்க்கச் சென்ற ஒருவர் வெள்ளை மரைக் குட்டியை கண்டு பொலிஸார் ஊடாகவனஜீவராசிகள்திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்த நிலையில் குறித்த மரைக் குட்டியை மீட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.(இ-7)

## இராசி பலன்

**மீனம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடும் நாள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மேடம்:** புதிய முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், ஆரோக்கியமான நாள்.

**இடபம்:** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள்.

**மிதுனம்:** எந்த காரியத்தையும் நிதானமாக செய்வது நல்லது, உறவினர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, கௌரவக்குறைவான நாள்.

**கும்பம்:** சாப்பிடக் கூட நேரமில்லாமல் வேலைகளைச் செய்வீர்கள், உறவினர்களின் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**இராசி பலன்** — கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | செவ் | | ராகு |
| சூரி. புத | | | |
| சுக். சந் | | | |
| சனி கேது | குரு. | | |

சந்திராஷ்டமம்
புனர்பூசம்-பூசம்
இரவு 2.30 மணிக்கு
கும்-சந்

04.03.2019
மாசி 20, திங்கட்கிழமை
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
திரயோதசி பிற்பகல் 5.57மணிவரை
திருவோணம் பிற்பகல் 1.37 மணிவரை
சுபநேரம் 12.26-1.56 மணிவரை
இராகுகாலம் 7.56-9.26 மணிவரை
மகா சிவராத்திரி விரதம்
வளவன்

**கடகம்:** நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு.

**மகரம்:** ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், உடல் நலனில் அதிக அக்கறை கூடும், பாராட்டும் புகழும் கூடும் நாள், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், மறைமுக எதிர்ப்புகள் மாறும், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.

**தனுசு:** செய்தொழில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** வளர்ச்சி கூடும் நாள், பயணங்களினால் பலனுண்டு, குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் அதிகரிக்கும்.

**துலாம்:** செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** மனநிறைவு கூடும் நாள், நீண்ட நாட்களாக தள்ளி போட்டுவந்த கரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரலாம்.

## ஆட்டோவும்-மோ.சைக்கிளும் விபத்து

### ஒருவர் படுகாயம்




(கரணவாய்)

மருதனார்மடம் மானிப்பாய் வீதியில் நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் ஆட்டோவும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது, மருதனார் மடத்தில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் மானிப்பாய் வீதி வழியாக மருதனார் மடத்திற்குச் சென்ற ஆட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றது.

விபத்து தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10-60)



ஈழத்தின் பிரசித்தி பெற்ற சிவத்தலங்களில் ஒன்றான யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 21 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் இருபதாம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்குப் பஞ்சரத பவனியும், மறுநாள் வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

## யாழ்ப்பாண மாவட்ட கலைஞர்கள் நூறு பேருக்கு ஜனாதிபதி விருது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கலைஞர்கள் 100 பேருக்கு ஜனாதிபதி விருது வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் எஸ். கிருஸ்ண குமார் தெரிவித்தார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனைக்கு அமைய கலைஞர்களை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் இதுவரையும் எவ்வித விருதுகளையும் பெறாத கலைஞர்கள் இவ் விருதுக்காக தெரிவு செய்யப்படுவார்கள்.

எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு முன்னர் ஜனாதிபதி விருதைப் பெற விரும்பும் கலைஞர்கள் தமது பிரதேச கிராம அலுவலர்களிடம் தமது விபரங்களை தெரியப்படுத்தும் சந்தர்ப்பத்தில் பிரதேச கலாசார உத்தியோகத்தர்கள் அவர்களின் வீடுகளுக்கு சென்று விபரங்களைக் கேட்டறிவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார் . (இ-10)

## காற்றாலை மின் உற்பத்தி நிறுவனத்தால் நீர் இல்லாமல் போகும் அபாய நிலை

(சாவகச்சேரி)

தென்மராட்சி-மறவன் புலோ கிழக்குப் பகுதியில் காற்றாலை மின் உற்பத்தி நிறுவனத்தினரின் பொறுப்பற்ற செயற்பாட்டினால் விவசாயத்திற்கு நீர் இல்லாமல் போகும் அபாய நிலை ஏற்பட்டிருப்பதாக கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

மறவன்புலோ பகுதியில் இடம்பெற்று வருகின்ற காற்றாலை மின் உற்பத்தி நிறுவனப் பணிகளுக்கான நீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு நாளாந்தம் விவசாயக் குளங்கள் மற்றும் கிணறுகளில் நான்கு பவுசர் நீர் எடுக்கப்படுவதாக பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு எடுக்கப்படுகின்ற நீரானது அப்பகுதி மக்களின் அனுமதி இன்றி விவசாய சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் ஒரு சிலரின் உடந்தையுடன் நடைபெறுவதாகவும் குற்றஞ் சாட்டியுள்ளனர்.


இவ்வாறு தொடர்ச்சியாக நீர் எடுக்கப்படுவதனால் குளங்களில் நீர் மட்டம் குறைவடைந்து விவசாயம் மற்றும் கால்நடைகளுக்கு தேவையான நன்னீரைப் பெறுவதில் கிராம மக்கள் சிரமத்தை எதிர்கொள்ள நேரிடும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

மழை ஓய்ந்து இரண்டு மாதம் கூட கடக்காத நிலையில் தங்களுடைய விவசாயக் குளங்களின் நீர் மட்டம் வெகுவாகக் குறைந்திருப்பதாகவும் . இப்படியே சென்றால்கோடை காலத்தில் குளங்களில் நீர் இல்லாமல் பயிர்கள் கருகுவதுடன் கால்நடைகள் இறக்கும் அபாயம் காணப்படுவதாகவும் தெரி வித்துள்ளனர்.

இவர்களின் தன்னிச்சையான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்த விவசாய அமைப்புகள் முன்வர வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மறவன்புலோ மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக குறித்த நிறுவனத்தினர் தமது நீர் தேவைக்கான கோரிக்கையை சாவகச்சேரி நகரசபையினரிடத்தில் விடுத்திருப்பதாகவும், இருப்பினும் பெருமளவான நீர் என்பதால் நகர சபையினரும் அவர்களது கோரிக்கையை நிராகரித்திருப்பதாகத் தெரிய வருகிறது. (இ-30)

## உயிர் குடிக்கும் தறுவாயில் இருந்த கம்பம் உடனடியாக அகற்றப்பட்டது



(கரணவாய்)


புலோலி - சாவகச்சேரி வீதியில் மந்திகை சந்தைக்கு அருகாமையில் தொலைத்தொடர்பு கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கம்பம் ஒன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் கனரக வாகம் மோதி முறிந்தது.

இவ்வாறு முறிந்த கம்பம் வயரின் பொறுப்பில் தொங்கிய நிலையில் காணப்பட்டது.

இது தொடர்பில் இலங்கை தொலைத்தொடர்பு வலையமைப்பினருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து அக் கம்பம் உடனடியாக அகற்றப்பட்டு மாற்றுக் கம்பம் நடுவதற்கான பணிகள் இடம்பெற்றன. (இ-60)




## மதிலுக்கு ஒயில் ஊற்றிய விசமிகள்



(கரணவாய்)

வீட்டு மதிலுக்கு விசமிகளால் ஒயில் ஊற்றப்பட்ட சம்பவம் கரணவாய் கிழக்கு, கலட்டியில் இடம்பெற்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு வீட்டில் இருந்தோர் அருகிலுள்ள மைதானத்தில் இடம் பெற்ற விளையாட்டு நிகழ்வைப் பார்த்துவிட்டு இரவு 11 மணியளவில் வீடு திரும்பியபோது வீட்டு மதிலில் ஒயில் ஊற்றப்பட்டமை தெரியவந்தது. (இ-60)

## சிவராத்திரியை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

மஹா சிவராத்திரி விரத காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை யாழ்.மாவட்டத்தின் பல ஆலயங்களில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளன.

அந்தவகையில் சிவராத்திரி தினத்தன்று இரவு 7 மணிக்கு புன்னாலைக்கட்டுவன் திடற்புலம் அருள்மிகு ஸ்ரீநரசிங்க வைரவர் தேவஸ்தான மண்டபம் சிவநெறிச்செம்மல் சைவப் புலவர்செ.த.குமரன் "அன்பே சிவம்" என்னும் தலைப் பில் உரையாற்றவுள்ளார்.

இரவு 8மணிக்கு நாரந்தனை சரவணை கர்ணன்தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் சிவநெறிச்செம்மல் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் "சிவவிரதங்களில் சிவராத்திரி விரதம்" என்னும் தலைப்பிலும் இரவு 10 மணிக்கு புங்குடுதீவு மேற்கு பெருங்காடு கிராஞ்சியம்பதி ஸ்ரீமீனாட்சியம்பாள் சமேத சோமசுந்தரேஸ்வரர் சிவன் தேவஸ்தானத்தில் சிவநெறிச் செம்மல் இளம்சைவப்புலவர் ச.நவநீதன் "சிவராத்திரி விரத மகிமை" என்னும் தலைப்பிலும் இரவு 11.30 மணிக்கு ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான்தோன்றி ஸ்ரீமனோன்மணி அம்பாள் கோவிலில் சிவநெறிச் செம்மல் இளம்சைவப்புலவர்ச.நவநீதன்" சிவனுக்கு உகந்தது சிவராத்திரி" என்னும் தலைப்பிலும் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (இ-7)

## மாணவர்களுக்கான விசேட வழிபாடு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் வீணாகான குருபீடம்பதி உறையும் ஸ்ரீ மஹா சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில் 2019 ஆம் ஆண்டு 5 ஆம்ஆண்டு புலமைப் பரிசில், க.பொ.த.சாதாரண தரம், உயர்தரம் பரீட்சைகளுக்கு தோற்றும் மாணவர்களுக்கான விஷேட வழிபாடு இன்று 4 ஆம் திகதி திங்கட்கிழமை சிவராத்திரி விரத நாள் முற்பகல் 11 மணியளவில் ஆரம்பமாகி தொடர்ந்து ஒவ்வொரு புதன் கிழமையும் மாலை 5 மணிமுதல் பூஜை வழிபாடுகள் நடைபெறும்.

மேற்படி பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் முதன்மைச்சித்தி பெற்றிடவும் மனச்சோர்வின்றி உற்சாகமாக கல்வியைத் தொடரவும் மன ஒருமைப்பாட்டு வலுவூட்டல் பயிற்சியும் வழிபாடும் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. கல்வித் தெய்வங்களான ஸ்ரீ சரஸ்வதி அம்பாள், ஹயக்கிரீவர் மூர்த்தி ஞானதட்சணாமூர்த்தி பூசைகளும், பரீட்சை வெற்றி, கல்வி,கலைஞானம்,ஞாபக சக்தி முதலானவற்றினை அனுகூலமாகத்தர புதக்கிரகவழிபாடு, கல்விக்கதிபதி திருவெண்காடு ஸ்ரீ சுவேதாரண்யேஸ்வர சிவன் அம்பாள் வழிபாடுகள் என்பன நடைபெறும். (மாணவர்கள் தங்கள் பெயர், நட்சத்திரங்களை சேர்த்துக் கொள்ளலாம். பரீட்சை பெறுபேறுகள் வெளியாகும் வரை வழிபாடு நடைபெறும்) (இ-7)

## மஹா சிவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

மஹாசிவராத்திரியை முன்னிட்டு இணுவில்தெற்கு ஞானாம்பிகை உடனாய ஞானலிங்கேச்சுரர் திருக்கோவிலில் பெருஞ் சிவனிரவு இன்று திங்கட்கிழமை இடம் பெறும். (7)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஞானலிங்கேசுவரர் மஹா சிவராத்திரி விழா இன்று திங்கட்கிழமை மாலை 5மணிமுதல் காலை 7 மணிவரை யாழ் இந்துக்கல்லூரி ஞானலிங்கேசுவரர் பீடத்தில் விசேட அபிஷேக பூசைகள் மற்றும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.இரவு முழுவதும் நீர்ச் செம்பு தாங்கி ஞான லிங்கேசுவரர் பெருமானுக்கு திருமுழுக்கு இடம்பெறும். (7-105)

# ரத்கம வர்த்தகர்கள் கொலைக்கு அரசு பொறுப்புக்கூற வேண்டும்

## மகிந்த மீண்டும் வலியுறுத்து

ரத்கமவில் வர்த்தகர்கள் இருவர் படு கொலை செய்யப்பட்டமைக்கு அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித் துள்ளார். நேற்று முன்தினம் இரவு அநுரா தபுரத்தில் இடம்பெற்ற நிகழ்ச்சியின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.



எதிரணியில் இருக்கும் அரசியல் கட்சி களைப் பயமுறுத்தி அரசாங்கத்திற்கு எதி ராக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக் களை தடுப்பதற்கு முயற்சிப்பதாகவும் மகிந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


## ஆடு விற்பனைக்கு

முல்லைத்தீவுப் பகுதியில் ஆடுகள் விற்பனைக்குண்டு.

(ℓ-5520)

T.P. 077 168 1697



பழைமை வாய்ந்த

## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



- ஆண், பெண் வசியம் (கவரும் வசியம், ராஜ வசியம், பிறப்பு வசியம்)
- பிரிந்து சென்றவர்களை மூன்று பொழு தில் சேரும்படி செய்ய முடியும்
- கணவன்-மனைவிக்குள் பிரச்சினையா?
- காணி விற்பனையில் பிரச்சினையா?
- வியாபார முன்னேற்றம்
- வீட்டில் ஒற்றுமை உண்டாக
- பெற்றோர் ஆசீர்வாதம் பெற

இரகசியம் பேணப்படும்

ஒருமுறை தொடர்பு கொண்டு பாருங்கள் வெற்றி நிச்சயம்
சகல காரியங்களுக்கும் மூன்று பொழுதில் பலன்

(உங்களால் நேரில் வர முடியாவிட்டால்
பதிவுத் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

ரெங்கசாமி
கண்டி, அம்பத்தன்ன -077 939 5222
Viber:076 466 4153

வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்


## சிவராத்திரி

இன்று மஹா சிவ ராத்திரியை முன்னி ட்டு நாயன்மார்கட்டு திருக்குளக்கரையில் அமைந்துள்ள விநா யகப் பெருமானுக்கு மாலை 4 மணிமு தல் 5.30 மணி வரை விசேட பூஜை வழிபாடுகள் இடம் பெறும்.

இச் சிவராத்திரி விழாவில் கலந்து கொள்ளும் அடிய வர்கள் ஆசாரசீலர் களாக வருகை தந்து விநாயகப் பெருமா னின் இஷ்ட சித்தி களைப் பெறுமாறு ஆலயப் பரிபாலன சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-10-101)


## ST.JOHN'S COLLEGE, JAFFNA
## CHUNDIKULI GIRLS COLLEGE, JAFFNA
## ADMISSION-2020 FOR GRADE 1, GRADE 4, GRADE 6 & GRADE 10

### தரம் 01, தரம் 04, தரம் 06, தரம் 10 இற்காக அனுமதி 2020

1) அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 05.03.2019 முதல் 18.03.2019 வரை பெற்றுக்கொள்ளலாம்.
ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
இ. எமது விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 18.03.2019 திங்கட்கிழமை. அத்திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்பட மாட்டா.
2) தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி **(Photocopy)** இணைக்கப்படவேண்டும்.
3)விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.
4)ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா.1000.00
5)வயதெல்லைகள்
அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2014 இற்கும் 31.01.2015 இற்குமிடையில் பிறந்திருந்தல் வேண்டும்.
ஆ. தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2011 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
இ.தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2009 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
ஈ. தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2005 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
6)தரம் 12 **(A/L 2022 Batch)** விண்ணப்பதாரி 01.02.2003 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.
7)தரம் 04,தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 12.10.2019 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:
01) தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப்பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.
02) தரம் 12 இற்கும் **(A/L 2022Batch)** ஆங்கிலமொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) தமிழ்மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கலை, தொழில் நுட்பவியல்) மற்றும் **Londan A/L 2020/ 2021** இற்கும் விண்ணப்பப்படிவங்கள் சென் ஜோன்ஸ் கல்லூரியிலும் ஏற்றுக்கொள்ளப்படும். அனுமதிப்பரீட்சை 04.01.2020 சனிக்கிழமை காலை 08.30 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 06.01.2020 திங்கட்கிழமை ஆரம்பமாகும். ஆண்டு 01 இல் மும்மொழிக்கற்கை நெறி அறிமுகப்படுத்தப்படுகின்றது.
03) சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 **(A/L)** தமிழ்/ஆங்கில மொழிமூலம் **2022Batch)** விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப்பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

(சி-5667) **அதிபர்கள்**


## நூற்றாண்டு தூபி அமைப்பதற்கான ஆட்சேபனை தொடர்பானது

மாம்பழம் சந்திக்கு அருகிலுள்ள சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவுக்கு வழங்கப்பட்ட **இல. 62, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப் பாணம்** என்னும் முகவரியில் அமைந்துள்ள காணியில் A9 வீதியின் மத்தியில் இருந்து 30 அடிகளுக்கு அப்பால் நூற்றாண்டு தூபி ஒன்றை அமைப்பதற்கு தலைவர், அரியாலை சுதேசிய திருநாள் கொண்டாட்டம், அவர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இவ்விடத்தில் இத்தூபியை அமைப்பதற்கு அனுமதி வழங்குவது தொடர் பான ஆட்சேபனை ஏதும் இருப்பின் இரண்டு வார காலத்திற்குள் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு எழுத்து மூலமான அறிவித்தலை வழங்கியுதவுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்.** (சி-5666)


## அகவை அறுபதில் 60
## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்




**திரு. சண்முகம் தயாளன்**
[உதவிக் கல்விப் பணிப்பாளர்,
சுகாதாரமும் உடற்கல்வியும்]

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திப் பிரிவில் 1999-2009 வரை சுகாதாரமும் உடற்கல்வியும் பாட சேவைக் கால ஆசிரிய ஆலோசகராகவும் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2019.03.03 வரை சுகாதாரமும் உடற்கல்வியும் பாட உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றி இன்று அகவை அறுபதில் மணி விழாக் காணும் திரு.சண்.தயாளன் அவர்களை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ இறை ஆசி வேண்டி அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**கல்வி அபிவிருத்திப் பிரிவு,
வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.**



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்:சதயம் 3
கி.பா:40 உயரம்: 6’
தகைமை/தொழில்:A/L , Sales Manager
எதிர்பார்ப்பு:படித்தபெண்
தொ.இ: B/836

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்:சித்திரை 4
கி.பா:24செவ் 12 இல்
உயரம்: 5’5”
தகைமை/தொழில்:B.Com பட்டதாரி வங்கி முகாமையாளர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/851

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:திருவாதிரை 3
கி.பா: 20 உயரம்: 5’6”
தகைமை/தொழில்:BBA,அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, அரச தொழில்
தொ.இ: B/858

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி 1
கி.பா: 30செவ் 4 இல்
உயரம்: 5’4”
தகைமை/தொழில்:B.Comபட்டதாரி, Ass.Accountant
எதிர்பார்ப்பு:பட்டதாரி, உத்தியோகம்
தொ.இ: B/866

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:மகம் 2
கி.பா: 42செவ் 1 இல்
உயரம்: 5’4”
தகைமை/தொழில்:B.Sc, M.Sc Reading, External Consultant
எதிர்பார்ப்பு:பட்டதாரி, அரச தனியார் தொழில்
தொ.இ: G/2788

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி 4
கி.பா: 19 உயரம்: 5’3”
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு (London, Canada)
தொ.இ: G/2797

பிறப்பு: 1974 இந்து
நட்சத்திரம்:ரேவதி 4
கி.பா: 28
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: சைவபோசணம்,பூசகர், அரச தனியார் சொந்ததொழில்
தொ.இ: G/2807

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்:புனர்பூசம் 1
கி.பா: 62 செவ் இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்:A/L,NCE(Civil)
எதிர்பார்ப்பு:அரச தனியார் தொழில், வியாபாரம்
தொ.இ: G/2832

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கொக்கெய்ன் பயன்படுத்தும் பெண் எம்.பி.யார்?

## ரஞ்சனிடம் பவித்ரா கேள்வி



(கொழும்பு)

கொக்கெய்ன் பயன்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களிடையே காணப்படும் பெண் பாராளுமன்ற உறுப்பினர் யார் என்பதை வெளிப்படுத்துமாறும் ரஞ்சனின் இந்த அறிவிப்பினால் பெண் எம்.பிக்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதாகவும் பவித்ரா வன்னியாராச்சி எம்.பி. தெரிவித்துள்ளார்.

யட்டியந்தோட்ட பகுதியில் நேற்று இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# நாவற்குழி திருவாசக அரண்மனையில் 108 சிவலிங்கங்களுக்கு அபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

மஹா சிவராத்திரி தினமான இன்று நாவற்குழி சிவபூமி திருவாசக அரண்மனை சிவதெட்சணாமூர்த்தி திருக்கோயிலில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறுவதோடு 108 சிவலிங்கங்களுக்கு இன்று காலை 6 மணி தொடக்கம் நாளை காலை 6 மணி வரை பக்தர்களால் அபிஷேகம் செய்யப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-7)

# பருத்தித்துறையில் 14 பேர் கொண்ட துறைமுக அபிவிருத்தி குழு அமைப்பு

(கரணவாய்)

பருத்தித்துறை நகரில் மீன்பிடி துறைமுகம் அமைப்பதற்கான இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதற்காக 14 பேர் கொண்ட துறைமுக அபிவிருத்தி என்ற பெயரில் புதிய குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதன்படி இத் திட்டத்தை உடன் நடைமுறைப்படுத்துமாறு மத்திய மீன்பிடி அமைச்சு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியை கோரவுள்ளதுடன், முதற்கட்டமாக ஆளுநரைச் சந்தித்து இத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக அழுத்தம் கொடுக்கவுள்ளதாகவும் தொடர்ச்சியாக கொழும்புக்குச் சென்று மத்திய மீன்பிடி அமைச்சு மற்றும் அமைச்சர்களை யும் பிரதமர், ஜனாதிபதி ஆகியோரையும் சந்தித்து இத் துறைமுகத்தின் முதலாவது திட்டத்தை நடை முறைப்படுத்துமாறு கோரவுள்ளதாக இக் குழு இரண்டு தீர்மானத்தையும் எட்டியுள்ளது.

பருத்தித்துறை நகரில் மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலைக்கு அண்மையாக மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்கு பாடசாலை சமூகம் தொடர்ந்தும் எதிர்த்து வரும் நிலையில் அதனால் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படாது எனவும் 1700 கோடி ரூபா நிதியொதுக்கீட்டில் வந்துள்ள இத் திட்டம் வாழ்நாளிலே இனிவராது எனவும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் பருத்தித்துறை நகர சபையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பருத்தித்துறை நகரசபை தவிசாளர் இருதயராசா தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

அதாவது பருத்தித்துறை நகரம் தற்போதைய சவாலை எதிர் கொண்டு பொருளாதார அபிவிருத்தி அடைய வேண்டுமாக இருந்தால் இத் துறைமுகம் அமைய வேண்டும்.

பாராளுமன்றத்திலும், அமைச்சிலும் இத் துறைமுகம் அமைக்க வேண்டும் என நாங்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக முழுமையான பணிகள் நிறைவடைந்த சூழ்நிலையிலே அதை அமைப்பதற்கு சில நிபந்தனைகளை விதித்து அதை தடை செய்வதற்கான முயற்சிகள்நடந்து கொண்டே இருக்கின்றன.

பருத்தித்துறை துறைமுக அபிவிருத்தி அமைப்பு என்ற அமைப்பை கடற்றொழிலாளர்கள் சங்கம், சமாசம், பிரதேசசபை, நகர சபை உறுப்பினர்களைக் கொண்டே அமைத்துள்ளோம். பாடசாலை சமூகத்தை சேரந்த சிலர் மாற்று திட்டம் ஒன்றை முன்மொழிந்துள்ளார்கள்.

அதை நிறைவேற்றுவதாக இருந்தால் இத்திட்டத்தை நடை முறைப்படுத்த முடியாத சூழ்நிலை உருவாகும். என்வேதான் முதலாவதாக கொண்டுவந்த திட்டத்தை நடை முறைப்படுத்துமாறு ஆசிய அபிவிருத்தி வங்கி, கடற்றொழில் அமைச்சை வலியுறுத்தவுள்ளோம்.

இக் குழு பாராளுமன்றத்திற்கு நேரடியாகச் சென்று பிரதமர், ஜனாதிபதி, அமைச்சர்களை சந்தித்து மகஜர்கள் கையளிக்கவுள்ளது.

இதற்கு 18 கடற்றொழிலாளர்கள் சங்கங்களின் திட்டத்தையும்பெற்று நடைமுறைப்படுத்தப்படும் என தீர்மானிக்கப்பட்டது. (இ-60)

# அல்ஜீரிய ஜனாதிபதிக்கு எதிராக போராட்டம் ஒருவர் உயிரிழப்பு; 63 பேர் படுகாயம்

## 45 பேர் கைது



அல்ஜீரிய ஜனாதிபதி அப்துலசீஸிக்கு எதிராக தொடர்ந்துவரும் ஆர்ப்பாட்டத்தின் போதான மோதலில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஜனாதிபதியின் பதவி விலகலை வலியுறுத்திநேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போதே இந்த உயிரிழப்பு சம்பவித்துள்ளது. இதேவேளை, 63 பேர் காயமடைந்துள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அல்ஜீரியா முழுவதும் உள்ள நகரங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடி ஜனாதிபதிக்கு எதிராக போராடி வருகின்றனர். அமைதியான முறையில் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.

மோதல்களின் போது 63 பேர் காயமடைந்துள்ளனர். 45 பேர் கைது செய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டக்காரர்கள் மற்றும் பொலிஸார் இருதரப்பும் காயமடைந்துள்ளனர் என செய்தி இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது.

அல்ஜீரியாவில் பெரிய அளவிலான ஆர்ப்பாட்டங்கள் அரிதாகவே நடத்தப்படுகின்றன. 81 வயதான அல்ஜீரிய ஜனாதிபதி 5 வது முறையாக மீண்டும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ளதாக தெரிவித்ததை அடுத்து ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அல்ஜீரிய ஜனாதிபதி அப்துலசீஸ் பக்கவாத நோயினால் பாதிக்கப்பட்டவர் என்பதோடு நாட்டை கொண்டு நடத்த இயலாத நிலையில் இருப்பவர் என அல்ஜீரிய மக்கள் தெரிவிக்கின்றனர். (7)

# வழக்குத் தொடர்வதற்கான குறைந்தபட்ச பணப் பெறுமதி

(கொழும்பு)

வணிக மேல் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்வதற்கான குறைந்தபட்ச பணப் பெறுமதி 5 மில்லியன் ரூபாவிலிருந்து 20 மில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவான அதி விசேட வர்த்தமானி, நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சால் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த புதிய நடைமுறை கட்டளையானது, எதிர்வரும் 15ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படும் என அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், இதற்கு முன்னதாக வணிக மேல்நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகளுக்கு இந்த நடைமுறை தாக்கம் செலுத்தாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஆட்டோக்களை பதிவு செய்யவும்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச சபையால் ஆட்டோக்களைப் பதிவு செய்ய கடந்த 27 ஆம் திகதி முதல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 30 வருடங் களுக்குப்பின் கரவெட்டிப் பிரதேச சபையால் ஆட்டோக்களை பதிவு செய்யவென முச்சக்கர வண்டிகள் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

நெல்லியடி மத்திய பேருந்து நிலையம், நெல்லியடி எரிபொருள் நிலையம் மற்றும் புதிய சந்தைப்பகுதி ஆகிய பகுதிகளிலிருந்து சேவையில் ஈடுபடும் ஆட்டோக்களே இவ்வாறு பதிவு செய்யப்படவுள்ளன.

சேவையில் ஈடுபடும் ஆட்டோச் சாரதிகள் 28 ஆம் திகதியிலிருந்து 2 மாத காலத்துக்குள் மீற்றர் பொருத்த வேண்டும் சாரதிகள் முழு நீளக்காட்சட்டை அணிய வேண்டும். குற்றச் செயல்களில் ஈடுபட்டால் ஒரு வருட அங்கத்துவம் இரத்தாக்கப்படும் போன்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

இது தொடர்பான கூட்டத்தில் கரவெட்டி பிரதேச சபைத் தவிசாளர்,கரவெட்டி பிரதேச செயலாளர் மற்றும் நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர். (இ-10-60)

# மானிய முறையில் வழங்கப்பட்ட சோலர் பழுது-விவசாயி கவலை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தினால் மானிய முறையில் விவசாயி ஒருவருக்கு வழங்கப்பட்ட சோலர் (Solar) பழுதடைந்த நிலையில் ஒரு மாத காலமாகியும் அதனை திருத்தித்தரவில்லை என விவசாயி கவலை தெரிவித்துள்ளார்.

குறித்த சோலர் (Solar) கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் நீர்வேலி மேற்கில் உள்ள விவசாயி ஒருவரின் தோட்டத்திற்கு திருநெல்வேலி விவசாயத் திணைக்களத்தினால்மானிய விலையில் 25 வருட உத்தரவாதமளிக்கப்பட்டு ஒரு இலட்சத்து 98 ஆயிரத்து 500 ரூபாவிற்கு வழங்கப்பட்டிருந்தது.

எனினும் வழங்கப்பட்டு நான்கு மாதங்களிலே சோலர் (Solar) பழுதடைந்துள்ளதெனவும் இது தொடர்பில் விவசாயத் திணைக்களத்துக்கு அறிவித்தும் இது வரை குறித்த திணைக்களத்தினர் எந்தவொரு நடவடிக்கையினையும் எடுக்கவில்லை எனவும் விவசாயி கவலை தெரிவித்துள்ளார். (இ-87)

# ஈழத்துச் சிதம்பரத்தில் சிவராத்திரி வழிபாடு

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று திங்கட்கிழமை நடைபெறும் மஹா சிவராத்திரி விரதத்தில் சிவபெருமானுடைய மந்திரங்களையும் நாமங்களையும் ஒன்று கூடி ஒலிக்க அனைத்து பக்த அடியார்களும் இணைய வேண்டுமென காரைநகர் மணிவாசகச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இவ்விரதத்தினை அனுஷ்டிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டநிலையில் அனைத்து அடியவர்களையும் கலந்து கொண்டு சிவன் அருளைப் பெறுமாறு அச்சபை கேட்டுக் கொண்டுள்ளது. (இ-10)

# யாழில் இராணுவத்தால் விழிப்பூட்டல் செயலமர்வு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இராணுவத்தின் யாழ். மாவட்ட கட்டளை தலைமையகத்துடன் இணைந்து இலங்கை பெண் சட்டத்தரணிகள் சங்கம் நேற்று முன்தினம் பிரமாண்ட விழிப்பூட்டல் செயலமர்வு ஒன்றை நடத்தியது.

இராணுவத்தின் பலாலி தலைமையகத்தில் இடம்பெற்ற பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்செயல்கள் குறித்த விழிப்பூட்டல் மற்றும் அறிவூட்டல் செயலமர்வில் யாழ். மாவட்டத்தின் பல இடங்களில் இருந்தும் 500 இற்கும் அதிகமான பெண்கள் கலந்து கொண்டனர். குறிப்பாக அரியாலை கிழக்கில் இருந்து 800 பேர் கலந்து கொண்டனர்.

குடும்ப வன்முறைகள், பெண்கள் வெளியிடங்களில் எதிர்நோக்குகின்ற வன்முறைகள், சட்ட நிவாரணங்கள் ஆகியன குறித்து பேராளர்களால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. (இ-7)




நெல்லியடி பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் அணிவகுப்பு மரியாதை நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. நெல்லியடி பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயதிலக தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் காங்கேசன்துறை பிராந்தியத்திற்கு பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டதுடன் வாகனங்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தினார். (படங்கள்:-மகாலிங்கம்)

# ஜனாதிபதியின் நிதி ஒதுக்கீட்டில்

# கை வைத்தால் கடும் நடவடிக்கை

## ஐ.தே.கவுக்கு ஐ.ம.சு.மு. எச்சரிக்கை

(கொழும்பு)

**வரவு- செலவுத் திட்டத்தில் ஜனாதிபதிக்குரிய ஒதுக்கீடுகளை தோற்கடிக்கச் செய்ய ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை எம்.பிக்கள் நடவடிக்கை எடுத்தால், வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது கடுமையான தீர்மானமொன்றுக்கு வர வேண்டியிருக்கும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முதுஹெட்டிகம எச்சரித்துள்ளார்.**

எதிரணியிலுள்ள சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து தீர்மானம் ஒன்றுக்கு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதியின் நிதி ஒதுக்கீடுகளுக்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாக ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே முதுஹெட்டிகம மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது குறித்து

# வீரவன்சவின் எதிர்ப்பை மீறி ஜே.வி.பியுடன் மகிந்த பேச்சு

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதி பதவியை ஒழிப்பது குறித்து மக்கள் விடுதலை முன்னணியுடன் பேச்சுவார்த்தை நடத்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு எந்த உரிமையும் இல்லை என விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகாரம் காரணமாகவே மகிந்த ராஜபக்ஷ போரை வென்றதாகவும் இதனால், எந்த விலை கொடுத்தாவது நிறைவேற்று அதிகாரத்தை பாதுகாப்பதற்காக மகிந்த ராஜபக்ஷ குரல் கொடுக்க வேண்டும் என தேசிய சுதந்திர முன்னணியின் பேச்சாளர் முஹமட் மொசம்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் மக்கள் விடுதலை முன்னணி என்பது ராஜபக்ஷ ஆதரவு அரசியலை நிராகரித்து வருவதுடன் அந்த அரசியலை அழிக்க செயற்பாடுகளை முன்னெடுக்கும் கட்சி என்பதால், அந்த கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தேவையற்றது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகமான அதிகாரங்களை பெற்றுக்கொடுப்பதே மக்கள் விடுதலை முன்னணியின் எதிர்பார்ப்பு எனவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக, எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் நடக்கும் இந்த பேச்சுவார்த்தையை தேசிய சுதந்திர முன்னணி கடுமையாக எதிர்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.


எது எப்படி இருந்த போதிலும் மக்கள் விடுதலை முன்னணிக்கும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நாளை மறுதினம் 6ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாகவும் அந்த முன்னணி தெரிவித்துள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தையில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, விஜித ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி, நளிந்த ஜயதிஸ்ஸ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## குறை'களை' பதிகம் 26

### சிந்திக்க முன் சிதைந்து விடுமா!....





*சிதைகிறது யமுனா ஏரி*
*மகிமை இழக்கிறது மந்திரிமனை*
*தூர்ந்து போகிறது கற்தோரண வாயில்*
*துடிப்பாருமில்லை அதைத் தடுப்பாரும் யாருமில்லை*

*ஈழத்தில் பலவற்றை இழந்து விட்டோம்*
*மீண்டும் இத்தவறை இழைக்கின்றோம்*
*வரலாற்றை வளைக்கிறது இனவாதம் - எமை*
*வந்தேறு குடிகள் என்கிறது பேரின வாதம்*

*தமிழ் மன்னர் ஆண்டமைக்கு ஆதாரம் இல்லையென்றால்*
*வந்தேறு குடிகள் தான் வருங்காலத்தமிழர்கள்*
*சிந்தையிலே சில கணம் சிந்தித்துப் பாருங்கள் - எம்*
*சந்ததி இருப்பிற்கு சங்கதி தேடுங்கள்*

*கோப்பாயில் கோட்டைக்கு ஆதாரம் இன்றில்லை*
*கொடிகட்டிப்பறந்த சங்கிலிக் கோர் வரலாறு இல்லை*
*இல்லாத வரலாற்றை வேற்று இனத்தவர்கள் கூறும் போது - நாம்*
*இருக்கின்ற வரலாற்றை இழந்து வாழ வழி சமைக்கிறோம்*

**ஆர்.கே.மேனன்**

**அன்பு வாசகர்களே!**

இப்பகுதியில் வெளிவரும் குறை 'களை' பதிகத்திற்கு நீங்களும் உங்கள் பகுதிகளில் உள்ள குறைகளை பதிகமாக எழுதி ஆசிரியர், குறை 'களை' பதிகம், வலம்புரி, இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். (ஆ-ர்)

# வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடிக்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்

## இராதாகிருஷ்ணன் நிராகரிப்பு

(தலவாக்கலை)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு சில பின் வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியின் செலவினங்களுக்கான வரவு-செலவு திட்டத்திற்கு எதிராக வாக்களித்து அதனை தோற்கடிக்க வேண்டும் என கருத்து தெரிவிக்கின்றனர்.

இதனை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் விசேட பிரதேசங்களுக்கான அபிவிருத்தி அமைச்சருமான கலாநிதி வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் வேலைத் திட்டத்தின் கீழ் தலவாக்கலை பாரதி மகா வித்தியாலயத்தில் அமைக்கட்டுள்ள ஆரம்ப பிரிவிற்கான கற்றல் வள நிலைய கட்டடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இதற்காக 15 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் இராதாகிருஷ்ணன் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலத்தில் ஜனாதிபதியாக இருந்தவர்கள் தங்கள் செலவினங்களுக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கீடுகள் செய்து கொண்டார்கள்.

ஆனால் இன்றைய ஜனாதிபதி அப்படி செய்வதில்லை. ஜனாதிபதி யின் செலவினங்களுக்கான வரவு- செலவு திட்டத்திற்கு எதி ராக வாக்களிப்பதன் மூலம் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான முறுகல் நிலை அதிகரிக்குமே தவிர குறைவடையாது. எனவே இது எங்களுக்கும் இந்த நாட்டிற்கு மேலும் பாதகமாக அமையும்.

எனவே இந்த நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு நாம் செயற்பட வேண்டும். நாங்கள் தமிழ் முற்போக்கு கூட்டணி என்ற வகையில் அப்படியே செயற்படுகின்றோம்.

ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றாக பயணித்தால் மாத்திரமே நாட்டின் அபிவிருத்திகளை முன்னெடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# 1000 ரூபாய் இயக்கத்தின் ஏற்பாட்டில் பொகவந்தலாவ நகரில் போராட்டம்




(பொகவந்தலாவ)

பெருந்தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வைக் கோரி நேற்று பொகவந்தலாவ நகரத்தில் 1000 ரூபாய் இயக்கத்தின் ஏற்பாட்டில் போராட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக திகழும் பெருந்தோட்டதுறை சார்ந்த தொழிலாளர்களுக்கு ஏன் ஆயிரம் ரூபாவை வழங்க முடியாது என கேள்வி எழுப்பியுள்ள இந்த 1000 ரூபாய் இயக்கம் முதலாளிமார் சம்மேளனத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

பொகவந்தலாவ பகுதியை சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து பொகவந்தலாவ நகரில் எதிர்ப்பு வாசகங்களை எழுதிய சுலோகங்களையும் ஏந்தியவாறு பொகவந்தலாவ நகரத்தில் ஊர்வலமாக சென்றனர்.

தொழிலாளர்களின் உழைப்பை சுரண்டி சுகபோக வாழ்க்கையை நடத்தும் கம்பனிக்காரர்கள் இன்றைய வாழ்வாதாரத்தை நினைவில் வைத்துக் கொண்டு ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வை வழங்க வேண்டும் என அழுத்தமான கோரிக்கையையும் முன்வைத்தனர். (இ-7)

# வயல் நிலங்களில் வைக்கோலுக்கு தீயிடும் விவசாயிகளுக்கு
# அனைத்து மானியக் கொடுப்பனவுகளும் இடைநிறுத்தப்படும்

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் வயல் நிலங்களில் வைக்கோலுக்கு தீயிட்டுக்கொளுத்தும் விவசாயிகளுக்கான அனைத்து மானியக் கொடுப்பனவுகளும் இடைநிறுத்தப்படும் என்று கமநலசேவை நிலையத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கமத்தொழில் அமைச்சினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி உர மானியத்திற்கு விண்ணப்பிக்கும் விவசாயிகள் வைக்கோல் சேதனப்பசளையாக பயன்படுத்துவதனை கமத்தொழில் மற்றும் ஆராய்ச்சி உதவியாளரினால் உறுதிசெய்யப்பட வேண்டும் எனக்குறிப்பிடப்பட்டிருந்தாலும் விவசாயிகள் தமது விவசாய நிலங்களை அறுவடை நிறைவு பெற்றதன் பின்னர் சேதனப்பசளையாகப் பயன்படும் வைக்கோலை தீயிட்டுக்கொளுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் தற்போது காலபோக அறுவடைகள் நிறைவுபெற்று சிறுபோக பயிர்ச்செய்கைக்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், விவசாயிகள் வயல்நிலங்களில் காணப்படுகின்ற வைக்கோலை தீயிட்டுக்கொளுத்தி வருகின்றனர்.

இவ்வாறு வைக்கோலுக்கு தீவைப்பதை நிறுத்துமாறு கமக்கார அமைப்புக்கள் ஊடாக அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ள போதும் அதனை மீறியும் விவசாயிகள் வைக்கோலை தீயிட்டுக் கொளுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் கமநலசேவை நிலையங்களினால் வைக்கோலுக்கு தீயிட்டுக்கொளுத்தும் விவசாயிகளுக்கான பயிர்ச்செய்கை உரிமங்கள் மற்றும் மானியக்கொடுப்பனவுகள் அனைத்தும் இடைநிறுத்தப்படும் என்றும் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே விவசாயிகளுக்கும் விவசாய அமைப்புக்களுக்கும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்திய போதும், அதனை மீறி விவசாயிகள் செயற்பட்டுவருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (2-315)

# பண்டார வன்னியன் கோட்டையை பாதுகாக்குமாறு கோரிக்கை



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்திருக்கின்ற பண்டாரவன்னியனின் கோட்டையானது தற்போதைய சூழலில் உடைந்து செல்கின்ற நிலைமை இருக்கின்ற போதும் ஒரு சிறிய பகுதி மட்டுமே எஞ்சி இருக்கின்ற நிலையில் குறித்த பகுதியை பாதுகாப்பதாக பல்வேறு தரப்புகளால் கூறப்பட்டாலும்இன்று வரை அது பாதுகாப்பில்லாமல் அழிவடைந்து செல்வதை அறியக் கூடியதாக இருக்கின்றது என பல தரப்பினரும் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த குறித்த சிலையைமையமாகக்கொண்டு குறித்த நகர்ப்பகுதியில் அந்த சிலையை நோக்கியவாறு வடக்கு மாகாண சபையினால் பாரியளவிலான ஒரு பண்டாரவன்னியன் சிலையும் நிறுவப்பட்டது.

இருப்பினும் குறித்த கட்டட பகுதியை பாதுகாப்பதற்காக பாதுகாப்பு கொட்டகை அமைப்பதாக தெரிவிக்கப்பட்டு இருந்தாலும் இன்று வரை அதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே குறித்த கட்டட பகுதியானது அழிவடைந்து செல்வதை தடுக்கும் முகமாக மிக விரைவாக அதனைப் பாதுகாக்க ஒரு கூடாரத்தை அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.(2-281)




# வட்டக்கச்சி ஆயுள்வேத வைத்தியசாலை கட்டடம் மக்கள் பாவனைக்கு கையளிப்பு





(கண்டாவளை)

கிளிநொச்சி வட்டக்கச்சி ஆயுர்வேதவைத்திய சாலைக்கான புதிய கட்டடம் மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வட்டக்கச்சி ஆயுர்வேத வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் நேற்று முற்பகல்10.30 மணிக்கு மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி மற்றும் கரைச்சி பிரதேச சபை நிதி என்பவற்றின் நிதியின் கீழ் சுமார் 5.99 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி கட்டடத்தின் திறப்பு விழா நிகழ்வு தவிசாளர் அ.வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இதில்பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு கட்டடத்தை திறந்து வைத்தார்.நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட ஆயுர்வேத ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் வைத்தியர் வே. சிவநேசன்,கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் ஆணையாளர் நித்தியானந்தம் மற்றும் சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப்பலர் கலந்துகொண்டிருந்தனர். (2-315)

## அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு கடிதங்கள் கையளிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள கிராமிய துரித அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான கடிதங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனால் கையளிக்கப்பட்டன.

15 மில்லியன் ரூபா பெறுமதியிலான வேலைத்திட்டங்களுக்கான கடிதங்கள் பொது அமைப்புக்கள, பாடசாலைகள், மருத்துவமனை, ஆலய நிர்வாகம், விளையாட்டுக்கழகங்களுக்கு அண்மையில் கையளிக்கப்பட்டன. (2)

# வீதி புனரமைப்பில் அடையாளம் காணப்பட்ட வெடிபொருள் இதுவரை அகற்றப்படவில்லை



(கண்டாவளை)

கிளிநொச்சி முரசுமோட்டை ஐயன் கோயிலடி கிராமத்தில் வீதி புனரமைப்பின் போது அடையாளம் காணப்பட்ட வெடிபொருட்கள்இதுவரை அகற்றப்படாமல் இருப்பதனால்அச்ச நிலைமை காணப்படுவதாக பிரதேச மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஐயன் கோயில் அடி கிராமத்திலிருந்து வட்டக்கச்சி வரை செல்லுகின்ற பிரதான வீதி தற்காலிகமாக புனரமைப்புப் செய்யப்பட்டது.

இதன்போது ஐயன்கோயிலடிக்கு அண்மித்த பகுதியில் புனரமைப்பு பணியின் போது நிலத்தில் புதையுண்ட நிலையில் இரண்டு நிலக்கண்ணிவெடிகள் காணப்பட்டுள்ளன.

குறித்தவெடி பொருட்கள் அப்பகுதியில் பணியில் ஈடுபட்டவர்களால் பாதுகாப்பற்ற ஓரிடத்தில் வைக்கப்பட்டிருப்பதாகவும் குறித்த பிரதேசத்தில் இளைஞர்கள்,சிறுவர்கள் என பலர் பல்வேறு தேவைகளையும் விவசாய தேவை கருதியும் இந்த வீதியூடாக சென்று வருவதனால் மேற்படி வெடிபொருள் இருப்பது எந்த நேரத் திலும் ஆபத்து ஏற்படலாம் என பிரதேச மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குறித்தவெடி பொருள் இருப்பது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி நீண்ட நாட்கள் கடந்தும் இதுவரை அந்த வெடிபொருட்களை அகற்றுவதற்கு எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்ட பிரதேச மக்கள் இதனை உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.(2-315)

# வீட்டுத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டல்



(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தின் முருகனூர், ஆனந்தபுரம் கிராமத்தில் நேற்றைய தினம் வீட்டுத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

வீடமைப்பு அதிகார சபையின் வவுனியா மாவட்ட முகாமையாளர் வி.குருஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் செந்தில் நாதன் மயூரன், பிரதேசசபை உறுப்பினர் பார்த்தீபன், தமிழரசு கட்சியின் முக்கி யஸ்தர்கள், பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இக் கிராம மக்களுக்கு நீண்டகாலமாக வீடுகள் இல்லாத நிலையில் தற்போது 37 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. நேற்றைய தினம் வவுனியாவில் மகாறம்பைகுளம், அரசன்குளம், கூமாங்குளம் என மொத்தம் நான்கு மாதிரி கிராமங்களுக்கான அடிக்கல்களும் நாடளாவிய ரீதியில் 100 கிராமங்களுக்கான அடிக்கல்களும் நாட்டி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## 2017-2018 ஆம் ஆண்டு வரை
# 79 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது

(மன்னார்)

மன்னார் கடற்பரப்பி குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டமை காரணமாக கடந்த 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டு களில் மட்டும் சுமார் 79 இந் திய மீனவர்கள் கைது செய் யப்பட்டுள்ளதாக மன்னார் நீரியல் வள திணைக்களத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக வடக்கு கடல் பகுதிக்குள் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் மன்னார் நீரியல் வள திணைக்களத்திடம் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்து 2018ஆம்ஆண்டுவரை சுமார் 79 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக கடந்த 2017 ஆம் ஆண்டு 10 தடவைகளில் 60 இந்திய மீனவர்களும் 2018 ஆம் ஆண்டு 3 தடவைகளில் 19 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் கரையோரப் பகுதிகளான பேசாலை, தலைமன்னார், நடுக்குடா போன்ற பகுதிகளில் இரவு நேரங்களில் ரோலர் படகுகள்மூலம்சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்டோரே மேற்படி கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி கைது செய்யப்பட்டவர்களின் அநேகமான மீனவர்கள் இந்தியாவின் இராமேஸ்வரம்,பாம்பன், தங்கச்சிமடம் ஆகிய பகுதி களை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-285)

# பிரமந்தனாறுக்குளத்தின் அபிவிருத்தி வேலைகள் உலக வங்கியின் நிதியுடன் முன்னெடுக்கப்படலாம்

## கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி பிரமந்தனாறுக்குளத்தின் அபிவிருத்தி வேலைகளை உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் பரணிதரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசனக்குளங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற பிரமந்தனாறுக்குளத்தின் கீழ் உள்ள விவசாயிகள் தமது நீர் விநியோக வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால்கள் என்பவற்றை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.




அதாவது, குறித்த குளத்தின் கீழ் 602 வரையான விவசாயிகள் தமது விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இக்குளத்தின் கீழுள்ள நீர்விநியோக வாய்க்கால்கள், கழிவுவாய்க்கால்கள் என்பவற்றில் கூடுதலானவை இதுவரை புனரமைக்கப்படாது காணப்படுகின்றன.

இதனால் பயிர்செய்கை காலங்களில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர். நீர் வீண்விரயமாவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த நீர்ப்பாசனப் பொறியியலாளர், உலக வங்கியின் நிதியுதவியுடன் எண்பது மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி வேலைகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்றும் அதற்கான மதிப்பீட்டு நடவடிக்கைகள் தற்போது நீர்ப்பாசனத்திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். (2-315)

# திருக்கேதீச்சர ஆலய சிவராத்திரி விழா ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

## பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்ப்பு

(மன்னார்)

மஹா சிவராத்திப்பெருவிழாவை முன்னிட்டு மன்னார் பாடல்பெற்ற தலமான திருக்கேதீச்சர ஆலயத்திற்கு பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் நாட்டின் நாலாபக்கங்களிலிருந்தும் வருகை தர இருப்பதால் பக்தர்களுக்கு ஏற்ற வசதிகளை மன்னார் மாவட்ட செயலகமும் ஆலய நிர்வாகமும் ஏற்பாடு செய்துள்ளது.

திருக்கேதீச்சர ஆலய புனருத்தாரண வேலைகளின் காரணமாக பாலஸ்தானம் செய்யப்பட்டுள்ளதால் சுவாமி வெளிவீதி உலா கொண்டு செல்லப்படமாட்டார்.

திருக்கேதீஸ்வரம் ஆலயம் தற்பொழுது முழுமையான கருங்கல் திருப்பணியாக முன்னைய இந்திய ஆலயங்கள் போன்று புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இவ் ஆலயத்தில் பாலாலயம் செய்யப்பட்டு சிவராத்திரி விழாவில் நான்கு காலங்களிலும் உரிய பூஜைகள் இடம்பெறும்.

அத்துடன் வழிபாடுகள், சிறப்பான வேதபாராயணங்கள், திருமுறை பாராயணங்கள், நாம அர்ச்சனைகள் என்பனவும் எவ்வித குறைகளுமின்றி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நான்காவது கால பூசைகளிலே வசந்த மண்டப தீபாராதனை நடைபெற இருப்பதுடன் இங்கு திருவண்ணாமலைக்கு அடுத்து பெரும் உன்னதமான பஞ்சலோக விக்கிரமாக எழுந்தருளி இருக்கின்ற கேதீஸ்வரப்பெருமான் வீற்றிருக்கின்ற இவ்விடத்தில் பாலாவியில் தீர்த்தம் ஆடி வருகின்ற அருள் செயற்பாடுகளுக்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆனால் பாலாலயம் செய்யப்பட்டிருப்பதால் இந் நிகழ்வு மட்டும் தவிர்க்கப்பட்டு ஏனைய வழிபாடுகள் மிக சிறப்பாக வேத ஆகம புராணங்களுக்கு உரிய வழிபாடுகள் மிக சிறப்பாக நடைபெறுவதற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் பக்தர்களின் நலன் கருதி போக்குவரத்துக்கள், சுகாதாரம், அன்னதானம், மின்சார வசதிகள் போன்ற அத்தியாவசிய தேவைகளும் நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது இவ்வாறு இருக்க சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மன்னார் லிங்கேஸ்வரர் ஆலயத்திலும் மணவாளக்கோலமும் மஹா சிவராத்திரி பூஜையும் இடம்பெறுகின்றது.

அன்றையதினம் முதலாம் சாமப் பூஜை 7 மணிக்கும், இரண்டாம் சாமப் பூஜை 12 மணிக்கும், மூன்றாம் சாம பூஜை 3 மணிக்கும் நான்காம் சாமப் பூஜை 5.30 மணிக்கும் நடைபெறுகின்றன.

இரண்டாம் சாம பூஜை நேரத்தில் லிங்கேஸ்வரப் பெருமானுக்கு சுத்தி நீர் ஊற்றும் நிகழ்வும் இடம் பெறும்.

எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு விசேட விரத பூர்த்தி பூஜை இடம் பெறும். (2-285)

## தமிழர்களின் நிலத்தை மாற்றியமைத்து

# சிங்கள தேசியத்தை புகுத்துவதை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கோம்

(குருமன்காடு)

கடந்த மூன்று வருடங்களாக அரசாங்கத்தின் நடவடிக்கைகளை சர்வதேசம் பார்வையிட்டிருந்ததே தவிர, அது ஒரு கால அவகாசம் இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

வவுனியா வெடுக்குநாறி மலைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த பின் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்களின் பூர்வீக வரலாற்றை சொல்லக்கூடிய வகையில் வெடுக்குநாறி சிவன் ஆலயம் அமைந்துள்ளதை எங்களால் காணக்கூடியதாக இருந்தது. தமிழர்களது நிலத்தை மாற்றியமைத்து மகாவம்ச சிந்தனைகளின் சிங்கள தேசியத்திற்குள் புகுத்துவதை நாங்கள் ஒரு போதும் அனுமதிக்கமுடியாது. இங்கு காணப்படும் நில அமைப்புக்கள் இராவணன் காலத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது. சிங்கள அரசு தன்னிடம் இருக்கும் அதிகாரங்களையும், அமைச்சு திணைக்களங்களையும் மையமாக வைத்து தமிழர்களது நிலங்களை பறிப்பதில் கூடுதலான அக்கறை செலுத்துகிறார்கள். வரலாற்றை யாரும் பறித்து விடவும், திணித்து விடவும் முடியாது.

எமது மக்களின் வாழ்வியல் அடையாளங்கள், இருப்பு, வாழ்வாதாரம் என்பவற்றை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டுள்ளோம். தமிழர் உரிமை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்திற்கு பின்னர் தமிழ்க் கூட்டமைப்பு அந்த நீட்சியை முன்னெடுத்து செல்கின்றது.

புலிகள் காலத்தில் 1994 ஆம் ஆண்டு சந்திரிகா மற்றும் 2004 இல் ரணிலுடனான ஒப்பந்தம் போன்றே நாங்களும் சில தந்திரோபாய நடவடிக்கையில் தான் அரசாங்கத்திற்கு நல்லெண்ணங்களை வெளிப்படுத்தி வருகின்றோம்.

நாம் பலவீனமான நிலையில் அதனை வழங்கவில்லை. தமிழ் மக்களின் விடுதலைக்காக நாம் எவ்வாறான விட்டுக் கொடுப்புக்களை செய்ய முடியுமோ அதனை நாம் எமது மக்களை இழக்காமல் அவர்களின் ஆணையை மீறாமல் கையாளுகின்றோம். (2-250)



மன்னார் மடு கல்வி வலயத்தில் உள்ள அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மடு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.சத்திய பாலன் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

## தனியார் கல்வி நிலையங்களில்

# வகுப்புக்கள் நடத்துவது தொடர்பில் வவுனியா நகரசபை அறிவித்தல்

(குருமன்காடு)

வவுனியா நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் நகரசபை வாகனத்தின் ஒலிவாங்கியினால் தனியார் கல்வி நிலையங்களுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டன.

அதன்படி அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் மாலை 7 மணியுடன் தினமும் நிறைவடைதல் வேண்டும். அத்துடன் ஞாயிற்றுக்கிழமைகளில் க.பொ.த சாதாரண தரம், க.பொ.த உயர் தரம் மற்றும் தரம் 5 புலமைப்பரீட்சைக்குரிய வகுப்புக்கள் மட்டும் நடத்தப்படுவதுடன் ஏனைய வகுப்புக்கள் நடத்துவதை நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் அனைத்து தனியார் கல்வி நிலையங்களும் நகர சபைக்கு சட்டத்திற்கமைய பதிவு செய்யுமாறும் அவ்வாறு பதிவு செய்யாதவர்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி வரும் என்பதை மனவருத்தத்துடன் அறியத்தருகின்றோம் என தகவல் தலைவர் நகரசபை வவுனியா என ஒலிவாங்கி மூலம் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

தினசரி தனியார் வகுப்புக்கள் என செல்லும் மாணவர்களுக்கு ஒருநாள் விடுமுறை வழங்கப்பட்டமை வரவேற்கத்தக்க விடயம் என பெற்றோர்கள் தெரிவித்தனர். (2-250)

## புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய

# உற்சவ காலத்தில் 600 பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுவர்

(கண்டாவளை)

கிளிநொச்சி கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவத்தின் பாதுகாப்பு கடமைகளுக்கு 500 முதல் 600 வரையான பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 14ஆம் திகதி விளக்கு வைத்தல் பூசையுடன் ஆரம்பமாகி எதிர்வரும் 21 ஆம் திகதி இரவு விசேட பொங்கல் உற்சவத்துடன் நிறைவு பெறும்.

இதற்கான முன்னேற்பாடுகள் தற்போது துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் பல பாகங்களிலிருந்து இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை தரும் இவ்வாலயத்தின் புனித தன்மை கருதியும் பக்தர்களின் நன்மை கருதியும் இந்தப் புனித பிரதேசத்திற்குள் மதுபாவனை மற்றும் பொலித்தீன் பாவனை என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ஆலயத்திற்கு வருகை தரும் பக்தர்களின் பாதுகாப்புக்கருதி பாதுகாப்புக் கடமைகளை பொறுப்பேற்றிருக்கின்ற பொலிஸார் இம்முறை 500 முதல் 600 வரையான பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் இதற்குப் பத்துப்பேர் கொண்ட பொலிஸ் அணியொன்றும் இந்தக்கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆலயத்தின் உற்சவத்திற்காக வருகின்ற பக்தர்கள் தங்க ஆபரணங்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் ஆலய நிர்வாகம் கோரியுள்ளது.

உற்சவத்தின் பாதுகாப்பு, சுகாதார நடைமுறைகள் என்பவற்றை சகல தரப்பினரும் கடைப்பிடிக்க வேண்டுமென்றும் ஆலய நிர்வாகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-315)

# பாரதம்

## பாகிஸ்தான் இராணுவம் துப்பாக்கிச்சூடு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பலி!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 9 மாத குழந்தை உள்ளிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

பூஞ்ச் மாவட்டத்தில் பாகிஸ்தான் இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிலேயே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளன.

கஜோரி, போஜ் மாவட்டங்களில் மக்கள் வசிக்கும் இடங்களில் பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தி வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

இந்நிலையில், உட்பாரா மாவட்டத்தில் எல்லைக் கட்டுப்பாட்டு பகுதி அருகே தீவிரவாதிகளின் ஊடுருவல் முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இதனையடுத்து அப்பகுதியில் இந்தியா-பாகிஸ்தான் இராணுவத்திற்கிடையில் இடம்பெற்ற மோதலில் 5 இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

## பாகிஸ்தான் விமானியை இந்தியர் என நினைத்து அடித்துக் கொன்ற மக்கள்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் விமானத்தை விரட்டிச் சென்றபோது அபிநந்தன் சிக்கிக் கொண்ட நிலையில், பாகிஸ்தான் விமானியை கிராம மக்கள் அடித்துக் கொலை செய்துள்ளனர்.



புல்வாமாத் தாக்குதலுக்கு பழிவாங்கும் வகையில் கடந்த 26 ஆம்திகதி இந்திய விமானங்கள் பாகிஸ்தானுக்குள் நுழைந்து தீவிரவாதிகள் முகாம் மீது தாக்குதல் நடத்தியது.

அடுத்தநாள் காலையில் அதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தான் விமானங்கள் இந்திய பகுதிக்குள் தாக்குதல் நடத்துவதற்கு வந்தன. உடனே இந்திய போர் விமானங்கள் அவற்றை விரட்டிச் சென்றன.

அதில் மிக்-21 என்ற விமானத்தை அபிநந்தன் செலுத்திச் சென்றார். அவர் பாகிஸ்தானின் எப்-16 ரக விமானத்தை விரட்டிச் சென்று ஏவுகணையால் சுட்டு வீழ்த்தினார். அந்த விமானம் வெடித்து சிதறி கீழே விழுந்தது.

அடுத்த விநாடி அபிநந்தன் செலுத்திச் சென்ற விமானத்தின் மீது பாகிஸ்தான் ஏவுகணை வீசி தாக்கியது. அதில் அபிநந்தனின் விமானமும் வெடித்து சிதறி கீழே விழுந்தது.

இந்த நேரத்தில் அபிநந்தன் பரசூட் மூலம் கீழே குதித்தார். அதேபோல அபிநந்தனால் வீழ்த்தப்பட்ட பாகிஸ்தான் விமானத்தில் இருந்தும் விமானி பரசூட்டில் கீழே குதித்தார்.

அபிநந்தனும், பாகிஸ்தான் விமானியும் தனித்தனி இடத்தில் பரசூட்டில் இறங்கினார்கள். அபிநந்தனை கிராம மக்கள் சுற்றி வளைத்து பிடித்தனர். பின்னர்இராணுவம்வந்து அவரை மீட்டது.

அதே நேரத்தில் பாகிஸ்தான் விமானி விழுந்த இடத்தையும் கிராம மக்கள் சுற்றி வளைத்தனர். ஆனால் அவர் பாகிஸ்தான் விமானி என்று அவர்களுக்கு தெரியவில்லை. அவர் இந்திய விமானி என கருதி அவரை சரமாரியாக தாக்கினார்கள்.

இதில் அவர் படுகாயம் அடைந்தார். பின்னர் அந்த விமானி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

28ஆம் திகதி தாக்குதல் நடந்தபோது இந்தியாவை சேர்ந்த 2 விமானிகளை நாங்கள் பிடித்துவிட்டோம். ஒருவரை கைது செய்து வைத்திருக்கிறோம். மற்றொருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார் என்று பாகிஸ்தான் முதலில் அறிவித்தது.

சிறிது நேரத்திற்கு பிறகு ஒரு விமானியை மட்டும் தான் பிடித்துள்ளோம். அவரது பெயர் அபிநந்தன் என்று பாகிஸ்தான் கூறியது.

பாகிஸ்தானின் விமானியையும் இந்திய விமானி என கருதி பாகிஸ்தான் அரசு அவரையும் சேர்த்து 2 பேர் என கூறியது.

பின்னர் அவர் பாகிஸ்தான் விமானி என உறுதியானதும் அந்த தகவலை மாற்றி கூறியது இப்போது தெரியவந்துள்ளது. (7)

## அமெரிக்காவின் ஒப்பந்த விதிமுறைகளை பாக்.மீறியதாக இந்தியா குற்றச்சாட்டு

(டில்லி)

எப் 16 ரக விமானங்களை உள்நாட்டு பயங்கரவாதிகளுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்ற அமெரிக்காவின் ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறியுள்ளதாக இந்தியா அமெரிக்காவிடம் முறைபாடொன்றை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.




புல்வாமா தாக்குதலை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட பதில்தாக்குதலில் பாகிஸ்தானின் விமானத்தை இந்தியா சுட்டு வீழ்த்தியது. இதனை பாகிஸ்தான் மறுத்து வந்த நிலையில் விமானத்தின் வரிசை எண் மற்றும் குறியீட்டு எண் என்பவற்றை கொண்டு இந்தியா இதனை உறுதிசெய்துள்ளது.

இந்நிலையில், குறித்த விமானங்களை உள்நாட்டு பயங்கரவாதிகளுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்த வேண்டுமே தவிர மற்ற நாடுகள் மீதான தாக்குதலில் பயன்படுத்த கூடாது என்ற அமெரிக்காவின் ஒப்பந்தத்தை பாகிஸ்தான் மீறியுள்ளதாக இந்தியா குற்றம் சுமத்தியுள்ளது.

இது குறித்து இந்திய விமானப்படை அதிகாரி கபூர் கருத்து தெரிவிக்கையில், **AMRAAM** ஏவுகணையின் பாகங்கள் கிடைத்துள்ளன. இந்த விமானத்தினை இரவு,பகல் என எல்லா நேரங்களிலும் பயன்படுத்த முடியும்.

இதேவேளை கண்ணுக்கு தெரியாத தூரம் வரையில் சென்று தாக்குதல் நடத்தக்கூடிய வல்லமை கொண்டது என தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு உலக நாடுகள் பல கண்டனம் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## ஆப்கானில் தலிபா
## 40 பேர் பலி; ப

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் உள்ள இராணுவ தளத்தின் மீது தலிபான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தானின் ஹெல்மண்ட் மாகாணத்தின் ஷொராப் பகுதியில் உள்ள இராணுவ முகாமில் தலிபான் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் நுழைந்தனர். அவர்கள் அங்கிருந்தவர்களை நோக்கி தாக்குதல் நடத்தினர்.



## எண்ணெய்க்கு
## 50 இற்கு மேற்ப



## பின்லேடன் மகன் ஹம்ஸ
## பயங்கரவாதிகள் பட்டிய

### சவுதி குடியுரிமையும் ரத்து

(நியூயோர்க்)

சவுதி அரேபிய அரசு குடியுரிமையை ரத்து செய்துள்ள நிலையில், ஐ.நா. பாதுகாப்புக்குழு பின்லேடன் மகன் ஹம்ஸா பெயரை சர்வதேச பயங்கரவாதிகள் பட்டியலில் சேர்த்துள்ளது.

அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் தலைவராக இருந்த பின்லேடன் 2011ஆம் ஆண்டு பாகிஸ்தானில் அமெரிக்க அதிரடிப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டார். அதற்கு பழி வாங்கும் வகையில் அமெரிக்கா மீதும், அதன் நட்பு நாடுகள் மீதும் தாக்குதல் நடத்துவேன் என அவரது இளைய மகன் ஹம்ஸா பின்லேடன் 2015ஆம் ஆண்டில் அறிவித்தார்.

அதைத்தொடர்ந்து அவரை சர்வதேச பயங்கரவாதி என அமெரிக்கா

## அணுவாயுதங்களை வைத்திருக்கு
## எதிர்காலத்திற்குத் தே
## எந்தத் திட்டத்தையும் வைத்தி

### ட்ரம்ப் எச்சரிக்கை

(வோஷிங்டன்)


அணுவாயுதங்களைவைத்திருக்கும் வடகொரியா, எதிர்காலத்துக்கு தேவையான எந்தவித பொருளாதார திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற அரசியல் மாநாடொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அணுவாயுத ஒழிப்பு திட்டத்துக்கு வடகொரியா உடன்படுமானால் சிறந்த பொருளாதாரம் ஒன்றுக்கான வழி ஏற்படும் என தெரிவித்துள்ள ட்ரம்ப்,

# வெளிநாடு

## ...பான்கள் தாக்குதல் ... பலர் படுகாயம்



...கி அவர்களது தாக்குதலுக்கு ஆப் கானிஸ்தான் ராணுவத்தினரும் பதிலடி கொடுத்தனர்.

இந்த தாக்குதலில் இரா ணுவ தளத்தில் இருந்த 40 பேர் பரிதாபமாக பலி யாகினர். மேலும் பலர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து வந்த மீட்புக்குழுவினர் அங்கு விரைந்து சென்றனர். அவர்கள் படுகாயம் அடைந் தவர்களை மீட்டு அரு கிலுள்ள வைத்தியசா லையில் சேர்த்து சிகி ச்சை அளித்து வருகின்ற னர். (7)

## ...தழாய் வெடிப்பு ...பட்டோர் மாயம்

(அபுஜா)

தெற்கு நைஜீரியாவில் எண்ணெய் குழாய் வெடித்ததால் ஏற்பட்ட தீ விபத்து காரணமாக 50 க்கும் அதிக மானோர் காணாமல் போயுள்ளனர் என அந்நாட்டு செய்திகள் தெரிவிக் கின்றன.

தெற்கு நைஜீரியாவின் நெம்பே மாநிலத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட எண்ணெய் கசிவினால் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்து நிகழ்ந்த போது குறித்த இடத்தில் கடமையாற்றிய 50 இற்கும் மேற்பட்டோர்காணாமல்போயு ள்ளனர். மேலும் பலர் படு காயமடைந்துள்ளனர். காணா மல் போனோர் உயிரிழந்தி ருக்கலாம் என தெரிவிக்கப்ப டுகின்றது.

எனினும் எண்ணெய் களஞ்சியசாலையை கொண்டு நடத்தும் நிறுவனம் இந்த விபத்து தொடர்பாக இது வரையில் எந்த விடயத்தை யும் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது. (7)

## ...ம்ஸா பெயரை சர்வதேச ...யலில் சேர்த்தது ஐ.நா.



அறிவித்தது. மேலும் ஹம்ஸா பின் லேடன் குறித்து தகவல் அளிப்பவர்க ளுக்கு ரூ.7 கோடி பரிசு தொகை வழங்கப்படும் என் றும் அறிவிப்பு வெளியிட் டது.

சவுதி அரேபிய அரசும் அவரது குடியுரிமையை ரத்து செய்து விட்டதாக நேற்று முன்தினம் தெரிவித்தது.

இந்த நிலையில் ஹம்ஸா பின்லேடன் பெயரை சர்வ தேச பயங்கரவாதிகள் பட்டி யலில் ஐ.நா. பாதுகாப்புக்குழு சேர்த்துள்ளது. (7)

## ...க்கும் வடகொரியா ...தேவையான ...த்திருக்கவில்லை


தற்போது வடகொரியாவுடனான உறவு வலுவடைந்துள்ளது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இரு துருவங்களாக செயற்பட்டு வந்த அமெரிக்காவும் வடகொரியா வும் கடந்த வருடம் சிங்கப்பூரில் வர லாற்று சந்திப்பொன்றை மேற்கொண் டிருந்தது. இதைத்தொடர்ந்து இரு நாடுகளுக்கும் இடையே சுமுகமான உறவு தொடரும் என எதிர்பார்க்கப்பட் டது .

அதற்கிணங்க அமெரிக்க- வடகொரியா நாடுகளுக்கி டையிலான இரண்டாவது உச்சிமாநாடு வியட்நாமில் ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது.

அம்மாநாடு கடந்த 27 மற்றும் 28 ஆம் திகதிக்ளில் வியட்நாமில் இடம்பெற்றிருந் தது. எனினும் வட கொரியா தனது அணுசக்தி திட்டத்தை கைவிடும் செயற்பாட்டுக்கு ஈடாக அந்நாட்டின் பொருளா தாரத் தடைகளை நிவர்த்தி செய்வதற்கு அமெரிக்கா இணங்கியிராத நிலையில் ஒப்பந்தம் எதனையும் மேற் கொள்ள முடியாமல்போனமை குறிப்பிடத்தக்கது. (7)

## இம்ரானுக்கு அமைதிக்கான நோபல்; டுவிட்டரில் ஆதரவு பெருகுகிறது




(இஸ்லாமாபாத்)

இம்ரான் கானுக்கு அமை திக்கான நோபல் விருது அளி க்கவேண்டும் என்று கோரி பாகிஸ்தானி நெட்டிசன்கள் டுவிட்டரில் தொடர்ந்து பதி விட்டு வருகின்றனர்.

இந்தியா- பாகிஸ்தான் எல்லையில் நடந்த விமான தாக்குதலில் தமிழக விமானி அபிநந்தன் பாகிஸ்தான் இரா ணுவத்தால் சிறைபிடிக்கப் பட்டார். விமானி அபிநந் தனை இந்தியாவுக்கு பாது காப்பாக அழைத்துவர வேண் டும் என்று உலகம் முழுவதும் குரல்கள் எழுந்தன. இது தொடர்பான ஹேஷ்டேகுகள் டுவிட்டரில் ட்ரெண்டாகின.

இருநாடுகள் இடையே பதற்றம் சூழ்ந்த நிலையில் அதனை தணிக்கும் முயற்சி யில் உலக நாடுகள் பலவும் இறங்கின. அமெரிக்கா, அவுஸ் திரேலியா, பிரான்ஸ், பிரிட் டன், ஜப்பான், கனடா உள் ளிட்ட நாடுகள் இதுதொடர் பாக அறிக்கைகளை வெளி யிட்டன.

இதனிடையே அபிநந் தனை உடனடியாக பாகிஸ் தான் விடுதலை செய்ய வேண் டும் என மத்திய அரசு திட்ட வட்டமாகத் தெரிவித்தது. பாகி ஸ்தான் நாடாளுமன்றத்தில் கூட்டுக்குழுவின் முன்னால் பேசிய அந்நாட்டுப் பிரதமர் இம் ரான் கான், "அத்துடன், பாகி ஸ்தான் ஊடகங்கள் போர் குறி த்து எதையும் கூறவில்லை.

ஆனால், இந்தியாவில் போர் குறித்து இந்திய ஊட கங்களால் தூண்டப்படுவது வருத்தமடையச் செய்கிறது. நாங்கள் மோதலை விரும் பவில்லை என்று தெரிவிக்க இந்திய பிரதமர் மோடிக்கு புதன்கிழமை மாலையிலிரு ந்து தொலைபேசியில் முயற் சித்தேன். கிடைக்கவில்லை.

அமைதி மற்றும் நல்லெ ண்ண அடிப்படையில் இந்திய விமானப்படை விமானி அபி நந்தன் விடுவிக்கப்படுவார் என்று அறிவித்தார்.

இந்த அறிவிப்பிற்கு மக் கள் பாராட்டுவதோடு, இம் ரான் கானுக்கு அமைதிக் கான நோபல் விருது அளிக்க வேண்டும் என்று பாகிஸ் தானி நெட்டிசன்கள் பதிவி ட்டு வருகின்றனர்.

இந்நிலையில், டுவிட்ட ரில் அதுதொடர்பான ஹேஷ் டேகுகள் தேசிய அளவில் ட்ரெ ண்டாகி வருகின்றன. (7)

## அபிநந்தனை அழுத்தத்தால் அல்ல அமைதிக்காகவே விடுதலை செய்தோம்

### பாக்.வெளியுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

(இஸ்லாமாபாத்)


இந்திய விமானி அபி நந்தனை அழுத்தத்தால் அல்ல, அமைதி வேண்டி விடுதலை செய்தோம் என்று பாகிஸ் தான் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பாகிஸ்தானின் முக்கிய விமான நிலையங் களில் சேவை தொடங்கியது

பாகிஸ்தானில் சிறைபி டிக்கப்பட்ட இந்திய விமானி அபிநந்தன் நேற்று முன்தி னம் வெள்ளிக்கிழமை இரவு விடுதலை செய்யப்பட்டார்.

சர்வதேச நாடுகள் குறிப் பாக அமெரிக்கா, சவுதி, ஐக் கிய அரபு அமீரகம் ஆகிய வற்றின் அழுத்தத்தால்தான் அபிநந்தனை பாகிஸ்தான் விடுதலை செய்ததாகக் குரல் கள் எழுந்தன. இந்நிலையில் இதுகுறித்து பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச் சர் மொகமது குரேஷி பிபிசிக் குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் பேசிய தாவது: "அபிநந்தனை நாங் கள் விடுவித்ததற்கு யாரு டைய அழுத்தமும் காரண மில்லை. எந்த நாடும் எங் களைக் கட்டுப்படுத்தவில்லை.

உண்மையைச் சொல்ல வேண்டுமெனில், இந்தியா வின் துன்பத்தை அதிகப்படு த்த நாங்கள் விரும்பவில்லை. இந்தியக் குடிமக்களை துய ரத்தில் ஆழ்த்த நாங்கள் ஆசை ப்படவில்லை. எங்களுக்கு அமைதி வேண்டும்.



அரசியல் காரணமாக பிராந்தியத்தின் அமைதி ஆப த்துக்கு உள்ளாவதை பாகி ஸ்தான் விரும்பவில்லை. அதனால்தான் அபிநந்தனை விடுதலை செய்தோம்.

ஜெய்ஷ் - இ - முகமது க்கு எதிராக ஆதாரங்கள் பகிரப்பட்டால், நடவடிக்கை எடுக்கத் தயாராக உள்ளோம். நாட்டின் அமைதிக்குப் பங் கம்விளைவிக்கும்தேச விரோத சக்திகளை என்றுமே பாகி ஸ்தான் அனுமதிக்காது" என மேலும் தெரிவித்தார். (7)

## சிரியாவின் டோமா பகுதியில் இரசாயனத் தாக்குதல் உண்மைதான்

### விசாரணைக்குழு தகவல்

(டமாஸ்கஸ்)

சிரியாவில் கடந்த 2018 ஆம் ஆண்டு டோமா பகுதி யில் நடத்தப்பட்ட இரசாய னத் தாக்குதலை 'watch dog' விசாரணைக் குழு உறுதிப்படுத்தியுள்ளது.

சிரியாவின் கிளர்ச்சியா ளர்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள டவுமா பகுதியில் கட ந்த ஆண்டு நடத்தப்பட்ட இர சாயன ஆயுதத் தாக்குதலில் 40க்கும் மேற்பட்ட குழந்தை கள் உயிரிழந்தனர்.

இந்தத் தாக்குதலின் பின் னணியில் சிரிய ஜனாதிபதி ஆசாத், ரஷ்யா, ஈரான் இருப் பதாக அமெரிக்கா குற்றம் சாட்டியது.



இந்த நிலையில் இரசாய னத் தாக்குதல் நடத்தப்பட்டது உண்மைதான் என்று 'watch dog' விசாரணைக் குழு உறுதிப்படுத்தியுள்ளது.

அதில், சிரியாவில் கிளர் ச்சியாளர்கள் கட்டுப்பாட்டுக் குக் கீழ் இருந்த டோமா பகு தியில் ஏப்ரல் 7 ஆம் திகதி இரசாயனத் தாக்குதல் நடத் தப்பட்டது. இதற்கான தடய ங்களும் கண்டறியப்பட்டுள் ளன என்று தெரிவித்துள் ளது.

சிரியாவில் ஜனாதிபதி ஆசாத்துக்கும், ஐ.எஸ். பயங் கரவாதிகளுக்கும் இடையே கடந்த ஆறு ஆண்டுகளாக நடந்து வரும் சண்டை இறு திக் கட்டத்தை அடைந்துள் ளது. ஐ.எஸ். பயங்கரவாதிக ளின் கட்டுப்பாட்டில் இருந்த சிரியாவின் பல்வேறு பகுதி கள் அரசு கூட்டுப் படைக ளால் மீட்கப்பட்டு விட்டன.

இந்த நிலையில் ஐ.எஸ். வசமுள்ள மற்ற பகுதிகளை மீட்க இறுதிப் போர் நடத்தப் பட்டு வருகிறது. (7)

# பட்ஜெட்டில் ஜனாதிபதிக்கான நிதியொதுக்கீடுகளை எதிர்ப்போம்



## மைத்திரிக்கு முஜிபுர் சவால்

(கொழும்பு)

நாளை 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி செயலகம், அவரது அமைச்சு என்பவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு நாங்கள் எதிராக வாக்களிப்போம் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நாங்கள் ஒன்றிணைந்தே பதவியில் அமர்த்தினோம். அவருடன் இணைந்து அரசியல் பயணத்தை முன்னெடுத்ததுடன், நாட்டில் பல்வேறு மாற்றங்களையும் மேற்கொண்டிருக்கின்றோம்.

ஆனாலும் கடந்த ஒக்டோபர் மாதம் எமக்கும், அவருக்கும் எதிராக இருந்த அரசியல் அணியுடன் இணைந்து இந்நாட்டில் அரசியல் மாற்றமொன்றினை ஏற்படுத்துவதற்கன முயற்சியினை மேற்கொண்டார்.

ஆனால் அந்த முயற்சி நீதிமன்றத்தால் தோற்கடிக்கப்பட்டதுடன், நாங்கள் மீண்டும் எம்முடைய அரசாங்கத்தை உருவாக்கினோம்.

ஆனாலும் ஜனாதிபதி தற்போது ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் அதன் தலைவர்களை தாக்கும் வகையிலான கருத்துக்களை தொடர்ச்சியாக வெளியிட்டு வருகின்றார்.

எனவே நாளை 5 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத்திட்டத்தில் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதியின் அமைச்சு உள்ளிட்டவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு நாங்கள் ஆதரவளிக்கப் போவதில்லை என்றார். (7)

# ஜனாதிபதிக்கான நிதியொதுக்கீட்டை தோற்கடிக்கும் நோக்கம் இல்லை

## ஹர்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

2019 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில், ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீட்டை தோற்கடிக்கும் நோக்கம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாது என இராஜாங்க அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகம், அவரது அமைச்சு என்பவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டிற்கு எதிராக வாக்களிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்டிருந்தார்.



இந்நிலையில் இது தொடர்பாக ஐ.தே.கவின் நிலைப்பாட்டை வினவிய போதே கலாநிதி ஹர்ஷ டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் இணைந்து ஆட்சியை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகவே மக்கள் வாக்களித்தனர்.

என்வே, ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீட்டை தோற்கடிப்பதற்கான தேவைப்பாடு ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடையாது. அதை செய்யவும் மாட்டோம்" என்றும் ஹர்ஷ டி சில்வா மேலும் தெரிவித்தார். (7)

# இலங். விமானப்படையின் எயார் டட்டோ-2019 கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

இலங்கை விமானப் படையின் 68 ஆவது நிறைவை முன்னிட்டு ஹிங்குராங்கொட விமானப்படை முகாமில் நடைபெறும் எயார் டட்டோ ("Air Tattoo – 2019") விமானப் படையின் கண்காட்சி நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

நாளை மறுதினம் 06 ஆம் திகதி வரையில் ஹிங்குராங்கொட விமானப்படைத்தளத்தில் நடைபெறவுள்ள இக்கண்காட்சியில் விமானப்படையின் செயற்பாடுகள் மற்றும் விமானப் படையினரின் வளங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அனர்த்த நிலைமைகளின் போது விமானப் படையினரின் நடவடிக்கைகள் குறித்து பொது மக்கள் இதன்போது அறிவுறுத்தப் படவுள்ளனர்.

இக் கண்காட்சி பிற்பகல் 2 மணி முதல் நள்ளிரவு வரையில் இடம் பெறவுள்ளது. இதனைப் பார்வையிட பொதுமக்களிடமிருந்து எந்தவிதக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது எனவும் ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (7)

# திருப்பதியில் ரணிலுக்கு வரவேற்பு



(திருப்பதி)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க திருப்பதி ஏழு மலையான் ஆலயத்தில் வழிபாடு செய்வதற்காக நேற்று முன்தினம் திருமலையை சென்றடைந்தார்.

கொழும்பில் இருந்து சென்னை விமான நிலையத்தை வந்தடைந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அவரது மனைவி மைத்திரி விக்கிரமசிங்க மற்றும் அதிகாரிகள் அங்கிருந்து சிறப்பு உலங்குவானூர்தி மூலம் நேற்று முன்தினம் பிற்பகல் 4.35 மணியளவில் திருப்பதி விமான நிலையத்தை சென்றடைந்தனர்.

அங்கு பிரதமரை ஆந்திர மாநில அமைச்சர் அமர்நாத் ரெட்டி மற்றும் மாவட்ட அதிகாரிகள் வரவேற்றனர். (7)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கோப்பர் நிக்கஸ்

1543 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி.

அதாவது இன்றைக்கு கிட்டத்தட்ட 450 வருடத்திற்கு முன்னர் ஒருநாள்.

குதிரை மேலே ஒரு ஆளு வேகமாக வந்து கொண்டிருகின்றான்.ஜேர்மனியில் இருக்கின்ற நூரம்பர்க் (Nuremburg) என்கின்ற ஊரில் இருந்து அவன் புறப்பட்டு வந்து கொண்டிருக்கின்றான். நேராக போலந்திலே இருக்கின்ற பிரான்பர்க் (Frauenburg) என்ற ஊருககு வந்து சேர்ந்தான்.

அவன் முகத்திலே ஏதோ ஒரு அவசரம் தெரிகின்றது! அவன் கையிலே ஒரு புத்தக மூட்டை. அந்த ஊரில் ஒரு மடாலயம் அதற்கு முன்னால் கொண்டு போய் குதிரையை நிறுத்திவிட்டு கீழே குதிக்கின்றான்.

வேகமாக ஓடிப்போய் கதவைத் தட்டுகின்றான். கதவைத் திறக்கின்றார்கள். உள்ளே ஓடுகின்றான்.இவன் கையிலே இருக்கின்ற புத்தகம், அதை எழுதிய அறிஞர் உள்ளே மரணப்படுக்கையில் இருக்கின்றார்.தன் காலத்தின் கடைசி விநாடிகளை எண்ணிக் கொண்டிருக்கின்றார்.மயக்க நிலையிலிருந்த அவருடைய கையில் அந்த புத்தகத்தின் முதல் பிரதியை வைக்கின்றான். அதற்குப் பிறகு கொஞ்ச நேரத்திலே அவர் மூளையிலே இரத்தக்கசிவு ஏற்பட்டு இறந்து போகின்றார்.

அந்தப் புத்தகம் என்ன தெரியுமா? தலைப்பு இது தான். Concerning the revolurtions of the heavenly bodies வான் பொருள்களின் சுற்றோட்டம் பற்றிய ஆய்வுகள்.

இந்தப் பிரபஞ்சத்தைப் பற்றி அதுவரைக்கும் மனிதன் என்னென்ன கற்பனைகள் செய்து வைத்திருந்தானோ அது எல்லாம் தப்பு என்று சொன்ன நூல்.

நவீன அறிவியலுக்கு வழி காட்டியதே அந்த நூல்தான் கிட்டத்தட்ட 300 வருடத்திற்கும் மேலாக, அறிவியலுக்கும் மதவியலுக்கும் இடையில் கடுமையான சர்ச்சையை ஏற்படுத்திய நூல் அது. ஏன் என்றால் அது வரைக்கும் சொர்க்கம் என்று ஒன்று ஆகாயத்திலே நிஜமாகவே இருக்கிறதாக எல்லோரும் நம்பிக் கொண்டிருந்தார்கள். ஆனால் இவர் என்ன சொன்னார்.

"சூரியன் தான் இந்தப் பிரபஞ்சத்திலே அசையாத மையம்... பூமியும் கோள்களும் அதைச் சுற்றி ஓடிக் கொண்டிருக்கின்றது..!" என்றார். அதனால் புராணமும் வேத நூல்களும் சொல்லிவிட்டுப் போயிருக்கின்ற கருத்துக்களையெல்லாம் இவர் பொய்யாக்கினார்.

இந்தப் பிரபஞ்சத்தில் பூமி இருக்கின்ற இடம் எது என்று கண்டுபிடித்த அந்த அறிஞர் யார் தெரியுமா?

அவர் தான் நிகோலஸ் கோப்பர் நிக்கஸ்– (Nicolaus Copernicus) மதவாதிகள் அறிவியலுக்குப் போட்டிருந்த தடைகளை யெல்லாம் தகர்த்தெறிந்தவர் அவர்.

இதிலே ஒரு ஆச்சரியம் என்ன தெரியுமா?

அவரே ஒரு பக்தியுள்ள மதவாதி 70வருட காலமாக மடாலயத்திலேயே இருந்தவர். தொலைநோக்கி கூட இல்லாமல்.. தன்னுடைய வானியல் ஆர்வத்தை மட்டுமே துணையாக வைத்துக் கொண்டு இவ்வளவு பெரிய சாதனையை நிகழ்த்தியிருக்கின்றார் என்றால் அது ஆச்சரியம் தானே!

அவர் காலத்திலே தொலைநோக்கியே கண்டுபிடிக்கப்படவில்லை! அவராகவே சில கருவிகளைத் தயார் செய்தார். அப்பொழுதெல்லாம் சூரியன் தான் பூமியை சுற்றி வந்து கொண்டிருக்கின்றது என்று எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

இவர் தன்னுடைய ஆராய்ச்சி முடிவுகளை 400 பக்கம் உள்ள ஒரு நூலாக எழுதி வைத்தார். அப்பொழுதே நூலாக அதை வெளியிட வேண்டும் என்று சில பேய் வற்புறுத்தினார்கள்.இருந்தாலும் கோப்பர் நிக்கஸ் அதற்கு சம்பாதிக்கவில்லை.

ஏன் என்றால் "அதிலே இருக்கின்ற கருத்துக்கள் எல்லாம் புரட்சிகரமாக உள்ளது. முழுமையாக அதையெல்லாம் நிருபிப்பதற்கு இப்பொழுது பேதுமான சான்றுகள் இல்லை... இப்பொழுது அதை வெளியிட்டால் எல்லோரும் கிண்டல் செய்வார்கள்" என்பதை அவர் நன்றாக புரிந்து வைத்திருந்தார்.

1539 இல் ஒரு இளம் கணிதப் பேராசிரியர் (Georg Joachim Rheeticus) கோப்பர் நிக்கசை சந்தித்தார். அவருடைய கருத்துக்களை இரண்டு வருடமாக பரிசீலனை செய்தார். அதை தொகுத்து எழுதி வெளியிட்டார்.

முதல் அறிக்கை (Narratio Prima) என்று பேர் அதற்கு. அந்த நூலுக்கு ஓரளவுக்கு ஆதரவு இருந்தது. ஏனென்றால் பல பேராலே அதை புரிந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

அதனாலேயே ஒன்றும் மறுப்பு சொல்லாமல் இருந்துவிட்டார்கள்.

அதற்குப்பிறகு இவருக்கு கொஞ்சம் தைரியம் வந்தது. முழு நூலையும் அச்சடித்து வெளியிடுவதற்கு அந்தக் கணிதப் பேராசிரியருக்கே அனுமதி கொடுத்தார்.

ஆனால் புத்தகம் வெளிவருவதற்கு ஆறு மாதத்திற்கு முன்னால் அவருக்கு இதயத் தாக்குதல் வந்துவிட்டது.

தன்னுடைய நூல் அச்சானதைப் பார்க்கவேண்டும் என்பதற்காகத் தான் அவர் கடைசி நேரத்தில் உயிரை கையிலே பிடித்துக் கொண்டிருந்தார்.அதே மாதிரி முதல் பிரதியைக் கொண்டு போய் அவர் கையில் வைத்தார்கள். அதை உணர்ந்தாரா இல்லையா என்கிறதே தெரியவில்லை.. ஏனென்றால் அதற்குப் பிறகு அவர் கண்ணையே திறக்கவில்லை.

இருந்தால் என்ன அவருடைய கருத்துக்கள் தான் இன்றைக்கு பல பேருடைய கண்களைத் திறந்து விட்டிருக்கிறதே!

பூமி சூரியனைச் சுற்றுவதைப் பற்றி புத்தகம் எழுதிய கதையை அதுவரைக்கும் கேட்டீர்கள். " பூமி ஏன் சுற்றுகின்றது? " என்று தத்துவப் புத்தகம் எழுதியவர் கதை தெரியுமா உங்களுக்கு!

இவரும் மிகவும் கஷ்டப்பட்டு அங்கே இங்கே கடனை உடனை வாங்கி சொந்தமாகவே புத்தகத்தை வெளியிட்டார்.ஏனென்றால் மற்றவர்கள் யாரும் அதை வெளியிடத் தயாராக இல்லை! ஒரு வருடத்திற்கு,அப்புறம் மவுண்ட் ரோடிலே அவரைப் பார்த்தேன் .. " என்ன சேர் செய்து கொண்டிருக்கின்றீர்கள்? பூமி ஏன் சுற்றுகின்றது எப்படி போய்கிட்டிருக்கு? "என்று கேட்டேன்.

''சேர்.. அந்தப் புத்தகம் ஒன்று கூட விற்கவில்லை சேர்.எல்லாவற்றையும் வீட்டுக்குள்ளே அடுக்கி வைத்திருக்கின்றேன்.சம்சாரத்திடம் சண்டை வேறு. ஜனங்கள் என்னைப் புரிந்து கொள்வதற்கு நாளாகும் போலே இருக்கின்றது. இருந்தாலும இப்பொழுது இன்னொரு புத்தகம் எழுதிக் கொண்டிருக்கின்றேன் சேர்.. ''சொந்த அனுபவத்தை வைத்து என்றார்.

" இது பேர் என்ன சேர்? ''என்றேன்... இதுக்குத் தலைப்பு "தலை ஏன் சுற்றுகின்றது?" என்று வைத்திருக்கிறேன் என்று. அதைக் கேட்டதும் முதல் பிரதியை நானே வாங்கிக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்துவிட்டேன்.

# வாழ்விற்கு மேன்மை தரும் சிவராத்திரி

தலைமுறை தலைமுறையாக கொண்டாடப்படும்சிவஜெயந்தியின் உண்மையான உட்பொருள் என்னவென்று அறிந்து அதனைக்கொண்டாடும்பொழுது அதனால் கிடைக்கும் பல நன்மைகளை நாம் எல்லோரும் பெற்றுக் கொள்வோமாக.

அதர்மம் தழைத்தோங்கும் இந்த அஞ்ஞான இருள்சூழ்ந்த கலியுகக் கடைசியில் வட இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் அபுமலை எனும் இடத்தில் தான் படைப்பவராகிய சிவனே அமர்ந்திருந்து படைப்பினதும் ஆரம்பம், மத்தி, இறுதியின் இரகசியங்களை இராஜயோக ஞானத்தின் மூலம் எமக்குக் கூறுகின்ற சிவனின் உண்மையான ஆலயம் உள்ளது. சிவன் அசரீரியானவர், சரீரமற்றவர். அவர் எப்படி அமர்ந்திருந்து இராஜயோகம் கற்பிக்கின்றார் என்ற எண்ணம் உதயமாகலாம். தானே ஒளிவடிவான சிவன் 1936 ஆம் ஆண்டு வயது முதியவரின் சரீரத்தில் பிரவேசம் செய்து அவருக்கு பிரம்மா என்ற பெயரையும் சூட்டி அவர் மூலமே இந்த இராஜயோக ஞானத்தைத் தருகிறார். இவ்வருடம் 83 ஆவதுசிவஜெயந்திகொண்டாடப்படுகிறது.

அவருடையபணிதனித்துவமானது. அவருடைய புகழ் மகத்துவமானது. அதனால் தான் அவரது வழியும் முறையும் அவருக்கே தெரியும் எனச் சொல்லப்படுகிறது. அவர் பிறப்பு, இறப்புக்கு அப்பால் பட்டவரென்பதால் அவர் என்றோ ஒருநாள் வந்து சென்றிருக்கவேண்டும்என அறியக்கூடியதாக உள்ளது. அவர் வந்து ஏதோ அதிசயமிக்க மேன்மையான செயலைச் செய்ததால் தான் இன்றுவரைக்கும் புகழுக்குரியவராகவே இருக்கிறார். முழுமுதற்கடவுள் என்றும் பூஜிக்கப்படுகிறார். மிக்க அன்புடன்சகலராலும்தந்தையே என்று அழைக்கப்படுகிறார்.

இந்த நல்ல நாளில் சிலஉண்மைகளும்வெளிப்படுத்தப்படும்போது விளங்கிக்கொள்வதற்கு உதவியாக இருக்கும். சிவராத்திரியும்வருடாவருடம்கொண்டாடப்படுகிறது. சிவனின் பிறந்த நாளை கோலாகலமாக நித்திரை விழி



த்துக் கொண்டாடுகின்றோம். அவர் சர்வ யாபி என சமய நூல்களில் எழுதப்பட்டுள்ளதால் மக்கள் அவரை சர்வவியாபி என அழைக்கிறார்கள். அப்படியாயின் அது அனைவரின் பிறந்தநாளாகி விடுமல்லவா? ஒரே ஒரு சூரியனே முழு உலகிற்கும் ஒளியைக்கொடுத்து உதவும் போது, முழுமுதற் கடவுளால் ஆகாய தத்துவத்திற்கு அப்பால் உள்ள பரந்தாமத்திலிருந்து எம்மைப்பராமரிக்க முடியாதா?

அத்துடன் கங்கைநீர் தூய்மையாக்கும் என்றால் எமக்குத் தெரிந்த நாள் முதல் கங்கைநதி ஓடிக் கொண்டே இருக்கிறது. ஆனால் உலகம் கீழ் நிலைக்கு அதாவது மனிதர்களின் புத்தி தூய்மையற்றதாகவும் நடத்தை சீர்கெட்டதாகவும் ஆகிக் கொண்டே போகிறது. கங்கை நீரால் தூய்மையாக முடியாது என நம்பக் கூடியதாகஉள்ளது. எனவே இந்த உலகைத் தூய்மையாக்கக் கூடியவர் யார்? அதுதான் ஒரே ஒரு தந்தையின் பணியா கும். முக்தி, ஜீவன் ,முக்தி யும் அளிப்பவர் அவரே. அதாவது காமம், கோபம், ஆசை, பற்று, அகங்காரம், சோம்பறித்தனம், கவனயீனம், பயம் உள்ள தூய் மையற்ற ஆத்மாக்களை தூய தேவ ஆத்மாக்களாக மாற்றுவதே சிவனின் அளப்பரிய கருணையாகும். இதனால் தான் இறந்தவர்களை சிவனடி சேர்ந்து விட்டார், சுவர்க்கத்திற்குச் சென்று விட்டார் எனக் கூறப்படு கிறது.

சிவன் வந்து அஞ்ஞான இருளில் உள்ள ஆத்மாக்களை விழித்தெழச் செய்கிறார். ஓர் ஆத்மா பல பிறவிகளை மாறி மாறி எடுத்ததால் ஆத்மாவின் ஒளி அணையும் தவறுவாயில் உள்ள போதும் சிவன் வந்து ஞானம் எனும் எண்ணெயை ஊற்றி ஆத்மாவைப் பிரகாசிக்கச் செய்கிறார். இந்த ஞாபகார்த்தமே ஒருவர் மரணித்தால் அவ்விடத்தில் இருள் இல்லாதிருப்பதற்காகவிளக்கைஏற்றி வைக்கிறார்கள். ஆத்மா ஒரு சரீரத்தை விட்டு நீங்கி ஒரு விநாடியில் இன்னுமொன்றை எடுக்கிறார். அதில் இருள் என்ன கேள்விக்கே இட மில்லை. அது வழமை யாகிவிட்டது.

சிவன் கூறுகிறார்: அறியாமை என்ற இருளிலிருந்து விடுபட்டு பாதுகாக்கப்படுவதற்கு சதா ஞானம் என்றஎண்ணெயைஊற்றி ஆத்மாவை ஒளி ரச் செய்யுங்கள் ஏற்றப்பட்ட தீபத்தால் பிறரின் தீபத்தையும் ஏற்றுங்கள். ''மன்மனா பவ'' உங்களை ஆத்மாவாகக் கருதி சதா என்னை மட்டும் நினைவு செய்யுங்கள். பாவங்கள் அழிக்கப்படும். அதனால் நீங்கள் தூய்மையாகி தூய உலகான சுவர்க்கத்திற்கு செல்வீர்கள்.

இராஜயோக தியான மூலம் சிப்பி போன்று இருந்த எமது வாழ்வை சிவன் வைரம் போன்று மாற்றுகிறார். இதனால் தான் சிவனின்பிறப்பும்வைரம்போன்றதாகும். எனவே அவரின் ஞானத்தைக் கேட்டு பின்பற்ற நாமும் வைரமும் போன்று மேன்மையானவர்களாக ஆகுவோம்.

யாழ். பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம்.

# சிவராத்திரி விரதமிருந்து ஈழத்துச் சிதம்பரத்தான் நுகருமாறு சிறப்பான வீடுபெறு தருவார்

நன்றே யருளுஞ்
சிவனிராவின்
நான்கு சாமப்
போதெல்லா (ங்)
குன்றாப் பிறவிக்
குலமழித்து
வீடு கூட்டும்
பெருமாற்கு
மன்றற் லேசம் வளர்
நிராற்
பிறவான் முழுக்கும்
வழிபாடுந்
துன்றுந் தொண்டர்
விழித்த பயன்
றுய்க்கும் வண்ணஞ்
செய்வாரால்
(ஈழத்துச் சிதம்பர புராணம்)

உயிர்களுக்கு நன்மையைத் தருகின்ற சிவனது இரவென்று சொல்லப்படுஞ் சிவராத்திரியில் நான்கு சாமப் பொழுது முழுவதும் குறையாது பெருகும் பிறவிக் கூட்டத்தை அழித்து உயிர்களுக்கு வீடுபேறு அருளும் சுந்தரேசப் பெருமானுக்கு வாசனையுடையதும் குடங்களில் நிரப்பப்பட்டதும் ஆகிய கும்ப நீரினாலும் இளநீர், பால் முதலிய பிறவற்றினாலும் செய்யும் விசேட அபிஷேகத்தையும் ஆராதனையும் திண்ணபுரத்து மிக்க தொண்டர்கள் விரதமிருந்துவிழித்தற்குரிய பயனை நுகருமாறு சிறப்பாகச் செய்வார்கள்.

சிவராத்திரி விரதம் இருந்து வீடு பெற வேண்டும் என சிவபிரான் வரங் கொடுத்த வரலாறு

மாசி மாதத்து அபர பக்க சதுர்த்தசி கூடிய இராத்திரி சிவராத்திரி எனப்படும். மன்னுயிர்கள் உய்யும் பொருட்டு உமாதேவியார் நான்கு சாமமும் சிவ பூசை செய்த இரவாதலின் நன்றேயருளும் சிவனிரா என்றார். முன்னொரு கற்பத்தில் உலகம் முழுவதும் பிரளயம் மூடிய அந்த இராத்திரியில் மன்னுயிர்கள் உய்யும் பொருட்டுச் சிவ சக்தியாகிய உமாதேவியார் நான்கு சாமமுஞ் சிவ பூசை செய்து புலரிக் காலத்திற் சிவபெருமானை நோக்கித் தாம் வழிபட்ட இரவு சிவராத்திரியாக வேண்டும் என்றும் இந்த நாளில் விரதமிருந்து நான்கு சாமமும் பூசை செய்பவர்கள் வீடுபெரு வேண்டுமென்றும் வேண்டிக் கொள்ளச் சிவபிரான் அவ்வாறே வரங்கொடுத்தருளினார் என்பர் வரலாறு.

க.கு.க.சிவபாலன், போசகர்,
மாணிக்கவாசகர் மடாலாயம்.

# ரயிலுடன் மோதி இரண்டு மாதத்திற்குள் 64 பேர் பலி

(கொழும்பு)

ரயில் வழித்தடத்தில் பயணித்தல் தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதன்படி ரயில் வழித்தடத்தில் பயணிப்பவர்களைக் கைதுசெய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக ரயில் பாதுகாப்பு அதிகாரி அநுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

ரயில் வழித்தடத்தில் பயணிப்பதன் காரணமாக நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று பேரளவில் உயிரிழக்கின்றனர். இதற்கமைய, கடந்த இரண்டு மாதங்களுக்குள் மாத்திரம், 64 பேர் உயிரிழந்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், குறித்த விபத்துக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்க உள்ளதாக ரயில்வே பாதுகாப்பு அதிகாரி அநுர பிரேமரத்ன தெரிவித்துள் ளார்.

ரயில் வழித்தடத்தில் பயணித்தல் மற்றும் தொலைபேசிகளைப் பயன்படுத்தியவாறு பயணித்தல் என்பனவே இந்த விபத்துகள் ஏற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளன.

புதிய இயந்திர ரயில்கள் பாரியளவு சத்தமின்றி பயணிக்கின்றன. எனவே, ரயில் வழித்தடத்தில் பயணிக்கும் ரயில்கள் குறித்து அதிகளவு அவதானம் ஏற்படாது.

இவ்வாறான நிலைமைகளைக் கருத்திற்கொண்டே இந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)

# இலங்.மக்கள் ஜப்பான் மீது விருப்பம் கொண்டுள்ளனர்

## சஜித் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கை மக்கள் ஜப்பான் மீதும், அந்நாட்டு கலாசாரம் மீதும் மிகுந்த விருப்பம் கொண்டுள்ளதன் காரணமாக இலங்கை மக்களுக்கு ஜப்பானிய கலாசாரம் தொடர்பான தெளிவான புரிந்துணர்வை ஏற்படுத்த விசேட வேலைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதன் அவசியம் குறித்து வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற ஜப்பான் கலாசார நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகிரா சுஹியாமாவிடம் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்

இந்த நாடுகளுக்கு இடையிலான உறவு வலுப்படுவது கலாசார தொடர்புகளினாலேயே என்று தெரிவித்துள்ள அமைச்சர் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் நீண்டகால நட்புறவை மேலும் உறுதிப்படுத்தும் நோக்கில் இலங்கையில் ஜப்பான் கலாசார மத்திய நிலையம் மற்றும் மொழிக் கல்வி மத்திய நிலையத்தை அமைக்க நடவடிக்கை மேற் கொள்ளுமாறும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ கேட்டுக் கொண்டார். (7)

# மூன்று கோடி ரூபா பெறுமதியான வலம்புரி சங்குடன் ஒருவர் கைது

(பதுளை)

யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட அதிர்ஷ்டம் நிறைந்த வலம்புரி சங்குடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.



பதுளை, ஹாலிஎல, உடுவர பிரதேசத்திலுள்ள தேயிலைத் தோட்டத்தில் வைத்து மூன்று கோடி ரூபாய் பெறுமதியான வலம்புரி சங்கு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இதன்போது 40 வயது நபரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஊவா மாகாணத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது வலம்புரி சங்கு கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு செல்லப்பட்டதாகக் கூறப்படும் இந்த வலம்புரி சங்கு லயன் அறை ஒன்றிலுள்ள அரிசி பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

பொதுவான நபர் ஒருவரை அனுப்பி வைத்து இந்த வலம்புரி சங்கு கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்க அழைப்பு விடுத்தால் கலந்து கொள்ளத் தயார்

## மகிந்த அமரவீர அறிவிப்பு



(கொழும்பு)

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பான பேச்சுவார்த்தையை மேற்கொள்ள மக்கள் விடுதலை முன்னணி அழைத்தால் அதில் கலந்து கொள்ள தயார் என ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

அத்தோடு, நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாமலாக்குவது மாத்திரமின்றி தேர்தல் முறைமையிலும் மாற்றத்தை கொண்டுவர வேண்டிய அவசியமாகும்.

தேர்தல் முறைமையின் காரணமாக கடந்த தேர்தலில் பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன. எனவே இந்த விடயத்திலும் அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# போதைப்பொருள் காரணமாக மாணவர்களே அதிகம் பாதிப்பு

## இராஜாங்க அமைச்சர் வருத்தம்



(பதுளை)

நாட்டில் போதைப் பொருள் பாவனை காரணமாக பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளதோடு. இதனால் பாடசாலை மாணவர்களே அதிகம் பாதிக்கப்படுவதாக பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

பதுளை பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர், "போதைப்பொருள் பாவனையால் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. இதனால் பாடசாலை மாணவர்கள் பாதிப்படைந்து வருகின்றனர்.

இவர்களை பாதுகாக்க பாடசாலை நிர்வாகத்துடன் பெற்றோர்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

போதைப் பொருள் பாவனை தற்போது மலையக பாடசாலைகளிலும் பரவி வருவதாக தெரியவருகின்றது.

எமது மாணவர்களுக்கு இந்த விடயங்கள் புதிய வையாகும். ஆரம்பத்திலேயே இதனை கட்டுப்படுத்த வேண்டும்.

மாணவர்கள் அதனை விரும்பி செய்வதில்லை. விற்பனை செய்பவர்களே மாணவர்களிடம் இவ்வாறான விடயங்களை திணித்து வருகின்றனர்.

அது அவர்களின் வியாபார உக்தி" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 20 ஆவது திருத்த சட்டமூலத்திற்கு மகிந்த ஆதரவு வழங்குவது தவறு

## பெங்கமுவ நாலக தேரர் எதிர்ப்பு



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியினால் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு எதிர்பார்த்துள்ள 20 ஆவது திருத்தச் சட்ட மூலத்திற்கு முன்னாள் ஜனாதிபதி எந்தவகையிலும் ஆதரவு வழங்கக் கூடாது எனவும் அவ்வாறு அவர் ஆதரவு வழங்கவுள்ளதாக அரசியல் கட்சிகள் சில தெரிவித்து வருவது உண்மையாக இருந்தால், அது தவறானது எனவும் பெங்கமுவே நாலக தேரர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் 20 ஆவது திருத்தச் சட்ட மூலம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே தேரர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

20 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு திட்டத்தையே ஜே.வி.பி. நிறைவேற்ற முயற்சிக்கின்றது.

நாட்டுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை முக்கிய தேவையாகவே உள் ளது. இந்த ஜனாதிபதி முறைமை இருந்த காரணத்தினால் தான் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் யுத்தத்தை வெற்றி கொள்ள முடிந்தது எனவும் மகிந்த ராஜபக்ஷ வுடன் இணைந்து செயற்பட்டு வரும் முக்கிய தேரர்களில் ஒருவரான பெங்கமுவே நாலக மேலும் தெரிவித்தார். (இ-7)

# கொக்கெய்ன் போதைப்பொருளுடன் வெளிநாட்டவர்கள் உட்பட மூவர் கைது

(கொழும்பு)

கல்கிஸ்ஸ-பேக்கரி சந்தியில் கொக்கேய்ன் போதைப் பொருளுடன் வெளிநாட்டவர்கள் இருவர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேகநபர்கள் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து 32 கிராம் 32 மில்லிகிராம் கொக்கேய்ன் போதைப் பொருள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

26 வயதுடைய ஸ்நஜீரிய நாட்டவர்கள் இருவரும் 40 வயதுடைய மொரட்டுவ பகுதியைச் சேர்ந்த ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7)

# இரு இளைஞர்களின் சடலங்கள் கண்டெடுப்பு

(வெலிகம)

வெலிகம பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய நேற்று முன்தினம் சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் வெலிகம - பொல்வத்தை பகுதியில் இளைஞர்கள் இருவரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் வெலிகம பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி தெரிவிக்கையில்,

சடலங்கள் மீட்கப்பட்ட பகுதியில் கட்டட நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில், அதில் கொங்கிறீட் இடும் பணிகளில் ஈடுபடும் இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்.

கொங் கிறீட் இடும் பணிக்காக தோண்டப்பட்டிருந்த நீர் நிரம்பிய குழியினுள் தவறுதலாக வீழ்ந்து இரு இளை ஞர்களும் உயிரிழந்திருக் கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இதனடிப் படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (7)

# மத்தளவை இந்தியாவுக்கு வழங்க இந்தவாரம் அமைச்சரவையில் முடிவு

(கொழும்பு)

மத்தள விமான நிலையத்தின் செயற்பாடுகளை கையாளும் பொறுப்பை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக, இந்த வாரம் அமைச்சரவை முடிவு செய்யும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

மத்தள விமான நிலையத்தை இயக்கும் பொறுப்பை இந்தியாவின் விமான நிலையங்கள் அதிகார சபையிடம், கையளிப்பது தொடர்பான, அமைச்சரவைப் பத்திரம் இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நட்டத்தில் இயங்கி வரும், மத்தள விமான நிலையத்தை, இந்தியாவிடம் ஒப்படைப்பது குறித்து கடந்த ஆண்டு தொடக்கத்தில் இந்தியாவுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுக்களை நடத்தியது. பின்னர், இந்தப் பேச்சுக்கள் முடங்கிப் போயின.

இந் நிலையிலேயே மத்தள விமான நிலையத்தின் செயற்பாடுகளை கையாளும் பொறுப்பை இந்தியாவுக்கு வழங்குவது தொடர்பாக, இந்த வாரம் அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது. (இ-7)

# குளத்திற்கு அருகில் பெண்ணின் சடலம்!

(புத்தளம்)

சிலாபம் பரப்பன்முல்ல, முஹூனுவட்டவான பிரதேசத்தில் உள்ள குளத்திற்கு அருகில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த பெண் ஒருவரின் சடலத்தை நேற்று முன்தினம் மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் இவ்வாறு பெண்ணொருவரின் சடலம் ஒன்று கிடப்பதாக சிலாபம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இந்த தகவலின் அடிப்படையில், குறித்த பிரதேசத்திற்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டதுடன், விசாரணைகளையும் ஆரம்பித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்ட பெண்ணின் உடலில் தீக்காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்

சம்பவம் தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (7)

# இந்தியா - இலங்கை பயணிகள் கப்பல் சேவை இன்னமும் திட்டமிடல் நிலையில்தான்-அமரதுங்க

(கொழும்பு)

இந்தியா- இலங்கை இடையிலான, பயணிகள் கப்பல் சேவை இன்னமும் ஆரம்ப திட்டமிடல் நிலையிலேயே இருப்பதாக, இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மீண்டும் படகுச் சேவையை ஆரம்பிப்பது குறித்து, இந்தியாவுக்கான இலங்கை தூதுவர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, இந்திய



அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார் என்று இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் படகு சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டால், இலங்கை சுற்றுலாத் துறையை பெரிதும், ஊக்குவிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.


இந்தியாவிலிருந்து அதிகளவு சுற்றுலாப் பயணிகள், இலங்கை வரும் வாய்ப்புக்கிடைக்குமென்றும்அவர்மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

185




இந்தச் சபையில் ரி. கைலாச பிள்ளை செயலாளராகவும், ரி. பொன்னம்பலபிள்ளை, வி. காசிப்பிள்ளை, எம்.எஸ். பசுபதிச்செட்டியார், செல்லப்பா பிள்ளை, கனகசபைப்பிள்ளை, வி.முத்துவேற்பிள்ளை, எம். பசுபதி ஐயர், சபாபதிப் பிள்ளை ஆகியவர்கள் நிர்வாக சபை அங்கத்தவர்களாகவும் இருந்தனர்.

குறுகிய காலத்தினுள் இச் சபையின் பல அங்கத்தவர்களாகவும் இருந்தனர். குறுகிய காலத்தினுள் இச் சபையின் பல கிளைகள் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலும் குறிப்பாகக் கிழக்கு மாகாணத்திலும் கொழும்பிலும் உருவாக்கப்பட்டன. கூட்டுறவு முறையில் மேற்கொள்ளப்பட்ட இம் முயற்சியின் இயல்பு நாவலரால் ஆரம்பிக்கப்பட்ட சிறியதொரு திட்டத்தைச் சக்தி மிக்க அமைப்பாக விருத்தி செய்தது என்பதைக் காட்டுகின்றது.

வேறு வார்த்தைகளிற் சொல்வதாயின், தமது சொந்த மதம் கலாசாரம் மொழி என்பவற்றின் புராதன பாரம்பரிய விழுமியங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவதை இலங்கைத் தமிழர் தமது கடமையாக ஏற்றுக் கொண்டதைத் தமது ஒற்றுமையின் இலங்கைத் தமிழர் தமது கடமையாக ஏற்றுக் கொண்டதை தமது ஒற்றுமையின் மூலம் வெளிக்காட்டினர் என்பதாகும்.

சைவசமயக் கோட்பாட்டின் உண்மையை முழுச் சமூகத்திற்கும் போதிப்பதே இச் சபையின் பிரதான நோக்கமாக இருந்தது. இதை அடைவதற்காக அவர்கள் தமிழ்க் கிராமங்களில் ஆங்கில, தமிழ் பாடசாலைகளை நிறுவி வெகுசனத்திற்கு கல்வியூட்டியதுடன் சிறு நூல்கள், துண்டுப்பிரசுரங்கள் என்பனவற்றையும் பதிப்பித்து அவற்றை தமிழ்ப் பிரதேசமெங்கும் விநியோகித்தனர். பின்னர் இச் சபை தனது குறிக்கோள்களை விரிவுபடுத்திக் கொண்டது. இந்து ஓகனில் வெளியான பின்வரும் கூற்று இதைத் தெளிவாகக் காட்டுகின்றது.

சைவசமயத்தின் உண்மைகளையும் கொள்கைகளையும் எல்லா இடங்களுக்கும் சென்று போதிக்கக் கூடிய திறமைமிக்க ஊழியர்கள் இந்து சமூகத்தின் சமய, சமூக, அரசியல் ஆர்வங்களை வெளியிடுவதற்கான காலக்கிரமமான ஒரு பத்திரிகை சமய ஒழுக்கநெறி, விஞ்ஞானம் என்பனவற்றுடன் ஏனைய ஆக்கங்களையும் கொண்டதொரு பொது நூல்நிலையம் சமயம் சார்ந்ததும், சமயம் சாராததுமான உயர்மட்டக் கல்வியை அளிக்கக் கூடிய் ஆங்கில உயர்பாடசாலை எனும் தேவைகள் வெகுகாலமாகவே இந்து சமூகத்தினால் உணரப்பட்டுள்ளன.

இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குச் சைவபரிபாலன சபை மனமுவந்து முன்வந்துள்ளது. எமது இனத்தின் சமய, சமூக, அரசியல் நலன்களை இச் சபை சிறப்பாக முன்னெடுக்கும் என்பது ஆவலுடன் நம்பப்படுகின்றது. இவற்றை ஆரம்பிப்பதற்கு 60000 ரூபாய்கள் சபைக்குத் தேவையென அதனால் கணிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்கச் சபையின் பெயரால் அதைப் பிரதிநிதிப்படுத்தும் வகையில் நிர்வாக அங்கத்தினர் தேவைப்படும் நிதிக்கெனப் பணம் சேகரிக்க ஆரம்பித்துள்ளனர். எமது சமயம், நாடு, சமூகம் என்பவற்றின் நலன் விரும்பிகளும் நண்பர்களும் இப்போது சேகரிக்கப்படும் இந்த நிதிக்குத் தாராளமாக உதவி, மேற்படி சங்கத்தினால் முன்னெடுக்கப்படும் உயர்ந்த நோக்கம் கொண்ட திட்டத்துடன் தம்மை இணைத்துக் கொள்ளும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

இந்தக் கூற்றில் தெரிவிக்கப்பட்ட சில விடயங்கள் இங்கு எமது ஆய்வுக்கு முக்கியமாக உள்ளன. ஆரம்பத்தில் இச் சபையின் பிரதானமானதும் முதலாவதுமான நோக்கம் சமய, கல்வி, கலாசாரம் என்ற துறைகளை மட்டுமே கொண்டதாகவிருந்தது.

ஆனால் சமயம், சமயம் சாராத விஞ்ஞான அறிவு என்பவற்றை தமிழ்ச் சமூகத்தினரிடையே விரிவாக்கம் செய்வதற்கு ஒரு பத்திரிகையையும் ஒரு நூலகத்தையும் நிறுவவேண்டுமென்பதில் சபை அக்கறை கொண்டிருந்தது என்பது இக் கூற்றினால் அறியப்படுகின்றது. சைவத்தமிழ் பாடசாலைகள் ஏற்கனவே நன்கு நிறுவப்பட்டு, அவை மேலும் விரிவாக்கம் செய்யப்பட வேண்டும் என்பது அவர்களுடைய எண்ணமாக இருந்த நிலையில் இந்த மேலதிக குறிக்கோள் ஒரு வகையில் தவிர்க்கமுடியாத நடவடிக்கையாக இருந்தது.

1872 இல் நாவலரால் ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலை நிறுவப்பட்டு, இரண்டு ஆண்டுகளின் பின்னர் அது நிதிப் பற்றாக் குறையினாலும் வேறு சிரமங்களினாலும் மூடப்பட்டது. இருந்தபோதிலும் சைவபரிபாலன சபை 1890 இல் ஓர் இந்து ஆங்கில உயர்தர பாடசாலையை நிறுவி, பின் 1891 இல் அங்கே விடுதிச்சாலை வசதிகளை ஏற்பாடு செய்து ஈற்றில் 1895 இல் அது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியானபோது நாவலரின் கனவு பூரணமாக நிறைவேறியது.

வெளியீட்டுச் செயற்பாடுகளைப் பொறுத்தவரையில் ஆரம்பத்தில் சிறு நூல்களையும் துண்டுப் பிரசுரங்களையும் மட்டும் வெளியிடச் சபை திட்டமிட்டிருந்த போதும் பின்னர் இரு மொழிகளில் இந்து சாதனம் (தமிழ்), இந்து ஓகன் (ஆங்கிலம்) ஆகிய பத்திரிகைகள் 1889 இல் சங்கத்தினால் வெளியிடப்பட்டு அதன் நடவடிக்கைகள் விரிவாக்கமடைந்தன.

(தொடரும்)

"1872 இல் நாவலரால் ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலை நிறுவப்பட்டு இரண்டு ஆண்டுகளின் பின்னர் அது நிதிப் பற்றாக்குறையினாலும் வேறு சிரமங்களினாலும் மூடப்பட்டது. இருந்த போதிலும் சைவபரி பாலனசபை1890 இல் ஓர் இந்து ஆங்கில உயர்தர பாடசாலையை நிறுவி பின் 1891 இல் அங்கே விடுதிச்சாலை வசதிகளை ஏற்பாடு செய்து ஈற்றில் 1895 இல் அது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியானபோது நாவலரின் கனவு பூரணமாக நிறைவேறியது"

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

# தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டாலும் அமைச்சரவை அதிகரிப்பதில் உடன்பாடில்லை

## ஏரான் எதிர்ப்பு



(கொழும்பு)
நாட்டின் நலன் கருதி தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டால் அதனை தவறு எனக் கூற முடியாது. ஆனால் அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக தேசிய அரசாங்கம் அமைக்கப்படுமாக இருந்தால் அதில் தனக்கு உடன்பாடில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டால் அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியும் என 19 ஆம் அரசியலமைப்பு சீர்திருத்தத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது அதனையொரு தடையாகவே நான் கருதுகின்றேன். அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகரிப்பதை மாத்திரம் நோக்காகக் கொண்டு தேசிய அரசாங்கம் அமைக்கப்படுதல் தவறானதொரு விடயமாகும்.

கடந்த காலங்களில் திட்டமிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப்படாத அபிவிருத்தி திட்டங்களை முழுமையாக நிறைவு செய்வதற்கு அரசாங்கத்திற்கு மிகக் குறுகிய காலமே காணப்படுகின்றது. எனவே அவற்றை முழுமையாக செய்து முடிப்பதற்காக தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டால் அதனை ஏற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் வேறு தொழில்களினும் ஈடுபட முடியும். எனினும் அவர் அமைச்சராகவும் இருப்பின் வேறெந்த தொழில்களிலும் ஈடுபட முடியாது என்ற நிலையொன்று உருவாக்கப்பட வேண்டும். இவ்விடயம் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் போது ட்ரான்பெரன்சி இன்டர்நஷனல் அமைப்பினால் கோரப்பட்டதற்கு அமைய தமது சொத்து விபரங்களை பகிரங்கமாக அறிவித்திருந்தமை தொடர்பில் தெரிவித்த அவர்,

அரசியலில் ஈடுபடுவதன் மூலம் பொதுச் சொத்துக்களை கொள்ளையிடவும், ஊழலில் ஈடுபடவும் முடியும் என்பதே பலரின் அபிப்பிராயமாக உள்ளது. எனினும் அத்தகையதொரு அரசியல் கலாசாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கே நாங்கள் அனைவரும் தற்போது முன்வந்திருக்கின்றோம். நாங்கள் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள். எமக்குள் கொள்கை ரீதியான வேறுபாடுகள் இருக்கின்றன. எனினும் ஊழலை ஒழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எம்மனைவருக்கும் மாற்றுக்கருத்துக்கள் இல்லை.

அத்தோடு வருடாந்தம் சமர்ப்பிக்கப்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விபரங்களைப் பொறுத்தவரை, அவர்கள் அமைச்சரவை அமைச்சர்களாக இருப்பின் தமது விபரங்களை ஜனாதிபதியிடமும், பாராளுமன்ற உறுப்பினராக மாத்திரம் இருப்பின் தமது விபரங்களை பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இந்நிலையிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என மேலும் தெரிவித்தார். (7)

# எமது ஆட்சியில் மக்களுக்கு மத ரீதியிலான சுதந்திரத்தை அதிகமாக வழங்குவோம்

## கோத்தபாய உறுதி



(கொழும்பு)
எதிர்காலத்தில் அமையவுள்ள தங்களது அரசாங்கத்தில், நாட்டிலுள்ள அனைவருக்கும் மத ரீதியிலான சுதந்திரம் அதிகமாக வழங்கப்படுமென முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்தோடு தாம் இனவாதிகள் அல்ல என்றும் எந்த இனம் அல்லது மதத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்த நாட்டை நேசிப்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற எலிய அமைப்பின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "எமது அரசாங்க காலத்தில், இந்த நாட்டில் உள்ள அனைத்து பிரஜைகளும் கௌரவமாக வாழக்கூடிய வழிவகைகளை நாம் ஏற்படுத்துவோம்.

எதிர்காலத்தில் அமையவுள்ள எமது அரசாங்கத்தில், அனைத்து மக்களுக்கும் சம உரிமை வழங்குவதே பிரதான கொள்கையாக இருக்கும்.

நாம் கடந்த காலங்களில் ஏதேனும் ஒரு செயற்பாட்டை செய்திருந்தால், அது எமது தனிப்பட்ட தேவைக்காக அன்றி, நாட்டின் நலனுக்காக பாதுகாப்புச் செயலாளர் என்ற வகையிலேயே மேற்கொண்டிருந்தோம். பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியிலேயே நாம் இதனை செய்திருந்தோம்.

எனினும், எமக்கெதிராக பொய்ப்பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், தற்போது அனைவருக்கும் உண்மை தெரிய வந்துள்ளது. நாம் இனவாதிகள் அல்ல" என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (7)


# நீர்வீழ்ச்சிக்கு அருகிலுள்ள காட்டுப் பகுதியில் பாரிய தீ

(திம்புள்ள)
திம்புள்ள-பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹற்றன் -நுவரெலியா பிரதான வீதியில் டெவோன் நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில் உள்ள காட்டுப்பகுதியில் தீ பற்றியுள்ளது.

நேற்றுமுன்தினம் மதியம் 1.30 மணியளவில் தீ பரவியதன் காரணமாக இந்தப் பகுதியில் 10 ஏக்கர் முற்றாக எரிந்து நாச மாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

யாராவது இப்பகுதிக்கு தீ வைத்திருப்பதாக திம்புள்ள - பத்தனை பொலிஸார் சந்தேகப்படுகின்றனர்.

மலையகத்தில் தற்போது காணப்படும் அதிக வெயில் காரணமாக நீர் நிரம்பி காணப்படும் பல பகுதிகளில் கடந்த இரண்டு வாரகாலமாக இவ்வாறு தீ



வைப்பதன் காரணமாக குடிநீர்க்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1660

### அபி

மரணவாயிலில் நின்றாலும்கூட எதிரி முன் அழாதே... அவனுக்குத் தேவை உன் மரணம் அல்ல... உன் அழுகைதான்



### பானு

சம்பவம் நடந்திடுச்சு... என்னது Rowdy Baby பாட்டையும் சிங்களத்துல மாத்தி அடிச்சிட்டானுங்களா? ஐயோ இனி பஸ்ல போறப்போ அதையே போட்டு சாகடிப்பானுங்களே



### லக்சி

சத்தமின்றி அழுகின்ற உயிர் எது தெரியுமா? இதயம் தான்... உண்மையாக நேசித்துப் பாருங்கள் புரியும்



### நந்தினி

சமையல் அறைக்குள் கொளுந்து விட்டு எரிகின்றது பெண்களின் கனவு



### கணேசன்

மனிதத்திற்கு ஏது மதம்



### சரஸ்வதி

ஐயோ இந்த மாசமே இப்படி வெயில் கொளுத்துதே இன்னும் மார்ச், ஏப்ரல் எல்லாம் என்ன ஆகப்போகுதோ?



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# "இலங்கையில் இனி இடம்பெறக்கூடாது"

## காணாமல் போனார் அலுவலகத்தின் தலைவர் வலியுறுத்து

(மாத்தறை)

ரத்கமையில் இரு வர்த்தகர்கள் பொலிஸாரால் காணாமலாக்கப்பட்டமை போன்ற சம்பவமானது இலங்கையில் மீண்டும் இடம்பெறக் கூடாது என்பதை உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாக காணாமல்போனோர் அலுவலகத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.



மாத்தறையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

ஏற்கனவே நல்லிணக்கம் தொடர்பில் எமது அலுவலகம் பரிந்துரைகளை செய்துள்ளது.

இதனை ஏற்றுக்கொண்டு அரசாங்கம், இடைக்கால நிவாரணங்களை போரினால் காணாமலாக்கப்பட்டவர்கள் விடயத்தில் வழங்க வேண்டும்.

இதன்போதே தமது குடும்பங்களுக்கு பொருளாதாரத்தை தேடி தந்தவர்கள் காணாமல்போயிருந்தால் அந்த குடும்பங்கள் ஆறுதலடைய முடியும்.

இதேவேளை காணாமல் போனோர் அலுவலகம், ஜெனிவாவையோ அல்லது ஏனைய வெளி சக்திகளையே சமாதானப்படுத்தும் அமைப்பு அல்ல எனத் தெரிவித்துள்ளார். (இ-7)

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையே சிறுபான்மையினருக்குள்ள ஒரே பலம்!

## முன்னாள் அமைச்சர் அதாவுல்லா கூறுகிறார்




(அக்கரைப்பற்று)

இந்த நாட்டில் சிறுபான்மையினருக்குள்ள ஒரே பலம் நிறைவேற்று -அதிகாரம் கொண்டஜனாதிபதிமுறைமை ஒன்றுதான். அதனை இல்லாதொழிக்க பலர் முயற்சிக்கிறார்கள்.

சிறுபான்மையினரை அடக்கிஒடுக்குவதே அதற்கான காரணமாகும் என்று முன்னாள் அமைச்சரும் தேசிய காங்கிரஸ் தலைவருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

எழுத்தாளர் இலக்கியமாமணி மர்ஹூம் அ.ஸ.அப்துஸ்ஸமது நினைவாக அவரின் மகன் அ.ஸ.அகமட்கியாஸ் எழுதிய "எல்லாப் பூக்களுமே அழகுதான்" என்ற வாழ்வியலுக்கான அறிவியல் சிந்தனை நூலின் வெளியீட்டுவிழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மணிப்புலவர் மருதுர் ஏ மஜீட் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் அக்கரைப்பற்று அதாவுல்லா அரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில்அவர் மேலும் தெரிவிக்கையில்,

இஸ்லாமிய தமிழிலக்கியத்தை இலக்கியப்பரப்பினில் அறிமுகப்படுத்திய பெருமை இந்த மண்ணின் பெருமகன் அ.ஸ.அப்துல்சமது என்ற இலக்கிய ஆளுமைக்கே சாரும். உலகில் எத்தனையோபேரது பேச்சுக்களைக் கேட்டிருக்கிறேன்.

ஆனால் அவரது பேச்சு மட்டும்தான் எனக்குப் பிடிக்கும். அவரிடம் நான் தமிழ் சமயம் படித்திருக்கிறேன். அவரது முன்வைப்பென்பது அலாதியானது.

உலகின் மூத்த மொழியான தமிழைப் பேசுகின்றவர்களில் முஸ்லிம்கள் முதன்மையானவர்கள். முதன் முதலில் ஆதம் நபி பேசியதும் தமிழ்தானா என்ற ஆய்வும் தொடர்கிறது.

சிவனொளிபாத மலையை அனைத்து மதத்தினரும் மதிக்கிறார்கள். ஆனால் அந்த மலை யாருக்குச்சொந்தம் என்று கேட்டால் அனைவருக்கும் தான் எனப்பதில் வரும். இப்படிப்பல. இவை தான் உலகம் இலங்கையை திரும்பிப்பார்க்க வைத்த அம்சமெனலாம்.

இந்த நாட்டில் சிறுபான்மையினருக்குள்ள ஒரே பலம் நிறைவேற்று அதிகாரம் கொண்டஜனாதிபதிமுறைமை ஒன்றுதான். அதனை இல்லாதொழிக்க பலர் முயற்சிக்கிறார்கள். சிறுபான்மையினரை அடக்கி ஒடுக்குவதே அதற்கான காரணமாகும்.

நாம் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறோம். ஆனால் கிடைத்த சுதந்திரத்தை இழந்து கொண்டிருக்கிறோம் என்ற உண்மையைப் பலரும் அறியத் தவறியுள்ளனர். நாம் விழிப்பாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# லால்காந்தவுக்கு விளக்கமறியல்



(அநுராதபுரம்)

விபத்தொன்றின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி லால்காந்தவை எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

அநுராதபுரம் பிரதேசத்தில் கே.டி லால்காந் ஓட்டிச் சென்ற வாகனம் விபத்துக்குள்ளான சம்பவம் தொடர்பிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

இவரை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்திய போது மது போதையில் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.


லால்காந்த ஓட்டிச் சென்ற கெப் ரக வாகனம் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதியதில் அதில் பயணித்த இரண்டு பெண்கள் காயமடைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கொடிகமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 80 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 120 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 220 | 200 |
| தக்காளி | 60 | 50 | 30 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 | 80 |
| கோவா | 30 | 50 | 50 | 60 |
| கரட் | 80 | 100 | 80 | 140 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 |
| புடோல் | 60 | 50 | 70 | 80 |
| வாழைக்காய் | 80 | 50 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 50-120 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 120 | 120 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 40 | 80 |
| பயற்றங்காய் | 120 | 120 | 80 | 120 |
| லீக்ஸ் | 80 | 100 | 70 | 120 |
| பீற்றூட் | 50 | 50 | 30 | 60 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 300 | 280 | 400 |
| போஞ்சி | 80 | 90 | 70 | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | — | 60 | 100 |
| கீரை - 1பிடி | 20 | 50 | 20 | 30 |
| தேசிக்காய் | 60 | 80 | 50 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30-50 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 140 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 50 | 90 | 40 | 120 |
| முள்ளங்கி | 40 | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 20 | 15 | 20 |
| ஈரப்பலா | — | 40 | 100 | 80 |

# செய்தித்துளிகள்

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை



(கொழும்பு)

மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் வான்கதவுகள் அனைத்தும் நாளை 5 ஆம் திகதி வரை திறந்து விடப்பட்டுள்ளதாக மேல்கொத்மலை நீர்த்தேக்க பொறியியலாளர்கள் தெரிவித்துள்ளனர். தற்போது மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் பழுது பார்க்கும் வேலைகள் இடம்பெற்று வருகின்றமையால் இந்த வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன.

இந்நிலையில் வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதால் நீர்மட்டம் குறைந்துள்ளமையால் பொதுமக்கள் நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதிகளில் நடமாடுவதையும் அதில் இறங்குவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் மிகவும் அவதானமாக செயற்படுமாறும் மேல் கொத்மலை நீர்த்தேக்க பொறியியலாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (இ-7)

## விஷ்ணு கோயிலில் தீ விபத்து

(கதிர்காமம்)

கதிர்காமம் விஷ்ணு கோயிலில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நபரொருவர் தனக்குத் தானே தீ மூட்டிக்கொண்டதால் இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாமென பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த நபர் காயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-7)

## 188 மீன்பிடி வலைகள் கடற்படையினரால் மீட்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பில் கிழக்கு கடற்படை கட்டளை தலைமையகத்தால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது தடைசெய்யப்பட்ட 188 சட்ட விரோத மீன்பிடி வலைகள் மீட்கப்பட்டுள்ளன. மீட்கப்பட்டுள்ள மீன்பிடி வலைகளில் 150 அடி நீளமான 9 வலைகளும், 100 அடி நீளமான 179 வலைகளும் உள்ளடங்குவதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்டுள்ள சட்டவிரோத மீன்பிடி வலைகள் மேலதிக விசாரணைகளுக்காக மட்டக்களப்பு உதவி மீன்வள பரிசோதனை நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (இ-7)

## விமான சேவைகள் இடம்பெறாது

(கொழும்பு)


பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையிலான விமான சேவைகள்* இன்றுவரை இடம்பெற மாட்டாது என ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இந்தியாவிற்கு இடையிலான பதற்ற நிலையையடுத்து பாதுகாப்பு காரணமாக விமானப் போக்குவரத்து சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

பாகிஸ்தானின் வான்பரப்பு மீண்டும் திறக்கப்படும் பட்சத்தில் இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கு இடையிலான விமான சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனவும் ஸ்ரீலங்கன் விமான நிறுவனம் அறிவித்துள்ளது. (இ-7)




# கண்டெடுத்த கடிகாரம்



மேட்டுப்பாளையம் என்னும் சிற்றூரில் கன்னையன் என்பவன் வாழ்ந்து வந்தான்.

அவனுக்கு சுகுமாரன், வளர்மதி என இரு குழந்தைகள். இருவரும் முறையே ஏழாவது வகுப்பும் மூன்றாவது வகுப்பும் அந்த ஊரில் உள்ள அரசு பள்ளியிலேயே படித்து வந்தார்கள். அவர்கள் வசித்து வந்த ஊர் பெரிய நகரமும் இல்லாமல் சிறிய கிராமமும் இல்லாமல் நடு நிலையாக இருந்தது. அங்குள்ள பள்ளியில் எட்டாவது வகுப்பு வரை இருந்தது.

சுகுமாரன் ஓரளவு நன்றாக படிப்பான். வளர்மதியும் நன்றாக படிப்பவள். இருந்தாலும் கன்னையன் ஒரு ஏழை. அவன் அங்குள்ள விவசாய தோட்டங்களில் கூலிக்கு வேலை செய்பவன். அவன் மனைவியும் அவனுடன் கூலி வேலைக்கு செல்பவள் இவர்களால் இருவரையும் இந்தளவுக்கு படிக்க வைப்பதற்கே மிகவும் துன்பப்பட்டார்கள். எப்படியாவது இவர்கள் இருவரையும் படிக்க வைக்க வேண்டும் என்று அடங்காத ஆவலுடன் இருந்தார்கள். ஆனால் அவர்களின் வறுமை அந்த குழந்தைகளை மேலும் படிக்க வைக்க முடியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தது.

அவர்கள் பள்ளி தலைமை ஆசிரியர் பெயர் மெய்யப்பன். அவர் மிகவும் கண்டிப்பானவர். பள்ளிக்கு சரியான நேரத்துக்கு வந்து விட வேண்டும். உடைகள் சுத்தமாக போட்டிருக்க வேண்டும். இரண்டையும் கண்டிப்பாக கடைப்பிடிப்பதில் உறுதியானவர்.

சுகுமாரனும் வளர்மதியும் சில நேரங்களில் தோட்டத்தில் பூ பறிக்கும் வேலைக்கு செல்வர். விடியற்காலையில் பூ பறிக்க ஆரம்பித்து, எட்டு மணி வரை பூ பறித்து கொடுத்தால் ரூபாய் இரண்டு கிடைக்கும். இது அவர்கள் குடும்பத்திற்கு பேருதவியாக இருக்கும். அதன் பின்னரே இருவரும் வீட்டுக்கு வந்து பள்ளிக்கு கிளம்புவார்கள்.

இதனால் சில நேரங்களில் நேரம் தவறி பள்ளிக்கு செல்வதுண்டு. இதனால் பள்ளி தலைமையாசிரியர் மெய்யப்பனிடம் தண்டனைகள் பெற்றதுண்டு.

தலைமையாசிரியர் மெய்யப்பனிடம் அந்த ஊர் ஆட்கள் மிகுந்த மரியாதை வைத்திருந்தனர். ஊர் பிரச்சினைகள் எதுவானாலும் ஊர்க்காரர்கள் தலைமையாசிரியரிடம் ஒரு வார்த்தை கேட்டுத்தான் செய்வார்கள். வாத்தியார் என்ன சொல்றாரு? என்று கேட்பார்கள்.

ஒரு நாள் சுகுமாரனும் அவன் தங்கையும் விடியற்காலையில் தோட்டத்தில் "பூ" பறிக்க பாதை வழியே நடந்து வந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது வழியில் 'கை கடிகாரம்' ஒன்று கிடந்தது. இருவரும் ஆச்சரியத்துடன் அதை எடுத்து பார்த்தனர். கடிகாரம் விலை உயர்ந்ததாய் இருந்தது.ஆனால் இவர்களுக்கு அதைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. ஆனால் கடிகாரத்தின் அழகு அவர்களை கவர்ந்தது.

இதை வீட்டுக்கு கொண்டு போகலாமா என்று சுகுமாரனின் தங்கை கேட்கவும், வேண்டாம், இதை யாரோ இந்த வழியா போனவங்க கையில இருந்து கழண்டு விழுந்திருக்கணும். நாம காலையில ஸ்கூலுக்கு போய் நம்ம வாத்தியாருகிட்ட கொடுத்து விடுவோம், என்று சொல்லிவிட்டு அதை தன் கால் சட்டையில் போட்டுக்கொண்டு இருவரும் "பூ" பறிக்க தோட்டத்துக்கு சென்று விட்டனர்.

பூ பறித்து கொடுத்து கூலியை பெற்றுக்கொண்டு வந்த இருவரும் அவர்கள் அம்மாவிடம் கொடுத்துவிட்டு, அவசர அவசரமாய் பள்ளிக்கு கிளம்பி விட்டனர். ஆனால் அந்த கை கடிகாரத்தை வீட்டில் குளிப்பதற்கு முன் ஒரு இடத்தில் வைத்த சுகுமாரன் பள்ளிக்கு செல்லும் அவசரத்தில் அதை மறந்து விட்டான்.

இவர்கள் பள்ளிக்கு சென்ற பின் தான் ஞாபகம் வந்தது கை கடிகாரத்தை வீட்டிலே விட்டு வந்தது. சரி நாளை எடுத்து வந்து கொடுத்து விடலாம் என்று சமாதானம் செய்து கொண்டான் சுகுமாரன்.

அன்று அந்த ஊரில் பொலிஸ் வண்டிகள் வந்தும் போய்க் கொண்டும் இருந்தன.

பள்ளி நடந்து கொண்டிருக்கும்பொழுதே அந்த வண்டிகள் செல்வதை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தனர். மாலை வீட்டிற்கு வந்த பின்னால் அவர்கள் அப்பா கன்னையன் தான் சொன்னார், நம்ம பக்கத்து ஊர்ல இருக்கற கோயில்ல இருந்து சிலைகளை யாரோ கடத்திட்டு போயிட்டாங்களாம். அதனால் தான் பொலிஸ்நம்ம ஊரு வழியா வந்துட்டும் போயிட்டும் இருக்கு.

காலை வழக்கம்போல பள்ளிக்கு கிளம்பும் போது ஞாபகமாய் அந்த 'கை கடிகாரத்தை" எடுத்து புத்தக பையில் போட்டுக்கொண்டான்.

வகுப்பு ஆசிரியரிடம் தான் பாதையில் கண்டெடுத்த கை கடிகாரத்தை கொடுத்தான். அவர் அவனையும்அழைத்துக்கொண்டு தலைமையாசிரியர் மெய்யப்பனிடம் அழைத்து சென்று இந்த கடிகாரத்தை கொடுத்து, விபரத்தை தெரிவித்தார்.

நன்கு யோசித்த மெய்யப்பன், உடனே சுகுமாரனையும்அழைத்துக்கொண்டு பொலிஸ் நிலையம் சென்று இந்த கைக்கடிகாரத்தை ஒப்படைத்து, விபரங்களை கூறினார்.

பொலிஸ் அதிகாரி சுகுமாரனை பாராட்டி அந்த கடிகாரத்தை பெற்றுக்கொண்டார்.

அதன் பின் சுகுமாரன் அந்த நிகழ்ச்சியை மறந்து விட்டான்.

சுமார் மூன்று மாதங்கள் ஓடியிருக்கும் ஒருநாள் தலைமையாசிரியர் சுகுமாரனை அழைப்பதாக பள்ளி பணியாள் வந்து சொல்லவும் வகுப்பு ஆசிரியர் சுகுமாரனை தலைமையாசிரியடம் அனுப்பினார்.

எதற்கு கூப்பிடுகிறார் என்று பயந்து கொண்டே அவர் அறைக்குள் நுழைந்தவன் அங்கு தலைமையாசிரியருடன் அன்று "கைக்கடிகாரத்தை" பெற்றுக்கொண்ட பொலிஸ் அதிகாரியும் இருந்தார். அவர் இவனை கண்டவுடன் எழுந்து அவன் கையை பற்றி குலுக்கு "வெல்டன் பாய்" உன்னால ஒரு திருட்டு கும்பலையே பிடிக்க முடிஞ்சது, என்று அவன் கையை குலுக்கினார்.

இவனுக்கும் ஒன்றும் புரியவில்லை, பிரமை பிடித்தவன் போல் நின்று கொண்டு இருந்தவனை தலைமையாசிரியர் அழைத்து அன்னைக்கு நீ ஒரு "கைக்கடிகாரத்தை" இந்த அதிகாரிகிட்ட கொடுத்தியில்லயா? அது பக்கத்து ஊர்ல கோயில் சிலை திருடுன கூட்டத்தில இருக்கற ஒருத்தனோடது. இவங்க அந்த கடிகாரத்தை வச்சே அந்த கூட்டத்தையே பிடிச்சுட்டாங்க. அதுக்குத்தான் உன்னை பாராட்டி விட்டு போகணும்னு வந்திருக்கறாங்க. அது மட்டுமல்ல அடுத்த வாரம் ஒரு விழா வச்சு உங்க அப்பா, அம்மா, உன் தங்கச்சி எல்லாத்தையும் கூப்பிட்டு பாராட்ட போறாங்க. சொல்ல சொல்ல சுகுமாரனுக்கு ஒரே சந்தோசமாகி விட்டது.

அடுத்த வாரத்தில் நடந்த விழாவில் சுகுமாரனுக்கு பாராட்டு மட்டுமல்ல, அவனுக்கும், அவன் தங்கைக்கும் எவ்வளவு படிக்க முடியுமோ அந்த அளவுக்கு அரசாங்கமே படிக்க வைக்கும் என்று அந்த மாவட்ட ஆட்சியர் அறிவித்து விட்டார்.

கன்னையனுக்கும் அவன் மனைவிக்கும் இதை விட ஆனந்தம் வேறேன்ன வேண்டும்.

## பொது அறிவு

- கிழக்கிலிருந்து மேற்காகச்சுற்றும் கோள்கள்?
  **வெள்ளி, யுரேனஸ்**
- மலர்என்றால்என்ன ?
  **மலர்/பூ என்பது இனப்பெருக்கத்திற்காக மாற்றுரு கொண்ட தண்டு**
- மிகப்பெரிய மஞ்சரியை (பூங்கொத்து) உடைய பூ எது?
  **சூரியகாந்தி**
- மஞ்சரிஎன்றால்என்ன?
  **ஒரே அச்சில் ஒன்றுக்கு மேற்பட்ட பூக்கள் கூட்டமாகக் காணப்படுதல் மஞ்சரி எனப்படும்**
- கார்த்திகைப் பூஎன்றும் அழைக்கப்படுவது?
  **காந்தள்** (Gloriosa)

## பழமொழி

**ஐந்து பெற்றால்**
**அரசனும் ஆண்டி ஆவான்**

பொருள்:

ஐந்து பெண்களை பெற்றெடுத்தால், அவர்களுக்கு செய்ய திருமணம், சீர் போன்றவற்றை செய்து முடிப்பதற்குள் அரசனும் ஆண்டி ஆண்டி ஆகிவிடுவான்.

**உண்மையான பொருள்:**

கீழ்க்கண்ட ஐந்தும் கிடைத்தால் அரசனும் ஆண்டி ஆவான். 1.ஆடம்பரமாய் வீழும் தாய், 2.பொறுப்பு இல்லாமல் போகும் தகப்பன், 3.ஒழுக்கம் தவறும் மனைவி, 4.துரோகம் செய்யும் உடன் பிறப்பு, 5.பிடிவாதம் பிடிக்கும் பிள்ளை. இந்த ஐந்தும் கொண்ட எந்தக் குடும்பமும் முன்னுக்கு வராது என்பதே பொருள்.

## லட்டும் தட்டும்



வட்டமான தட்டு.
தட்டு நிறைய லட்டு.
லட்டு மொத்தம் எட்டு.

எட்டில் பாதி விட்டு.
எடுத்தான் மீதம் கிட்டு.
மீதம் உள்ள லட்டு

முழுதும் தங்கை பட்டு
பேர்ட்டாள் வாயில், பிட்டு.
கிட்டு நான்கு லட்டு

பட்டு நான்கு லட்டு
மொத்தம் தீர்ந்த தெட்டு
மீதம் காலித் தட்டு!?

ஒன்றே குலம் என்று பாடுவோம்.
ஒருவனே தேவன் என்று போற்றுவோம்.
– வா புருயர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சைவனே! நீ விழிப்பதைவிட உறங்குவதையே சிவன் விரும்புவார்

இலங்கையில் சைவ சமயத்துக்கு ஆபத்து வந்துவிட்டது என்பதை கடந்த 20 வருடங்களாகக் கூறி வருகிறோம்.

அவ்வாறு கூறுவதுகூட சமயவாதம் என்று நம்மவர்கள் கூறினர்.

ஆனால் இன்று சைவ சமயத்துக்கான ஆபத்து எப்படியெல்லாம் சூழ்ந்து நிற்கிறது என்பதை நாம் கூறி யாரும் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு அருகில் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கத்தை இனந்தெரியாத விசமிகள் இடித்து உடைத்துள்ளனர்.

சிவலிங்கம் உடைக்கப்பட்ட சம்பவத்தால் சைவ மக்கள் நொந்து போயிருக்கின்ற நேரத்தில், மன்னாரில் திருக்கேதீஸ்வர ஆலயத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்ட சிவராத்திரி வளைவை கத்தோலிக்க சமயத்தவர்கள் சிலர் அடித்து உடைத்து தள்ளி விழுத்தி, சிவப்பரம்பொருளை காலால் மிதித்து உச்சமான மத வெறியைக் காட்டியுள்ளனர்.

இச்சம்பவம் கத்தோலிக்க மதகுரு ஒருவர் முன்னிலையில் நடந்தது எனும்போது நெஞ்சு வலித்துக் கொண்டது.

கத்தோலிக்க மதகுருமாருக்கு அந்தச் சமயம் சார்ந்தவர்களைவிட சைவ மக்களே அதீத மதிப்புக் கொடுத்து வந்துள்ளனர்.

தவிர, தத்தம் விழாக்களின்போதெல்லாம் கத்தோலிக்க மதகுருமாரை அழைத்து அவர்களுக்கு உரிய மதிப்பை வழங்குவதில் சைவ மக்கள் என்றும் பின்னிற்கவில்லை.

ஆனால் மன்னாரில் ஒரு கத்தோலிக்க மதகுரு தலைமை தாங்கி நின்று சிவராத்திரி வளைவை அடித்து கீழே விழுத்தி சிவப்பரம்பொருளின் உருவப்படத்தைக் காலால் மிதித்தமை ஜீரணிக்க முடியாத கொடுஞ் செயலாகும்.

தென்பகுதியில் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை; இலங்கையில் பௌத்தத்துக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கூற,

மன்னாரில் சிவராத்திரி வளைவை கத்தோலிக்க மக்கள் சிலர் உடைத்தபோது, ஒரு தமிழ் கத்தோலிக்க மதகுரு அதைப் பார்த்து நின்றார் என்றால், அதன் பொருள் என்ன என்பதை தமிழை நேசிக்கின்ற, விவிலியத்தைப் போதிக்கின்ற கத்தோலிக்க மதகுருமார்களே கூறவேண்டும்.

அந்நியர்களால் அழிக்கப்பட்ட; பாடல் பெற்ற திருக்கேதீச்சர தலத்தில் சிவராத்திரி தினத்தையொட்டி ஒரு வளைவை அமைப்பதற்குக்கூட சைவ சமயத்தவர்களால் முடியவில்லை எனும்போது சைவ சமயத்தை அழிப்பதற்கான சதித்திட்டம் முற்றிவிட்டது என்பது தெட்டத் தெளிவாகிறது.

சிவராத்திரி தினத்தையொட்டி ஒரு வளைவை வைத்ததற்கே இப்படி ஒரு அநியாயம் என்றால், வெசாக் பண்டிகையின்போது வட பகுதி முழுவதும் வெசாக் கூடுகளாலும் பௌத்த சமய வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்ட போதெல்லாம் அதை நீங்கள் தடுக்காதது ஏன்? அப்போது உங்கள் வீரம் எங்கே போனது.

தமிழர்கள் இலங்கையின் பூர்வீகக் குடிகள் என்று கூறும் அதேநேரம் இலங்கையின் ஆதிச்சமயமாகிய சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவனை காலால் மிதிக்கும் பெரும் கொடுமை மன்னாரில் நடக்கிறது என்றால்,

சைவ சமயத்தவர்களே! நீங்கள் சிவராத்திரியில் விழித்திருப்பதைவிட முழுப்போர்வை கொண்டு போர்த்தி காலை முடக்கி உறங்குவதையே சிவன் விரும்புவார்.

## அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவு 20க்கு இல்லை – ஹக்கீம்

அதிகாரத்தை பகிர்ந்து தீர்வுகளை நோக்கி பயணிக்க ஏதேனும் திருத்தங்கள் கொண்டு வந்தால் அதற்கு நாம்முழுமையான ஆதரவை வழங்குவோம். ஆனால் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு இது சரியான தருணமல்ல என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்கும் 20 ஆம் திருத்தச் சட்டம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நிறைவேற்று அதிகாரத்தை நீக்கும் சரியான தருணம் இது அல்ல, இப்போது ஜனாதிபதித் தேர்தல் ஒன்றுக்கான காலகட்டம் நிலவி வருகின்ற நிலையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவது என்பது சரியானதல்ல என்றார். (மு-3)



காரைநகர் சிவன் கோவில்- திண்ணபுரம்
மகா சிவராத்திரி விழா-2019
"அருள் அளித்தான்
எ(ன்)ம் இருள் நீக்கினான்"

நாற்புறமும் தென்றலடிக்கும் நல்ல இடம்
பல நல்லோர் பாதம் பணிந்த இடம்
இன்றுவரை இணையில்லா இன்ப இடம்
இறைநாமம் ஒன்றே சொல்லும் இடம்
பக்தர் முதல் ஞானிகள் வரை தொழுத இடம்
பாரினில் என்னை மீண்டும் உயிர்ப்பித்த இடம்
என் வாழ்வு முடிவில் நல் வாழ்வு தந்த முதலிடம்
நான் நடமாடக் காரணமாக இறைவன் இடம்
இருளில் ஒளியாய் வந்து அமைதி தந்த இடம்
ஆன்மாக்கள் லயிக்கும் ஆனந்த சிவராத்திரிக்கும் இடம்
அபிசேகம் ஆராதனைகளோடு கிருபையோடு
இறை அருள் அளித்தான் எ(ன்)ம் இருள் நீக்கினான்

"மீனாட்சி பவனம்"
வேதர் அடைப்பு, காரைநகர்.

காரை.எஸ்.கெங்கா
B.A(S.L), (Dip.in.offi-Admit)

## பயங்கரவாதிகள் முகாம் மீது இந்திய விமானப்படை தாக்கியது உண்மை

### மசூத் அசார் தம்பி ஒப்புதல்

(லாகூர்)

இந்திய விமானப்படை ஜெய்ஷ்-இ-முகமது இயக்கத்தின் பயிற்சி முகாம் மீது தாக்குதல் நடத்தியது உண்மை என்று மசூத் அசார் தம்பி தெரிவித்துள்ளார்.

இந்திய ராணுவ வீரர்கள மீது ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாதி நடத்திய தற்கொலை தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் பாகிஸ்தானில் புகுந்து பயங்கரவாதிகள் முகாம்கள் மீது இந்தய விமானப்படை குண்டு வீசி தாக்கியது. அதை பாகிஸ்தான் மறுத்தது.

ஆனால் இந்திய விமானப்படை குண்டுவீசி தாக்கியது உண்மை என ஜெய்ஷ்-இ-முகமது தீவிரவாத அமைப்பின் தலைவர் மசூத் அசாரின் இளைய தம்பி மவுலானா அம்மார் ஒப்புக் கொண்டுள்ளார்.

இந்திய விமானப்படை குண்டு வீசித் தாக்கிய மறு நாள் சமூக வலைத்தளங்களில் ஒரு காணொளி பரவியது

அது மவுலானா அம்மார், பெஷாவரில் மதகுருமார்கள் மத்தியில் பேசியது.

அதில, இந்திய விமானப் படை மலைகளை தாண்டி பாகிஸ்தானுக்குள் புகுந்து 'மர்கஷ்' (மதம் சம்பந்தப் பட்ட கல்வி பயிலும் கூடம்) மீது தாக்கி விட்டு சென்றுள்ளனர். அதற்கு அவர்கள் பதில் சொல்லியாக வேண்டும்.

ஜெய்ஷ்-இ-முகமது அமைப்பின் பாதுகாப்பான இடம் மற்றும் தலைமை அலுவலகம் மீது இந்திய விமானப் படை குண்டு வீசி தாக்கவில்லை.

மத சம்பந்தமாக மாணவர்கள் பயிலும் கல்விக் கூடத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

## சோமாலியாவில் தற்கொலைத்தாக்குதல் பலி எண்ணிக்கை 36 ஆக உயர்வு

(மொகடிஷு)

சோமாலிய தலைநகர் மொகடிஷுவில் கடந்த வெள்ளிக்கிழமை பயங்கரவாதிகள் நடத்திய தற்கொலை கார்க் குண்டு தாக்குதலில், உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

15 பேர் உயிரிழந்துள்ளதாக நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் 36 மரணங்கள் பதிவாகியுள்ளன.

உயிரிழந்தவர்களில்பெரும்பாலானவர்கள் பொதுமக்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட வர்களில் பலர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்தனர். அவர்கள் மீட்கப்பட்டு அவசர சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

சோமாலியா நாட்டில் ஆளும் அரசுக்கெதிராக அல-ஷபாப் அமைப்பு தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த குழுவானது பல வருடங்களாக நாட்டின் பல்வேறு இடங்களில் பாரியளவில் தாக்குதல்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மணிவரை யாழ். பிரதேசத்தில் மணற்காடு. வலிகண்டி, மணற்காடு நீர்ப்பாசன சபை ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் பட்டாணிச்சூர் கிராமம், ஆண்டியப் புளியங்குளம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில நானாட்டான் ஆகிய பிரதேசங்களிலும், மின்தடைப்படும்.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### வெற்றி மேல் வெற்றி



தேவையில்லாத ஆசை என்றால் அமைதியாகச் சிந்திப்பது நல்லது. "இந்த ஆசை எழுந்ததே தவறு. இதை நிறைவு செய்தால் பல துன்பங்கள் வருமே எனவே இந்த ஆசையை நான் விட்டு விடுவேன்" என்று தெளிவாக எண்ணி, தவம் இயற்றிச் சங்கற்பம் மேற்கொள்ள வேண்டும். பின்னொருகால் இந்த ஆசை மனதில் தோன்றினாலும், முன்பே எடுத்து வைத்திருக்கும் முடிவும் கூடவே வந்து, அந்த ஆசையானது காலப் போக்கில் மறையும்.

அதே போல் தேவை என்று கண்டவிடத்தும், நிறைவு செய்ய வசதி இல்லை என்றாலும் முன் சொன்னது போலவே ஆராய்ச்சியும் சங்கற்பமும் கூட பின் விளைவு தீங்கு தருவதென்றால், அந்த ஆசையையும் முன் சொன்ன அதே முறையில் சமம் செய்து கொள்ள வேண்டியது தான். நிறைவும் செய்யாமல் மாற்றவும் செய்யாமல் ஆசைகளை மனதில் சுமந்து கொண்டிருந்தால் மன அமைதி கெடும். உடலில் குன்மம் முதலிய நோய்கள் உண்டாகும்.

திறமை மழுங்கி, தோல்வி ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். ஆசை, திட்டமிடல், செயல் (desire, approach, achievement) மூன்றும் சரியாக இருந்தால் வெற்றி மேல் வெற்றி வந்து கொண்டேயிருக்கும்.

# கப்டன் சோமசுந்தரம் வெற்றிக்கிண்ணம் ஜொலிஸ்ரார் அணி வெற்றி




கப்டன் சோமசுந்தரம் வெற்றிக்கிண்ணத்திற்காக யாழ். இந்துக் கல்லூரி லண்டன் பழைய மாணவர் சங்கக் கிளையின் ஆதரவுடன் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் முதலாவது ஆண்டாக நடத்தும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் 3 ஆவது தகுதிகாண் போட்டியில் ஜொலிஸ்ரார் அணியினர் கிறாஸ் கொப்பர்ஸ் அணியினரை 69 ஓட்டங்களால் வெற்றி பெற்று தமது முதலாவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் அணியினர் 20 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 197 ஓட்டங்களைப் பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் சந்தோஸ்-15, மணி வண்ணன்-46, அருண்-40, பிரசன்னா-31, வாமணன்- 11, கிருசோபன் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் சரண் ராஜ்-03, ஜனன்தன், அஜித், கோகுலன் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிறாஸ்கொப்பர்ஸ் அணி 16 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் அஜித்-17, சாரங்கன்-19, வரலக்ஸன்-10, சரண்ராஜ்-39, ஜனன்தன்-11 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் கோபிராம்-03, கிருசோபன்-02, உமேஸ், பிரசன்னா, சாருஜன் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 5.66 புள்ளிகளையும் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக்கழகம் 1.88 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. (க)

# அரையிறுதிக்குள் நுழைந்த வதிரி டயமன்ஸ் அணி

யாழ்ப்பாணம் லீக்கின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, யாழ்.மாவட்டத்திலுள்ள லீக்குகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தி வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் முதற்சுற்று ஆட்டங்கள் தற்போது லீக் முறையில் நடைபெற்று காலிறுதியாட்டங்களுக்கு அணிகள் உள்நுழைந்துள்ளன.

இதில் இரண்டாவது காலிறுதியாட்டம் கடந்த 2 ஆம் திகதி இரவு நடைபெற்றது. இதில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி. முதல்பாதியாட்டம் முடிவில் இரண்டு அணிகளும் தலா 2 கோல்களைப் பெற்றிருந்தன.

இரண்டாவது பாதியாட்டத்தில் சென்.மேரிஸ் அணிக்கு அடுத்தடுத்து இரண்டு வாய்ப்புக்கள் கிடைத்தன. இரண்டையும் அவ்வணியினர் வெளியில் அடித்தனர். ஆட்டம் முடிவடைய சில நிமிடங்கள் இருக்க வதிரி டயமன்ஸ் அணியின் பிறேம்குமார் தனது அணிக்கான வெற்றிக் கோலை அடித்து. அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார்.

முடிவில் வதிரி டயமன்ஸ் அணி. 03:02 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றது. (க-26)



கிளிநொச்சி சாந்தபுரம் கலைமகள் விளையாட்டுக்கழக உறுப்பினர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனுக்குமிடையிலான சந்திப்பு அண்மயில் நடைபெற்றது. நிகழ்வில் விளையாட்டுக்கழகத்திற்கு தேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது. (க)

# திக்கம் இளைஞரை வென்று
## அடுத்த சுற்றுக்கு தெரிவானது றேஞ்சஸ்



கம்பர்மலை கலைவாணி சனசமூகநிலையத்தின் வைரவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டப் போட்டியில் றேஞ்சஸ் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதியது.

விறுவிறுப்பாக நடந்த போட்டியில் றேஞ்சஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தெரிவாகியது.

றேஞ்சஸ் அணி சார்பாக சுஜாஸ் 2 கோல்களையும் ஆர்த்தி ஒரு கோலையும் அடித்தனர்.

போட்டியின் ஆட்டநாயகனாக றேஞ்சஸ் அணியின் நட்சத்திர வீரர் சுஜாஸ் தெரிவு செய்யப்பட்டார்.(க)

# விளையாட்டுக்கழக மைதானத்தை பார்வையிட்டார் டக்ளஸ் தேவானந்தா

இளைஞர்.யுவதிகளின் விளையாட்டுத்துறை ஆர்வத்தை மேம்படுத்தும் முயற்சியாக மானிப்பாய் கட்டுடை பகுதியில் உள்ள Big Star விளையாட்டுக் கழகத்திற்கான விளையாட்டு மைதானத்தை அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சிகளை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளார்.

குறித்த விளையாட்டுக் கழகத் தின் நிர்வாகத்தினர் மற்றும் அப்பகுதி பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க அப்பகுதிக்கு விஜயம் செய்த டக்ளஸ் தேவானந்தா விளையாட்டுக்கழகத்தின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடியதுடன் விளையாட்டு மைதானம் அமைப்பதற் காக தெரிவு செய்யப்பட்ட உத்தேச இடங்களையும் பார்வையிட்டார். (க)



அன்பு வாசகர்களே!

உங்கள் பிரதேச விளையாட்டுச் செய்திகளை Valampurisp@gmail.com அல்லது 076 636 3378 என்னும் Viber இலக்கத்துக்கு அனுப்பி வையுங்கள்.

உங்களை உலகறியச் செய்ய நாம் தயார்



மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலைக்கு வெளிநாட்டில் இருந்து வந்த குழு கொழும்பிலிருந்து சைக்கிள் பவனியாக வருகை தந்து நோயாளர் காவு வண்டி ஒன்றைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மானிப்பாய் கிறீன் மெமோறியல் வைத்தியசாலையில் நடைபெற்றது. (க- 272)

## பலாலியில் சர்வதேச விமான...

இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமது ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட அம்பாந்தோட்டை - மத்தள சர்வதேச விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய முடியாத அரசாங்கத்தினால், மற்றுமொரு சர்வதேச விமான நிலையத்தை நிறுவுவதற்கான திறன் கிடையாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், 1988 - 1989 காலப்பகுதியில் நாட்டிற்குள் ஏற்பட்ட வன்முறையுடனான காலப்பகுதியொன்று மீண்டும் நாட்டில் உருவாகி வருவதாக மகிந்த ராஜ பக்ஷ குறிப்பிட்டுள்ளார். நாட்டில் தற்போது பல கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, யுத்தம் நிறைவுக்கு கொண்டு வந்த தருணம் முதலே, நாட்டில் நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டமை மாத்திரமன்றி, தெற்கு மற்றும் வடக்கு மக்களுக்கு எவ்வித அச்சமும், சந்தேகமும் இன்றி வாழ்வதற்கான சூழலை, தமது அரசாங்கம் அன்றே ஏற்படுத்திக் கொடுத்ததாகவும் அவர் இதன்போது நினைவூட்டியுள்ளார்.

இலங்கை மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தை அடிப்படையாகக்கொண்டே, தமது அரசாங்கம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்ததாகவும் மேலும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் வர்த்தகர்களுக்கு நன்மை கிடைக்கும் என்ற எண்ணம் சிலருக்கு காணப்படுகின்ற போதிலும், அது இன்று கனவாகியுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதியும், எதிர்க்கட்சித் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார். (மு-3)

## வெள்ளை நிற வான் கூட...

அந்த காலப்பகுதியில் வெள்ளை நிறத்தில் ஒரு வான் கூட எம்மிடமில்லை என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

உடுநுவர பிரதேசத்தில் எலிய அமைப்பினர் ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பயங்கரவாத யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவர வேண்டிய கட்டாயம் எமக்கு காணப்பட்டது. மறுபுறம் பாதாள குழுவினரது செயற்பாடுகளும் அதிகரித்த வண்ணமே காணப்பட்டது.

இந்நிலையில் சர்வதேச நாடுகள் எவ்வாறு பயங்கரவாத யுத்தத்திற்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுத்தனவோ அதனையே நாங்களும் முன்னெடுத்தோம். இதன் பொழுது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எம் மீது முன்வைக்கப்பட்டது.

வெள்ளை வான் கலாசாரம் என்பது பயங்கரவாத செயற்பாடுகளின் போது முன்னெடுக்கப்பட்டது என்று குறிப்பிடப்படுகின்றது.

இக்காலக்கட்டத்தில் எங்களிடம் வெள்ளை நிறத்திலான வான்கள் ஏதும் காணப்படவில்லை என்றார் கோத்தபாய. (மு-3)

## 11 தமிழர் கடத்தல் வழக்கு...

யில் நடத்தப்படாமல் சிறப்பு தீர்ப்பாயம் முன்னிலையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

2008-09 காலகட்டத்தில் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றப்புலனாய்வுத் திணைக்கள கூட்டுக் கொள்ளை குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த டி சில்வா தலைமையிலான குழு முன்னெடுத்து வருகிறது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் முன்னாள் கடற்படைத் தளபதியும் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியுமான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் கரன்னகொட, கொமடோர் டி.கே.பி.தசநாயக்க, நேவி சம்பத் உள்ளிட்ட 15க்கு மேற்பட்ட கடற்படையினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கை மேல் நீதிமன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய சிறப்பு தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) முன்னிலையில் நடத்த சட்ட மா அதிபர் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது" என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இந்த வழக்குத் தொடர்பாக அட்மிரல் கரன்னகொடவிடம், வாக்குமூலம் ஒன்றைப் பெற்று கொள்ளும், குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

அவர் தனது முகவரிகளில் வசிக்காமல் தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் வகையில் அட்மிரல் கரன்னகொட, உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனு கடந்த வாரம் உயர் நீதிமன்ற அமர்வால் விசாரணக்கு எடுக்கப்பட்டது.

அதன்போது பிரதிவாதியான சட்ட மா அதிபர் சார்பில் முன்னிலையான சொலிஸ்டார் ஜெனரல், அட்மிரல் கரன்னகொட கைது செய்யப்படமாட்டார் என உறுதியாகத் தெரிவிக்க முடியாது என்று சமர்ப்பணம் செய்தார். (ம-3)

## கத்தோலிக்க மதகுரு முன்னி...



மன்னார் திருக்கேதீஸ்வரத்துக்கு செல்லும் வீதியில் மாந்தைப் பகுதியில் திருக்கேதீஸ்வர ஆலயத்தை பிரதிபலிக்கும் அலங்கார வளைவு ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தது.

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நேற்றையதினம் குறித்த அலங்கார வளைவை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந் நிலையில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் சகிதம் அப் பகுதிக்கு வந்த சிலர் குறித்த சிவராத்திரி வளைவை அடித்து உடைத்து பிடுங்கி எறிந்ததுடன் அந்த வளைவில் இருந்த சிவ சின்னங்களையும் காலால் மிதித்தனர். இதனால் அப்பகுதியில் சில மணி நேரம் பதற்றம் நிலவியது. (மு-285,250)

## புதிய அரசி...

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற பெண்கள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ்த் தேசத்திற்குள் இருக்கும் அனைத்து மக்களும் முழுமையாக விடுதலை அடையக்கூடிய வகையில், நாம் எமது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்பதே எமது குறிக்கோளாக இருந்தது.

சிங்கள தேசத்தின் எமது இனத்திற்கெதிரான அடக்குமுறைக்கு எதிராகப் போராடுவதென்பது எமது செயற்பாடுகளில் ஒரு அங்கம் மட்டுமே.

இந்தத்தீவில் ஒரு இனப்பிரச்சினை இருக்கின்றதென்பதை சர்வதேசத்திற்குச் சொல்லக்கூடிய சூழல் நாம் இந்த ஒற்றையாட்சி அரசியலமைப்புக்களை நிராகரித்து வந்ததால்தான் அமைந்தது.

இந்நிலையிலே கொண்டுவரப் படவிருக்கும் புதிய அரசியல் அமைப்புக்கான முயற்சியை தமிழ்த்தேசம் எதிர்க்க வேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (மு-3)

## மட்டுவில் தெற்...

மூலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மட்டுவில் தெற்கைச் சேர்ந்த 53 வயதான த.பாஸ்கரன், 51 வயதான பா.ஜெகதீஸ்வரி மற்றும் 15வயதான பா.சலூசா ஆகியோரே வாள் வெட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-10,30)

## மகிந்தவின் படம் போதும்...

அத்துடன் அடுத்த தேர்தலில் கோத்தபாய ராஜபக்ஷவையே ஜனாதிபதியாக்குவோம்; அதற்கு மகிந்தவின் புகைப்படம் போதும். வேறு தலைமைத்துவம் தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

நிகழ்கால அரசியல் செயற்பாடுகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்.

வரவு செலவு திட்டத்தை வெற்றி கொள்வதில் அரசாங்கம் தடுமாறுகின்றது. மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தக்கவைக்க முடியாத நிலைமை உருவாகியுள்ளது. அதேபோல் அடுத்த தேர்தல்களை சந்திக்கவும் ஐக்கிய தேசிய கட்சி தடுமாறிவருகின்றது. இந்நிலையில் அதிகாரத்தை பகிரவும், நிறைவேற்று அதிகாரத்தை நீக்கவும் முயற்சிகள் எடுத்து வருகின்றனர்.

வடக்கு மக்கள் வாழ்வாதார பிரச்சினையை கேட்கின்றனர். கல்வியை கேட்கின்றனர், அபிவிருத்தியை கேட்கின்றனர், பாடசாலை, வீடு உள்ளிட்ட அடிப்படை தேவைகளை பெற்றுத்தரக்கேட்கின்றனர். ஆனால் சம்பந்தன் சமஷ்டி தான் வேண்டும் என நிற்கின்றார். அதேபோல் எதிர்க்கட்சி தலைவரின் உத்தியோகபூர்வ இல்லமும் இரண்டு வாகனமும் சம்பந்தனுக்கு வேண்டுமாம். மக்களின் தேவைகளுக்கு முன்னர் தனக்கான சலுகைகளை பெற்றுக்கொள்ளவே சம்பந்தன் முயற்சிக்கின்றார். இது தான் தமிழ் தலைமைகளின் நிலைமை என்றார். (மு-3)

## நாளைய பட்...

அரச துறை பணியாளர்களின் சம்பள முரண்பாடுகளைச் சீர் செய்வதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கடந்த ஆண்டு நியமிக்கப்பட்ட சம்பள ஆணைக் குழுவின் பரிந்துரைக்கு அமைய அரச ஊழியர்களுக்கான மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் இரான் விக்ரமரட்ண தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் மங்கள சமரவீர, நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்றில் முன்வைக்கிறார்.

இதன்போதே அரச துறை ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவு அதிகரிப்புத் தொடர்பான முன்மொழிவை நிதி அமைச்சர் முன்வைப்பார் என்று இரான் விக்ரமரட்ண தெரிவித்தார்,

மேலும் அரச துறை அலுவலர்களுக்கு வழங்கப்பட்டு இடைநிறுத்தப்பட்ட வாகன இறக்குமதித் தீர்வை விலக்கு அனுமதிப்பத்திரம் இரண்டு மாதங்களுக்குள் விடுவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (மு-3)

## தமிழ் மக்களுக்கு நீதி கேட்டு...

ஈழத் தமிழர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியினை கோரி எதிர்வரும் 16 ஆம் திகதி முன்னெடுக்கப்படும் மக்கள் எழுச்சிப் போராட்டத்தில் ஒன்றிணையுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில்,

ஈழத் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் என்பவை இலங்கையில் நீண்ட காலமாக கட்டமைக்கப்பட்ட ரீதியில் இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அத்தகைய அடக்குமுறைகள் இலங்கைத்தீவில் திட்டமிடப்பட்ட ரீதியிலான தமிழ் மக்களிற்கு எதிரான இனச்சுத்திகரிப்பாகவே உள்ளது.

அத்தகைய இனச்சுத்திகரிப்பின் உச்சமே இறுதிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்று குவிக்கப்பட்டும், காணாமலாக்கப்பட்டும் ஈழத் தமிழர்களிற்கு எதிராக இடம்பெற்ற இன அழிப்பு, போர்க்குற்ற மீறல்கள், மனித உரிமைச் சட்ட மற்றும் மனிதாபிமானச் சட்ட மீறல்களுக்குரிய பரிகார நீதியினை சர்வதேசம் தமிழ் மக்களிற்கு பெற்றுத்தர நாம் விழிப்போடு மக்கள் எழுச்சிப் போராட்டங்களினை முன்னெடுக்க வேண்டும்.

ஜெனிவா மனித உரிமைகள் பேரவையினால் 2015இல் முன்மொழியப்பட்ட நிலைமாறு கால நீதிப் பொறிமுறைக்கு ஊடான உள்ளக பொறிமுறைகளினையே. இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற தவறிய நிலையிலும் ஏற்கனவே கால அவகாசங்கள் வழங்கப்பட்ட நிலையிலும் மீண்டும் கால அவகாசமே வழங்கப்படவுள்ளது. இதனை வெறும் கண்துடைப்பு நாடகமாகவே நாம் நோக்க வேண்டியுள்ளது.

இந்நிலையில் ஈழத் தமிழர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளிற்கு நீதியினை கோரி மக்கள் எழுச்சிப் போராட்டம் ஒன்றினை எதிர்வரும் 16ஆம் திகதி முன்னெடுக்க தீர்மானித்துள்ளோம்.

எனவே நீதி கோரி இடம்பெற இருக்கும் மக்கள் எழுச்சிப் பேரணிக்கு தமிழ் பேசும் மக்களினை அலைகடலென திரண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒன்று கூடுமாறு அழைக்கிறோம். தமிழ் மக்களினை அணிதிரட்ட ஒத்துழைப்பு வழங்குமாறு பொது அமைப்புகள் மற்றும் மதகுரு மாரை வேண்டிக்கொள்கிறோம். (மு-9,10)


கொவிசெத
திகதி 2019.03.03
சீட்டிழுப்பு இலக்கம் 2052
ஆங்கில எழுத்து L
வெல்லப்பட்ட இலக்கங்கள் 45 46 53 64
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி 2019-03-03
சீட்டிழுப்பு இலக்கம் 122
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 20 49 67 74
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2019/03/03
சீட்டிழுப்பு இலக்கம் 3867
ஆங்கில எழுத்து K
வெல்லப்பட்ட இலக்கங்கள் 5 6 7 4 8 1
தேசிய லொத்தர் சபை

நீரோகா
திகதி 2019/03/03
சீட்டிழுப்பு இலக்கம் 519
லக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 06 11 34 50 59
தேசிய லொத்தர் சபை

## மட்டுவில் தெற்கில் வாள்வெட்டு...

மகள் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, இரவு 10.30 மணியளவில் மூன்று மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாத வாள்வெட்டுக் கும்பல் குறித்த வீட்டினுள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த குடும் பத்தலைவர், குடும்பத் தலைவி மற்றும் அவர்களுடைய 15வயதுமகளை யும் கடுமையாகத் தாக்கியதுடன் வாள்களினால் சரமாரியாக வெட்டிக் காயப் படுத்தி உள்ளது.

இதில் குடும்பத் தலைவருக்கு நெஞ்சு மற்றும் கால் பகுதியிலும் அவரதுமனைவிக்கு வயிற்றிலும் மற்றும் மகளுக்கு கையிலும் பலமாக வெட்டுக்காயம் ஏற்பட்டுள்ளது. வீட்டில் இருந்தவர்களை வெட்டிக் காயப்படுத்திய அதேவேளையில் வீட்டின் முன் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளை தீக்கிரையாக்கியுள்ளனர். மேலும் வீட்டினுள் காணப்பட்ட தொலைக் காட்சி பெட்டி மற்றும் கதிரை களையும் குறித்த வாள்வெட்டுக் கும்பல்சேதமாக்கி யுள்ளது. காய மடைந்த மூவரும் உடனடியாக 1990 அம்புலன்ஸ் 23☛


CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை



- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413
(C-5668)

A/L 2019 வர்த்தகப்பிரிவு மாணவர்களுக்கான
தொடர் கருத்தரங்கு [புதிய/பழைய பாடத்திட்டம்]

| வணிகக்கல்வி | கணக்கீடு |
|---|---|
| MR.S.K.பாலசபேஷ் B.Com(H.N.Dip-in-Acc) Dip-in-Edu (ousl) | MR.K.BALAKAJEN B.Com(Jaf), H.N.Dip-in-Acc, Dip-in-Edu (ousl), M.Com (Hons) |

இடம்: NEC கல்வி நிறுவனம் (பிரதான மண்டபம்)

| | |
|---|---|
| ஒவ்வொரு புதனும் 2.30 - 5.45 PM | ஒவ்வொரு வெள்ளியும் 2.30 - 5.45 PM |
| ஆரம்பம்: 06.03.2019 புதன் 2.30 PM | ஆரம்பம்: 08.03.2019 வெள்ளி 2.30 PM |

- கருத்தரங்கானது 100 மணித்தியாலங்கள் நடைபெறும்
- இக்கருத்தரங்குகளில் பங்குபற்றி A/L 2018 இல் Rank 01 உட்பட முன்னணி பெறுபேறுகள்
- வெளி மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளலாம்

தொடர்புகளுக்கு: 0776740450, 0703396696
(7711)

விரைவு பொதிகள் சேவை
விசேட விலை குறைப்பு



UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg
(நிபந்தனைகளுக்குட்பட்டது)
DELIVERY IN 3-5 DAYS
0768226240
V2 TRAVELS
- மானிப்பாய்
- யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - சாவகச்சேரி
- நெல்லியடி - பருத்தித்துறை - வல்வெட்டித்துறை
(C-6632)

பணியாளர்கள் தேவை
வடிவமைப்பாளர்
PHOTO SHOP
CORELDRAW
கிறபிக் டிசைனர்ஸ் பிரகபி பிறிண்டேர்ஸ்
இல. 1219, கே. கே. எஸ் வீதி, பூநாறிமடம்.
தெ.பே: 076 140 4242
MUG, BANNER, OFFSET, SCREEN PRINTING
(C-5683)

Personal Group Class
இரசாயனவியல் (A/L) 2019, 2020, 2021, Repeat Batch கடந்த கால Past Papers கற்பிக்கப்படும். சி.அங்கதன் B.Sc (Chem. Spl)
தொடர்பு: 0771901245
(7728)



## பிறந்து...

50 நாளான குழந்தையே இவ்வாறு சளி காரணமாக உயிரிழந்துள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மு-10)


YOSSO வின் நிதி அனுசரணையுடன்
இலவச ஆங்கில கற்கைநெறி...
O/L, A/L பரீட்சை எழுதுவோருக்கும் ஆர்வமுள்ளோருக்கும்.
English Grammar இன் பரீட்சைக்கு அவசியமான
Tenses Summary Comprehension Active &Passive
Voices Direct & Indirect Speeches 50 மாணவர்களுக்கு மட்டுமே!
வார நாட்கள்/வார இறுதி நாட்கள்
05.03.2019 அன்று 3.30 மணிக்கு அனுமதிக் கட்டணம் மட்டுமே!
British College of Higher Studies
15,Stanley Road,Sirambiyady lane,
Jaffna. (லங்கா சதொச மேல் மாடி)
021 222 4550
(C-6681)


## நன்றி நவிலலும் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

03.02.2019 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவர்



### அமரர் நாகமணி கார்த்திகேசு

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எமது ஆற்றொணாத்துயரில் பகிர்ந்து அனுதாபங்களைத் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், நாளை (05.03.2019) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

8ஆம் வட்டாரம் மந்துவில், புதுக்குடியிருப்பு.

தகவல்: குடும்பத்தினர் 077 672 4555

(C-5677)


தேவை
Dynamic Organization உலகமெங்கும் வியாபித்துள்ள மலேசிய நிறுவனம் இலங்கையில் ஆரம்பிக்கவுள்ள 6 புதிய கிளைகளுக்கு Manager, Ass Manager, Office Staff போன்ற தகைமைகளுக்கு புதியவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.
வயதெல்லை 18-30, O/L, A/L எழுதியவர்களா? நீங்கள் பயிற்சிக் காலத்தில் உங்கள் திறமைகளுக்கு ஏற்றவாறு 12,000 - 17,500 பயிற்சியின் பின் EPF, ETF உடன் 45,000/= நிரந்தர தொழில் மற்றும் வெளிநாட்டு உல்லாச வசதிகளும் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு - 077 552 8534
(7739)

புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 2019 March 5th hrs
Main Office: Weekday weekend 9.00 AM to 12.30 PM
➢Spoken/Business English with Soft Skill & Career Guidance.
காரியாலய, வியாபார, ஆங்கிலம், நுண்திறனும் தொழில் வழிகாட்டியும்
➢Ms Office- ICT, equivalent to NVQ 3
100% வரை புலமைப்பரிசில் வழங்கப்படும் இப்போதே பதிவுசெய்யவும்
For admissions please contact the Director 0776505580 or Chairman. 0768525406 NTI Main Office : Northern Technical Institute PVT 121637 Jaffna YMCA building
107, 2/1, Kandy Rd, Classes at Regional Office ; From 03 to 06PM or 02 to 05PM

| Regional Office I | Regional Office II | Regional Office III |
|---|---|---|
| சனசமூக நிலையம் பாண்டவெட்டை சுழிபுரம் 077 009 5294 | அறவளிக்குழு No 29 கண்டி வீதி, நுணாவில். சாவகச்சேரி 076 690 0867 | Navaly YMCA, Prasad Rd , Navaly. 077 133 1526 |

(7702)


யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா

எதிர்வரும் 05.03.2019ஆம் திகதி நடைபெறவிருந்த மேற்படி எமது பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் 06.03.2019ஆம் திகதி புதன் கிழமை காலை 8.00 மணிக்கு நடைபெறும் என்பதையும் மாணவர்கள் அனைவரும் காலை 7.00 மணிக்குப் பிந்தாமல் வருகை தருவதுடன் இந் நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அதிபர் -
யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
கொக்குவில்.
(C-5680)

## உரும்பிரா...

அண்மையாக இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம்தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

இளைஞர் ஒருவர் தலைக்கவசம் அற்ற நிலையில் வேகமாக கோண்டாவில்பக்கமாக இருந்து உரும்பிராய் சந்தி நோக்கி பயணித்த நிலையில் பொலிஸார் உரும்பிராய் சந்திக்கு அண்மையாக வீதிச் சோதனைக்காக குறித்த இளைஞனை நிறுத்த பணித்த போதும் நில்லாது அதிவேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்திய போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதிக்கு அருகில் இருந்த வீதி சமிக்ஞை கம்பத்துடன்மோதுண்டு விபத்துக் குள்ளாகியுள்ளது. இதனால் இந்த சமிக்ஞை கம்பம் உடைந்துள்ளது.

இதன்போது படுகாயமடைந்த இளைஞன் உடனடியாக வீதியால் சென்றவர்களால் மீட்கப்பட்டு யாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட கோப்பாய்பொலிஸார் விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளை மீட்டு பொலிஸ் நிலையம் எடுத்து சென்றுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (மு-10,87)


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
- ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கன பொதிகள் சேவை.
- கடலுணவு, இறைச்சி, எண்ணை வகை, மருந்துப் பொருட்கள், பழ வகைகள்,
- பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்
10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3536
நெல்லியடியில் - இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் - இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
(C-5665)


இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.